பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 25 வியாழக்கிழமை (09-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:44

## கரும்புலிகள் படையணி கலைக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியின் விருப்பம் அதுவே என்கிறார் ஹரிம் பீரிஸ்

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படைப்பிரிவினர் கலைக்கப்பட வேண்டுமென ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இராணுவத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் இரகசிய பாதுகாப்புப் பிரிவு அரசால் மூடப்பட்டுள்ளது. எனவே, புலிகளின் கரும்புலிகள் படையணியும் கலைக்கப்படவேண்டும் என ஜனாதிபதி கருதுகிறார்.

கரும்புலிகள் விடயத்தை ஜனாதிபதி மிக முக்கிய பிரச்சினையாகக் கருதுகிறார்.

சமாதானத்தில் விடுதலைப் புலிகள் உண்மையில் உறுதிப்பாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் இருந்தால் தற்கொலைப் படைப்பிரிவான கரும்புலிகள் படையணியைப் புலிகள் கலைக்க வேண்டும்.

புலிகளுடன் அரசு உறவு வைத்துள்ளதாயின் பொ.ஐ.முன்னணி ஜே.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகளைக் கலைக்குமாறு ஜனாதிபதி கேட்பது அபத்தம்

### தாய்லாந்தில் பாலசிங்கம் தெரிவிப்பு

நொக்கம் பத்தொம்,ஜன.9

அமைதித் தீர்வின்பால் தங்களுக்கு உள்ள நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் புலிகள் தங்களது கரும்புலிகள் படைப்பிரிவை கலைக்கவேண்டும் என்று கோரும் ஜனாதிபதி குமாரதுங்க அம்மையார், அமைதித் தீர்வின்பால் தமக்குள்ள நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் முதல் முயற்சியாக வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றி, எமது மக்களை தமது தாயகத்தில குடியமர்த்தி சுதந்திரமாக வாழ அனுமதிக்கலாமே! அப்படி அவர் செய்தால் கரும்புலிகள் அமைப்பைக் கலைப்பது குறித்து நாம் பரிசீலிக்கலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம். கரும்புலிகள் அமைப்பைக் கலைக்கவேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க சார்பில் அவரது

(16ஆம் பக்கம் பார்க்க)

# விரைவாக மீள்குடியமர்த்தல்: அதற்கு விசேட திட்டம் தயார்!

### நேற்றைய பேச்சுக்களின்போது இறுதி வடிவம் பெற்றது
### புனர்வாழ்வு நிதியம் உலக வங்கியின் பொறுப்பில்

- தாய்லாந்திலிருந்து ந.வித்தியாதரன் -

**வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியிலுள்ள பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அப்பிரதேசங்களில் துரிதமாக மீளக்குடியமர்த்துவதற்கான விரைவுத் திட்டமொன்று அரசு - புலிகள் நான்காவது சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது உறுதியாக்கப்பட்டிருக்கின்றது.**

இன்று பிற்பகல் நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் நடைபெறவிருக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த வரைவுத் திட்டம் பற்றி அறிவிக்கப்படுமெனத் தெரிகின்றது.

நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் மூன்றாம் நாளான நேற்று மதிய அமர்வுவரை ஆலோசிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்ட மற்றும் விடயங்கள் வருமாறு:-

★ வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுப பணிக்கான நிதியத்தைக் கையாளும் பொறுப்பு உலகவங்கியிடம் ஒப்படைக்கப்படும். பலதரப்புகளில் இருந்தும் பல நாடுகளில் இருந்தும் இப்பணிக்காகக் கிடைக்கும் நிதியை உலக வங்கி திரட்டி, சேமித்து இந்நடவடிக்கைகளுக்கு செலவிட அதனை அனுப்பிவைக்கும்.

★ பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான காலவரையறையுடன் கூடிய துரிதத் திட்டவரைவு தயாரிக்கப்பட்டுவிட்டது. யாழ்நகர் போன்ற முக்கிய இடங்களில் பொதுக் கட்டடங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகளில் இருந்து படையினர் வெளியேறுவதற்கான உத்தேசகால அட்டவணையை ஜனவரி 31இற்கு முன்னர் சமர்ப்பிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு விரைவில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.9

குடாநாட்டில் செயற்படும் கல்வி வலயங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் என்று தெரியவருகிறது.

யாழ்ப்பாணம், தீவகம் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றப்படவுள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (16ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

அரசின் சமாதான முயற்சிகள் மற்றும் தனியார் மயப்படுத்தல் கொள்கைகள் என்பவற்றை எதிர்த்து கொழும்பில் நேற்று ஜே.வி.பி. ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

வெவ்வேறு இடங்களிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட நூற்றுக்கணக்கான ஜே.வி.பி. ஆதரவாளர்கள், கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஒன்றுசேர்ந்து அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

அரசு, விடுதலைப் புலிகள் மற்றும் நோர்வே ஆகிய மூன்று தரப்பினருக்கும் எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.(ஐ-4)

முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக

## ஹக்கீமைப் புலிகள் ஏற்கவில்லை – பாலா

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நாங்கள் (விடுதலைப் புலிகள்) முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றார் புலிகளின் அரசியல் ஆலோசகரும் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் புலிகள் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.

இரண்டாம் நாள் பேச்சுக்களின் முடிவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே பாலசிங்கம் இதைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

*கேள்வி:-* பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பு பங்குபற்றுவது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

*பாலா:-* முஸ்லிம் காங்கிரஸ் மூன்று, நான்கு பிரிவுகளாக துண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் குறித்து 2 மாத காலத்துக்குள் முடிவு

### பிரதமரின் செயலாளர் உறுதியளிப்பு

கொழும்பு,ஜன.9

வடபகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பாக அரசு விரைவில் தெளிவான ஒரு முடிவை அறிவிக்கும்.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு உறுதியளித்திருக்கிறார்.

நேற்று பிரதமரின் அலுவலகத்தில் தம்மைச் சந்தித்த காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளிடமே அவர் இந்த உறுதிமொழியை வெளியிட்டார்.

பிரதமரோடு இதுகுறித்து கலந்துரையாடி இன்னும் இரு மாத காலத்துக்குள் அரசின் முடிவு அறிவிக்கப்படும் என்றும் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வராமலே பாலா லண்டன் திரும்புவார்

நொக்கம் பத்தொம்,ஜன.9

தாய்லாந்தின நொக்கம் பத்தொம் நகரில் இடம்பெறும் நான்காவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் முடிவடைந்ததும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு மேற்கொள்ள இருந்த பயணம் கைவிடப்பட்டிருக்கிறது. என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. பேச்சு முடிந்ததும் தாய்லாந்தில் இருந்து பாலசிங்கம் வன்னிக்குச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், வன்னி உட்பட வடக்கில் பல இடங்களிலும் வைரஸ் காய்ச்சல் உட்பட பல தொற்றுநோய்கள் பரவியிருக்கும் சூழ்நிலையில் பாலசிங்கம் வன்னி செல்வது அவரது உடல்நலத்துக்கு உகந்தது அல்ல என்று அவரது மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியதை அடுத்தே அவரது வன்னிப்பயணம் கைவிடப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரம் செல்லும் வழியில் யாழ். கைதி தப்பி ஓட்டம்!

### மன்னகுளம் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து அனுராதபுரம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வழியில் கைதி ஒருவர் சிறைக் காவலர்களிடமிருந்து தப்பிவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஏ-9 வீதியில் மன்னகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தவேளை சிறைச்சாலை வாகனத்திலிருந்து இக்கைதி தப்பி ஓடினார் என்று கூறப்படுகிறது.

யாழ்.சிறைச்சாலைக்குச் சொந்தமான வாகனத்தில் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட மூன்று கைதிகளில் ஒருவரே தப்பிச்சென்றிருக்கிறார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜெயசீலன் என்ற கைதியே தப்பிஓடியிருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இவர், குறித்த தவணைகளில் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமைக்காக மீண்டும் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

சுன்னாகத்தில் கைதுசெய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தினால்

# இரு தரப்புப் பிரதிநிதிகள் மத்தியில் நிலவிய நட்புறவுச் சூழல் பின்னடைவு!

நொக்கம்பத்தொம்,ஜன.9

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான சிக்கலால் அரசு - புலிகள் நான்காவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் பாதிப்புறலாம் என்று நிலவிவந்த அச்சம் நீங்கிவிட்டது.

ஆனால், பேச்சுக்களில் பங்குபற்றும் இரு தரப்புக்களினதும் பிரதிநிதிகள் மத்தியில் நிலவிவந்த நட்புறவுச் சூழல் பின்னடைவு கண்டுள்ளது.

மோதல் தணிப்பு உபகுழு தொடர்பாக புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம், பகிரங்கமாக பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்ட அறிவிப்பே இரு தரப்பு பிரதிநிதிகள் இடையேயான சிநேகபூர்வ உறவு பாதிப்புறக் காரணமாகும்.

இந்தச் சுற்றுப் பேச்சுக்களில் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஒரு முடிவு எடுத்தேயாவது என்று கங்கணம் கட்டியிருந்தனர் புலிகள்.

ஆனால்,"சர்வதேச இராணுவ ஆலோசகர்களின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்று, உயர்பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைக்க இருக்கிறோம். அதுவரை பொறுங்கள்!" என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட சமாளிப்பு யோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட புலிகள், அரசின் அந்தத் திட்டத்துக்கு கால அவகாசம் வழங்கும் விதத்தில், இதுவிடயத்தில் தமது வற்புறுத்தலைத் தளர்த்திக்கொள்ள இணங்கினர்.

என்றாலும், மீள்குடியமர்வு தொடர்பான மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையை இராணுவத்தந்திரோபாய உத்திக்குப் பயன்படுத்தி, புலிகளின் ஆயுதக்களைவு மற்றும் கனரக ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்தல் போன்ற விடயங்களுக்கு நிபந்தனையாக மாற்றிய வடபகுதி இராணுவத் தளபதியின் போக்கு, தங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதை புலிகள், அரசுத் தரப்புக்கு பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டனர்.

இத்தகைய இராணுவத் தளபதியைத் தலைவராகக் கொண்ட மோதல் தணிவு உபகுழுவில் அவருடன் ஒன்றாக இருந்து பணியாற்றுவது தங்களால் இயலாத காரியம் என்பதையும் புலிகள் முதல், இரண்டாம் நாள பேச்சுக்களிலும் பட்டவர்த்தனமாக - தெளிவாக - தெரியப்படுத்தியிருந்தனர். எனினும், அரசுத்தரப்புப் பிரதிநிதிகள் அதைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. புலிகளின் நிலைப்பாட்டை மணந்து பிடித்துக்கொண்ட பத்திரிகையாளர்கள், இரண்டாம் நாள பேச்சுக்களின் காலை அமர்வுகளின் பின்னர் செய்தியாளர்களை அமைச்சர் பீரிஸ் சந்தித்தபோது நேரடியாக அவரிடம் அதுபற்றிக் கேட்டனர்.

மோதல் தணிவு உபகுழுவின் தேவை அவசியமற்றுப்போய்விட்டதா? அது தொடர்ந்து இயங்குமா? என றெல்லாம் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

பத்திரிகையாளர்களின் சந்தேகங்களுக்கு இடம்கொடுக்க விரும்பாத அமைச்சர் பீரிஸ், அந்த உபகுழு தொடர்ந்து இயங்கும், அதன் தொழிற்பாடு பாதிக்கப்படவில்லை என்று அடித்துக்கூறிவிட்டு நழுவிவிட்டார்.

ஆனால், மாலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த புலிகளின் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம், விடயத்தை வெளிப்படையாகப் போட்டு உடைத்தார். "அந்த உபகுழு செயலற்றுப்போய்விட்டது. அதை செயற்படுத்துவதில்லை என்று முடிவு செய்துவிட்டோம்!" - என்று அடித்துக் கூறினார் பாலசிங்கம்.

மதியத்தில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறிய கருத்துக்கு மாறாக தமது கருத்தை வெளியிட்ட அன்ரன் பாலசிங்கம், "உங்களுக்கு சந்தேகம் இருந்தால் பேராசிரியர் பீரிஸைக் கேளுங்கள்; அவர் நிலையைத் தெளிவுபடுத்துவார்!" என்று குறிப்பிட்டது பேராசிரியர் பீரிஸை மேலும் மாட்டிவைத்துவிட்டது.

புலிகள் தரப்பின் இந்தப் பகிரங்க அறிவிப்பு, அரசுத் தரப்பை விசனத்துக்கும் வேதனைக்கும் உள்ளாக்கி இருப்பதாகத் தெரிகின்றது.

அன்ரன் பாலசிங்கத்தின் அறிவிப்பால் பத்திரிகையாளர் முன்னிலையில் தான் பொய்யனாகிவிட்டதான கவலை பீரிஸுக்கு.

நேற்றுக்காலை பேச்சுக்கு முன்னர் அன்ரன் பாலசிங்கத்தைச் சமாளித்து, அவரது கருத்தை மாற்றவைப்பதற்கு உத்தியோகப்பற்றற்ற முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால், "கடும்போக்கு இராணுவத தளபதிகளைக் கொண்ட மோதல் தணிப்பு உபகுழுவை இயக்குவதில்லை என்பது எனது முடிவு அல்ல. புலிகளின் தலைமையின் - தலைவரின் - முடிவு. அதை நான் மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை!" என்று ஒரே போடாகப்போட்டு அந்த முயற்சியை முளையிலேயே வெட்டிவிட்டார் அன்ரன் பாலசிங்கம் என அறியவந்தது. இதனால் நேற்று முழுநாளும் பேச்சுகளின்போது அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் அதிருப்தியுற்று காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று மதிய அமர்வுக்குப் பின்னர் மீண்டும் செய்தியாளர்களை அமைச்சர் பீரிஸ் சந்தித்தபோது, இந்த விடயம் குறித்து திரும்பவும் செய்தியாளர்கள் அவரைத் துளைத்தெடுத்தனர்.

"மோதல் தணிப்பு உபகுழு தொடர்பான புலிகளின் அறிவிப்பு, இருதரப்பு இணக்கத்தோடு வந்ததல்ல. அது ஒருதலைப்பட்சமானது. இதுவிடயத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் கருத்துவேறுபாடு உள்ளது. "இத்தகைய பேச்சுகளில் இது போன்ற கருத்துவேறுபாடு எழுவது தவிர்க்கமுடியாதது. இவ்வாறு கருத்து வேறுபாடு ஏற்படமாட்டாது என்றால் சமாதானப் பேச்சுக்களே அவசியமற்றவை. இத்தகைய பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் வரும்.

"இயல்புநிலையை ஏற்படுத்துதல் மற்றும் மோதல் தணிப்பு ஆகியவற்றுக்கான உபகுழுவை செயலிழக்கச் செய்வது அல்லது இடைநிறுத்துவது இலங்கை அரசின் முடிவல்ல. இது விடயத்தில் புலிகளின் நிலைப்பாடு வேறுவிதமாக இருக்கலாம்."

- என்று ஒப்புக்குக்கூறிச் சமாளித்தார் பேராசிரியர் பீரிஸ்.

இந்த மோதல் தணிப்பு உபகுழு தொடர்பான விடயத்தில் புலிகளின் கடும் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு அரசுத்தரப்பு முயற்சி எதையும் நேற்று எடுத்ததா என்ற விவகாரத்திலும் நேற்று முரண்பாடான தகவல்களை இருதரப்பும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை மூன்றாவது நாள் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களை அமைச்சர் பீரிஸ் சந்தித்தார்.

அப்போது "மோதல் தணிப்பு உபகுழுவை செயற்படுத்தவேண்டும் என்பதற்காக - புலிகளின் முன்னைய முடிவை - மறுபரிசீலனை செய்யும்படி மூன்றாம்நாள் பேச்சுகளில் நீங்கள் வற்புறுத்தினீர்களா?" - என்று அமைச்சர் பீரிஸை செய்தியாளர்கள் கேட்டனர்.

"அப்படி எதுவும் நடக்கவில்லை. இருதரப்பினரும் ஒருதரப்பின் முடிவுகள் மீது மறுதரப்பு அழுத்தம் எதையும் பிரயோகிப்பதில்லை. ஒவ்வொரு தரப்பும் தங்கள் முடிவை தாங்களே எடுக்கின்றன. மற்றத்தரப்பு அந்த முடிவுகளை - தீர்மானங்களை - மதித்து நடந்துகொள்ளும். ஒருதரப்பின் தீர்மானத்திற்கு எதிராக மறுதரபபு வற்புறுத்தல்களையோ, அழுத்தங்களையோ பிரயோகிப்பதில்லை என்பதால் அப்படி எதுவும் நடக்கவில்லை" - என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார் அமைச்சர் பீரிஸ்.

ஆனால், நேற்று மாலை பேச்சுகள் முடிவுற்ற பின்னர் "உதயனுக்கு" தகவல் வெளியிட்ட புலிகள்தரப்பு பேச்சுக்குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கத்தின் கருத்து வேறுவிதமாக அமைந்தது.

*கேள்வி:* மோதல் தணிப்பு உபகுழு கலைக்கப்பட்ட விடயம், இன்றைய (புதன்கிழமை) பேச்சுக்களில் ஏதும் ஆராயப்பட்டதா?

*பாலா:* ஆம். பேசப்பட்டது. இந்த உபகுழு கலைக்கப்பட்டது குறித்து நாங்கள் பத்திரிகைகளுக்கு அறிவித்தது சம்பந்தமாக அரசுப் பிரதிநிதிகள் தமது தரப்புக் கவலையைத் தெரிவித்தனர். இந்தத் தகவல் பத்திரிகைகளில் வெளிவந்தால், பேச்சில் ஏதோ இடர்பாடு, குழப்பம் நிலவுவதாக கருத்து எழக்கூடும் என்று அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

அதுதான் உண்மை என்பதால் அதை வெளிப்படுத்தினோம் என நாம் பதிலளித்தோம். இந்த உபகுழு இருப்பதால் எந்தப் பயனும் இல்லை என்பதை நாம் தெரிவித்தோம். இது விடயத்தில் இராணுவம் நடந்துகொண்டவிதம், எம்மை ஆத்திரமூட்டும் செயல் என்பதைத் தெளிவுபடுத்தினோம்.

சாதாரண மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய தனது கடப்பாட்டை நிறைவுசெய்வதற்கு, புலிகளைச் சரணடையுமாறு கோருவது பெரிய பாரதூரமான விடயம்.

ஆகவே, இது நாங்கள் எடுத்த முடிவு அல்ல. எமது தலைமைப்பீடம் எடுத்த முடிவு. இதனை நாம் மாற்ற முடியாது.

எமது ஆத்திரத்தையும், எமது எதிர்ப்பையும் வெளிப்படையாகக் காட்டும் ஒரு முடிவாக இது இருக்கட்டும் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம். இராணுவத்துக்கும் இது ஒரு படிப்பினையாக இருக்கட்டும் என்று நாம் அவர்களுக்கு விளங்கப்படுத்தினோம்.

இதை மறைத்து பூசி, மெழுகி ஏதோ ஒரு பிரச்சினையும் இல்லாமல் பேச்சுக்கள் தொடர்வதாக நீங்கள் காட்டத் தேவையில்லை என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்தோம். உண்மைநிலை இதுதான். மேற்கொண்டு இப்படி சிக்கலான பிரச்சினைகள் எழாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் அவர்களிடம் கூறினோம்.

எமது மக்களின் மீள்குடியமர்வு விவகாரம், மனிதாபிமானப் பிரச்சினை மட்டுமல்ல, எமது மக்களின் மனித உரிமைப் பிரச்சினையும் கூட. எனவே, இது விடயத்தில் எமது முடிவு மாற்றத்தக்கதல்ல என்பதை இன்று தெளிவாக அவர்களுக்கு எடுத்துரைத்தோம் - என்றார் பாலசிங்கம்.

(ஐ)

## கிளிநொச்சியில் கல்வி அபிவிருத்தி செயலமர்வு

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான 3 ஆவது செயலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் மூன்று தினங்கள் கிளிநொச்சில் உள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாநாட்டு மண்டபத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் மாகாணக் கல்விச் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் மற்றும் திட்டமிடல் பிரிவு பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கல்விமேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (எ)

## ஊர்காவற்றுறையில் அரசியல் பணிமனை இன்று திறப்பு

பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் இன்று காலை 10மணிக்கு ஊர்காவற்றுறையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை காம் வீதிச் சந்தியில் அமைந்துள்ள தனியார் கட்டடம் ஒன்றில் மேற்படி அரசியல் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கி.ரதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொள்வர்.(எ-16)

## சொற்பொழிவுகள்

யாழ்.வருகை தந்துள்ள தமிழ்ப் பேரறிஞர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான இன்று யாழ்பல்கலைக்கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

பிற்பகல் ஒரு மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ் மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

(எ)

★ ★ ★

யாழ்.வந்துள்ள 'கவிக்கோ' அப்துல் ரகுமான் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-ரி)

# வாழைச்சேனையில் பத்திரிகையாளர் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல்

கொக்கட்டிச்சோலை,ஜன.9

த்திரிகையாளரும் 'தமிழ்நெற்' இணையத்தளத்தின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் உபதலைவருமான எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் வீடு செவ்வாய் நள்ளிரவு இனந்தெரியாத நபர்களின் கைக்குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்கானது.

வாழைச்சேனை, இரத்தினம் வீதியிலுள்ள இவரது வீட்டின் பின்புறமாக நளளிரவு வேளையில் கைக்குண்டை வீசிய நபர்கள், பெற்றோலை ஊற்றி வீட்டுக்குத் தீ மூட்ட முயற்சித்த போதிலும் மழை காரணமாக வீடு எரியவில்லை எனத் தெரிகிறது.

சமபவம் நடைபெற்றவேளை வீட்டில் இருந்த ஜெயானந்தமூர்த்தியும், ஆசிரியையான அவரின் மனைவியும் இரு குழந்தைகளும் வீட்டைவிட்டு வெளியேறி அருகே இருந்த வீடொன்ல் தஞ்சமடைந்து உயிர்தப்பினர். இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரபல ஊடகவியலாளரும், சமூக சேவகருமான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, அண்மைக்காலமாக பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் தீவிரவாதிகளால் இவருக்கு அடிக்கடி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது. கடந்த வருடம் இவருக்கு கடிதமூலமும் தொலைபேசி மூலமும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை முஸ்லிம் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் வாழைச்சேனையில் கொல்லப்பட்டதால் நிலவிய பதற்றம் காரணமாக வாழைச்சேனைப் பகுதியில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டு ரோந்தில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இக்கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜெயானந்தமூர்த்தியின் வீடு தாக்கப்பட்டமை தொடர்பாக துரித விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டறிய ஆவனசெய்யுமாறு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளது.

(ஐ)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளின்படி

# மூன்று சதவீத மாணவர்களே பல்கலை அனுமதி பெறுகின்றனர்

## மகரகம மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.9

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின்படி மூன்று சதவீத மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். எஞ்சிய 97 சதவீதமான மாணவர்களும் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

- இப்படிக் கூறியுள்ளார் மகரகம மாகாணக் கல்விப் பணிப்பாளர் குணரத்ன அல்விஸ்.

மகரகமவில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு பிள்ளை, பாடத்திட்டக் கல்வியினால் மட்டும் தனது வாழ்க்கையில் பயனடைய வாய்ப்புக்களில்லை. பிள்ளைகள் கட்டாயமாக ஏதாவது தொழிலசார் கல்வியிலும் பயிற்சி பெற்றிருப்பின், தமது வாழ்க்கையில் போதியளவு வருமானத்தை தேடிக்கொள்ள முடியும்.

அரச நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கள் நாளுக்குநாள் குறைந்து வருகின்றன. அடுத்து தனியார் நிறுவனங்களிலும் தொழில்களில் ஆற்றல் உள்ளவர்கள் மிகக் குறைவு. எனவே, இந்த இடைவெளியினை நிவர்த்தி செய்வதற்காக தொழில்சார் கல்விப் பயிற்சி முறையினையும் அரசு தற்போது நடைமுறைப்படுத்துகின்றது.

முற்காலங்களில் வீட்டுத் தலைவியர்களில் அநேகமானோர் ஏதாவது கைப்பணித் துறைகளின் மூலம் தமது குடும்பத்திற்கு மேலதிக ஊதியம் தேடிக்கொண்டனர். ஆனால், தற்போது காலம் மாறிவிட்டது. தற்போது அநேகமான பெண்கள் தமது உடைகளைத் தாமே தைத்துக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இதுபோன்ற இடைவெளிகள் குடும்பங்களில் நிதி நெருக்கடியை உருவாக்குகின்றன.

ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் அரச சேவையில் உள்ளவர்களே ஏதாவது கைப்பணி வேலைகளிலும் தம்மை ஈடுபடுத்தி மேலதிக ஊதியம் தேடிக்கொள்கின்றனர். எனவே, எமது நாடும இந்த முறையினைப் பின்பற்றினால் பெரிதும் பயனடையலாம் என்றார் அவர்.

(எ-3)

## தொற்றுநோய் நிலைமையை மதிப்பிட

# சுகாதார அமைச்சின் குழு யாழ். வருகிறது

யாழ்ப்பாணம்,ஜன.9

சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜிபெரேரா தலைமையிலான அமைச்சுக்குழு ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளது.

குடாநாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் தொடர்பான நிலைமைகளை மதிப்பிடுவதற்காகவும் அதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய தீவிர தடுப்பு நடவடிக்கைகள தொடர்பாக ஆராய்வதற்கும் இக்குழுவினர் இங்கு வருகை தருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவினர் அன்று காலையே யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்வர். அங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், மறுநாள் 18ஆம் திகதி சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்துக்குச் சென்று ஆலோசனை நடத்துவர்.

இக்குழுவில், வடக்கு - கிழக்கு பிராந்திய சுகாதார இணைப்பாளர் டாக்டர் எஸ்.ஜெகநாதனும் இடம் பெறுகிறார். (ஐ-9)

# பாரவூர்தி சங்கத்தினர் நேற்று சுலோக அட்டைகளுடன் மறியல்

## துறைமுகப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம்

வடமராட்சி,ஜன.9

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து இறக்கப்படும் சிமெந்தை ஏற்றிவருவதற்கு தனியார் லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த சுமார் நூறு பேர் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்மறியல் போராட்டத்துக்கு இறங்குதுறையில் பொருளை இறக்கும் பணியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களும் பூரண ஆதரவை தெரிவித்து சிமெந்து இறக்கும் பணிக்கு செல்லவில்லை. இதனால் இறங்குதுறைப் பணிகள் யாவும் நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

இறங்குதுறைக்கு லொறிகள் செல்லும் நுழைவாயிலான பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் - இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் - யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தோர் சுலோக அட்டைகளைச் சுமந்தவாறு மறியல் போராட்டம் செய்தனர்.

அவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் -

'எமது சேவையினை எம்மிடம் திருப்பிக்கொடு!', 'அரச அதிபரே நீதி வழங்குங்கள்!', 'எமது குடும்பங்களைப் பட்டினி போடாதே!', 'கண்ணி வெடிகள் அகற்றப்படாதபோது எமது லொறிகள் சேவையில், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் வர்த்தகர்களின் லொறிகள் சேவையா?' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இதேவேளை -

இறங்குதுறையிலிருந்து சிமெந்தை ஏற்றிச்செல்வதற்காக நேற்றைய தினம் எந்தவொரு தனியார் லொறிகளும் அங்கு வரவில்லை. சிமெந்தை இறக்குமதி செய்த யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனம் ஒன்று, பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து சிமெந்தை ஏற்றிவருவதற்கு தனியார் லொறிகளிடம் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றப் பிரச்சினை:

# ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை இன்னமும் வெளியிடவில்லை

கொழும்பு,ஜன.9

வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றம் ஆகியவை தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாடு உத்தியோகபூர்வமாக இன்னமும் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் சில அரசியல்வாதிகளும் ஊடகங்களும் நிலைப்பாடு என்று கூறி தவறான தகவல்களை வெளியிடுகின்றன என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வெளியிடாத கருத்துக்களை இவ்வாறு கூறுவதன் மூலம் அவரை சமாதானத்துக்கு எதிரானவர் என்று காட்ட முற்படுகின்றனர். உண்மையில் சமாதானப் பேச்சுக்களில் தம்முடன் அரசு நெருங்கிச் செயற்படுவதையே ஜனாதிபதி விரும்புகின்றார். அத்துடன் ஆரம்பத்தில் சமாதானப் பேச்சுக்களில் தமது பிரதிநிதி ஒருவரும் கலந்துகொள்ளவேண்டுமென ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். அரசு அதை நிராகரித்தது. அச்சமயம் நியூயோர்க்கில் இருந்த பிரதமர், வேண்டுமானால பார்வையாளராக ஜனாதிபதியின் பிரதிநிதி கலந்துகொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அறிக்கை ஒன்றைத் தயாரித்ததன் பின்பே ஜனாதிபதியைச் சந்தித்தார். அச்சந்திப்புத் தொடர்பாகவும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. சில ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும் தெரிவிப்பவை ஜனாதிபதியின் நிலைப்பாடு அல்ல.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்பு புலிகள் தமது இயக்கத்தில் இணைத்துக்கொண்ட சிறுவர்கள் தொடர்பாகவும் ஏனையவர்கள் தொடர்பாகவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பெயர், முகவரி உட்பட அனைத்துத தகவல்களையும் திரட்டி வைத்திருக்கின்றன. இவை தொடர்பாக அரசு - புலிகள் பேச்சுக்களில் பேசப்பட வேண்டும். வடபகுதி தமிழ் மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளான ஈ.பி.டி.பியினருக்குச் சுதந்திரமாக வடபகுதியில் அரசியலில் ஈடுபட அனுமதியளிக்கவேண்டும். அவர்களுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகளை நிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு ஹரீம் பீரிஸ் தெரிவித்தார். (ஐ)

# அரச அதிபர் வரும்வரை மறியற்போர் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.9

நேற்றும் நேற்றுமுன்தினமும் பருத்தித்துறையில் தாங்கள் நடத்திய மறியற் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்திருக்கிறது.

யாழ் அரச அதிபர் செபத்மநாதன் தற்சமயம் கொழும்பில் தங்கியிருப்பதால் அவர் இங்கு திரும்பியதும் அவருடன் பேசி ஒரு சுமுகநிலையை ஏற்படுத்த வசதியாகவே போராட்டத்தைத் தாங்கள் இடைநிறுத்தி வைப்பதாக சங்கம் நேற்று மாலை விடுத்த ஓர் அறிக்கை தெரிவித்தது.

தங்களின் மறியல் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய சங்க அங்கத்தவர்கள், சாரதிகள், பணியாளர்கள், வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம், துறைமுக தரை பணியாளர் சங்கம், வள்ள உரிமையாளர்கள் மற்றும் இது விடயமாகக் கவனம் செலுத்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் ஆகிய தரப்பினருக்கும் சங்கம் நன்றி தெரிவித்திருக்கிறது. (ஐ)

# நாடாளுமன்றத்தில் நேற்று அடிக்கடி மின்சாரத் தடை!

கொழும்பு,ஜன.9

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடிய சிறிது நேரத்தில் மின்சாரத் தடை ஏற்பட்டது. இதனால் சபையை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

காலை 10 மணிக்கு சபை கூடி அலுவல்களை ஆரம்பித்த சிறிது நேரத்தில் மின்சாரம் தடைப்பட்டது. அடிககடி இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டதால் 10.10 மணியளவில் சபாநாயகர் சபையை 10 நிமிடங்களுககு ஒத்திவைத்தார்.

எவ்வாறாயினும் இந்த மின்சாரத் தடை சுமார் 40 நிமிடங்களுக்கு நீடித்தது.

இதனால் 10.50 மணியளவிலேயே சபை மீண்டும் கூடியது.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது குறித்து விசாரணை நடத்துமாறு அமைச்சர்கள் சிலரும் அரசு எம்.பிக்கள் சிலரும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# மாணவர் சீருடைத்துணி வழங்குவது அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.9

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்குவது, அடுத்த மாத நடுப்பகுதிவரை பிற்போடப்பட்டிருக்கிறது. கல்வியமைச்சு நேற்று இதனை அறிவித்தது.

இவ்வாண்டில் ஆண்டு ஒன்றில் சேர்ந்து கொள்ளும் மாணவர்களுக்கும் இலவச சீருடைத்துணி வழங்கப்படவேண்டுமென்று அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானமே இதற்கான காரணம் எனவும் அமைச்சு தெரிவித்திருக்கிறது.

ஆண்டு ஒன்று மாணவர்களுக்குச் சீருடைத்துணி பெறவிரும்பும் பெற்றோர், சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டிருக்கின்றனர்.

ஆண்டு ஒன்றுக்கான புதிய மாணவர்கள் இன்று பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர். (ஐ-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.பல்கலைக்கழகத்தில கல்வி பயின்று வெளியேறிய உடற்கல்வித்துறை டிப்ளோமா 2ஆம், 3ஆம் அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உடற்கல்வித்துறையில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.9

கொழும்பிலிருந்து பொருள்களை எடுத்துவரும் சகல வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளன.

சகல வர்த்தகர்களும் இதில் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)









சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறநிதிய விழா நேற்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் தங்கம்மா அப்பாகுட்டி, 'கவிக்கோ' அப்துல் ரகுமான் ஆகியோர் உரையாற்றுவதை முதல் படத்தில் காணலாம்.

தீவக வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவி நிதி வழங்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் -

விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பிரிவினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : வசந்தன்)

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக

# செஞ்சிலுவை அதிகாரிகளுக்கு புலிகள் தரப்பு விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து படைகளை முற்றாக வாபஸ் பெறுமாறு நாம் கோரவில்லை. மக்கள் தமது சொந்த இடங்களில் உள்ள வீடுகளில் குடியமரவும் விவசாய நிலங்களுக்குச் செல்லவும் வசதி செய்யவேண்டும் என்றே கோருகின்றோம்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தம்மைச் சந்தித்த செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பிரதிநிதிகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பு ஒன்றிலேயே மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் வரைபடத்தில் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகள் சுட்டிக்காட்டப்பட்டு குடாநாட்டின் மொத்த நிலப்பரப்பில் எத்தனை சதவதம் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதென அப்போது விளக்கிக்கூறப்பட்டது.

மேலும், இப்பிரகடனத்தால் மொத்தமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் எண்ணிக்கை, இம்மக்கள் சார்ந்துளள குடும்பங்களின் எண்ணிக்கை, மொதத வீடுகளின் எண்ணிக்கை என்பன புள்ளிவிவரங்களின் அடிப்படையில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் வழிபாட்டுக்குத் தடை செய்யப்பட்டுள்ள வழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கை, மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை முடக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களின் மொத்த ஏக்கர் விஸ்தீரணம், மீன்பிடிக்குத் தடை செய்யப்பட்டுள்ள பிரதேச விஸ்தீரணம் என்பன மிகவும் நுண்ணிய முறையில் புள்ளிவிவரங்களுடன் காட்டப்பட்டன.

உதாரணமாக வலி.வடக்கு பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தின் தெற்குப் புறங்களில் இருந்து ஒதுங்கி, மக்களின் மீள் குடியமர்வுக்கும், விவசாய நடவடிக்கைக்கும் வசதி ஏற்படுத்திக்கொடுக்கும்படியே வலியுறுத்துவதாகவும் மிகத் தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. இதன்மூலம் மக்களின் மனங்களில் நம்பிக்கையை வருவிதது நிரந்தர சமாதானத்துக்கான வழிகளை வகுத்துக்கொள்ளலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், இவற்றைவிட உயர் பாதுகாப்பு வலயமல்லாத பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களால் பொதுமக்களின் எத்தனை வீடுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதும், எத்தனை தெருக்கள் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளன என்பதும் புள்ளிவிவரங்களுடன் எடுத்து விளக்கப்பட்டது. (ஐ-3)

# 'ராம்கோ' சிமெந்தின் விலையே குறைப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.9

'ராம்கோ' சிமெந்தின் விலை ஒரு பக்கெட் 425 ரூபாவிலிருந்து 400 ரூபாவாக விலைக் குறைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

'ராம்கோ' சிமெந்தை குடாநாட்டில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் ஈஸ்வரபகவான் கம்பனி நிர்வாக முகாமையாளர் பி.வரதராஜசிங்கம் இதனை அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக நேற்றைய உதயனின் 15ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் 'ராம்கோ சிமெந்து என்பதற்குப் பதிலாக 'மிற்சுயி' சிமெந்து என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது.

குடாநாட்டில் 'மிற்சுயி' சிமெந்தின் விலையில் எந்த மாற்றமும் கிடையாது என்று 'மிற்சுயி' நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

நேற்றைய செய்தி காரணமாக 'ராம்கோ' மற்றும் 'மிற்சுயி' சிமெந்து விநியோகஸ்தர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன உளைச்சலுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் செலான் வங்கிக்கும் இலங்கை வங்கிக்கும் இடையில் பழைய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: உருத்திரா அப்புக்காத்தர், பருத்தித்துறை. (12963)

கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை செல்லும் வீதியில் ஏறத்தாழ 5 பரப்பு தோட்டக்காணி (கிணற்றுப் பங்கும், வழிவாய்க்காலும கொண்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 500329. (சி-25883)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் சொந்தமாகக் கடை வைத்திருக்கும் விசாக நட்சத்திரமும், லக்கினத்தில் செவ்வாயும், 31வயதுமுடைய அழகிய மணமகனுக்கு அதே கிரகபாவமுடைய நிறமான, படித்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: K.மயூரநாதன், 2ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு. (12960)

## தவறிவிட்டது

கா.சிவனேசகுமாரின் பொது சுகாதாரப் பரிசோதகருக்கான காக்கிநிற சீருடையும் அலுவலகப் பொருள்களும் அடங்கிய கறுப்பு பாக் 04-01-2003 அன்று யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.92, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி அருகில்) எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (12939)

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள
5′ நீள டிபிறீசர்
உடன் விற்பனைக்குண்டு.
**அபிஸ் கோப்பி**
115, ஆஸ்பத்திரி வீதி
(மரக்கறிச் சந்தை அருகில்)
(12769) யாழ்ப்பாணம்.

## தேவை

**யாழ்.நகரில் இயங்கும் முன்னணி ஸ்தாபனத்திற்கு கணக்குகள் எழுதத் தெரிந்த ஒருவரும், விற்பனை உதவியாளர் ஒருவரும் தேவை.**
விளம்பர இல.: 1748
C/o உதயன்
யாழ்ப்பாணம்.
(C/25861)

## வீடு தேவை

**கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட தனியார் நிறுவனத்திற்கு யாழ் நகர எல்லைக்குள் பிரதான வீதிகளை அண்டிய பகுதியில் விஸ்தீரணமான வீடு நீண்டகால குத்தகைக்கு/வாடகைக்குத் தேவை.**

**இதற்கமைய குத்தகைக்கு/வாடகைக்கு வீடு கொடுக்க விரும்புவோர் N.ரமேஸ் என்பவரை தொலைபேசி இலக்கம் 075-555 559, 075-555 666 071-744382 மூலம் தொடர்புகொள்ளவும்.** (12970)

## காவலூர் ராசதுரையின் விளம்பரத்துறை நூல் வெளியீடு

| | |
|---|---|
| காலம்: | இன்று (09-01-2003) வியாழன் பிற்பகல் 3.00 மணிக்கு |
| இடம்: | நூல் நிலையக் கேட்போர் கூடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| அகவணக்கம் | |
| வரவேற்புரை : | செல்வி தி.ஜெகாறஞ்சினி |
| வாழ்த்துரை : | பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) |
| தலைமையுரை : | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| நூல் வெளியீடு: | முதற்பிரதி பெறுபவர்: திரு.S.இரவீந்திரா (முகாமையாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்) |
| ஆய்வுரை : | கலாநிதி என்.சண்முகலிங்கன் திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் |
| பதிலுரை : | காவலூர் ராசதுரை |

(12964)


# எல்லாச் சிறுவர், சிறுமியரையும் பாடசாலைக்கு அனுப்பும் முயற்சி

**'யுனிசெவ்' யாழ்.மாவட்ட அலுவலகத்தால் பிரசுரிக்கப்படும் ஆக்கம் இது.**

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் போர்நிறுத்தமும், தற்போதைய சமாதான முயற்சியும் நாட்டில் 19 வருடகாலம் நீடித்த உள்நாட்டுப் பிணக்குக்கு அரசியற் தீர்வு கிடைக்கும் எனும் நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளன. இது பிணக்கு நடைபெற்ற பகுதிகளில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும் ஏனென்றால் இப்பிள்ளைகளில் பலர் போர்க்கலாசாரமும் இடப்பெயர்வும் அத்தியாவசிய சேவைகளின் சீரழிவும், நிச்சயமற்ற எதிர்காலமும் சூழ்ந்த பின்னணியிற் பிறந்து வளர்ந்தவர்களாவர்.

-இவ்வாறு வன்செயல்களும் பிணக்கும மலிந்த சூழலில் வாழும் பிள்ளைகளின் வாழ்வு மீண்டும் துளிர்க்கச் செய்யும் அருமருந்தாகக் கல்வி விளங்குகிறதென்பதை இன்று பலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் கல்வியூட்டுதல் என்னும் சவாலைச சிறப்பாகச் சமாளிக்கும் பொருட்டு, கல்வி, மனிதவள அபிவிருத்தி, கலாசார விவகார அமைச்சானது யுனிசெப், தேசிய கல்வி நிறுவனம், மாகாண, மாவட்ட, வலயக் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து, பாதிப்புற்ற சகல பிரதேசங்களிலும் கல்விசார் உட்கட்டமைப்புகளை மீளவும் அமைத்து வலுப்படுத்துவதற்கு அவசியமானவை எவை என்பதை இனங்கண்டு, அவற்றை விருத்தி செய்வதற்கான நடைமுறைகளை வகுத்துள்ளது. இந்த நடைமுறைகள், ஒவ்வொரு பிள்ளையும் முதலாம் வகுப்பிற் சேர்ந்து குறைந்தபட்சம் 14 வயது வரையேனும் தொடர்ந்து படிப்பதை உறுதிசெய்யும்.

ஆரம்ப முயற்சியாக தேசிய மட்டத்தில் மட்டுமல்லாமல் மாகாண, மாவட்ட, சமுதாய மற்றும் அக்கறையுள்ளோர் மட்டத்திலும் அமைந்துள்ள கல்வித் திட்டங்கள் பற்றிய துரித மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முயற்சியில் மேற்குறிப்பிட்ட சாராருடன் தமிழழ விடுதலைப் புலிகள், அரசசார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் கல்வித்துறை ஆர்வலர்கள் ஆகியோரும் பங்குகொண்டார்கள. இந்த மதிப்பீட்டின்போது பாடசாலைக கட்டடங்கள் சேதமுற்றமை, பாடசாலை உபகரணங்கள் போதாமை முதல் ஆசிரியர் பற்றாக்குறை, பயிற்சித் தேவைகள் ஆகியவற்றுடன் பிள்ளைகளுக்கான பாடசாலைப் பொருள் பற்றாக்குறை, வறுமை, பெற்றோரின் பாராமுகம், முறையான கண்காணிப்பின்மை ஆகியன உள்ளிட்ட பலதரப்பட்ட பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள நலன்புரி முகாம்கள் உள்ளிட்ட, மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பாடசாலையிற் சேராமை, ஒழுங்காகப பள்ளி செல்லாமை, படிப்பை இடையிற் கைவிடல் ஆகியன குறிப்பிடத்தக்க பிரச்சினைகளாயுள்ளன. இதுவும சிறுவர்களை வேலைக்கமர்த்தும் பிரச்சினையுடன் தொடர்புடையதாகும். யுனிசெப் நிறுவனத்தின் கடப்பாடானது எல்லாச் சிறுவர் சிறுமியரும் ஆரம்பக கல்வி மட்டத்திலேனும் தரமான அடிப்படைக் கல்வியூட்டப் பெறுதலை உறுதி செய்தலாகும்.

இந்த இலட்சியங்களை அடையும பொருட்டு, போதனாமுறை மட்டுமன்றி தனிப்பட்ட பாடசாலைகள் மற்றும் சமுதாய மக்கள், பள்ளி செல்லாச் சிறுவர், சிறுமியர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் அவசியம். இத்தகைய சிறுவர் சிறுமியர்களில் நலன்புரி முகாம்களில் உள்ள பிள்ளைகள், முன்னர் அணுக முடியாதிருந்த விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள பிள்ளைகள், தொலைதூர எல்லைக் கிராமங்களில் வாழும் பிள்ளைகள் உழைக்கும் பிள்ளைகள், பராமரிப்பு நிலையங்களில் உள்ள பிள்ளைகள், விசேட கவனிப்புக்குரிய பிள்ளைகள், ஊனமுற்ற பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர். ஒவ்வொரு பிள்ளையையும் பாடசாலையிற் சேர்க்கும் முயற்சியில மட்டுமல்லாமல், கட்டாயக் கல்விக் குரிய காலமான 5-14 வயதுவரை தொடர்ந்து படிக்கச் செய்யும் முயற்சிக்குமெனத் திட்டவட்டமான வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். எல்லாப் பாடசாலைகளிலும், அவை அமைந்துள்ள இடம், அவற்றின் அளவு, தராதரம் பற்றிய பேதமெதுவும் இல லாமல், பிள்ளைகள் எண்ணவும் வாசிக்கவும், எழுதவும் வல்லவர்களாய் வளரும் வகையில் கல்வித் தராதரம் நிலைபெறல் அவசியமாகும்.

அபூர்வமான இந்தச் சவாலுக்கு முகம்கொடுக்கும் வகையில், யுனிசெப நிறுவனமானது, மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சுடன் சேர்ந்து ஆரம்ப முயற்சியாக, துரித பயனளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யோசனை கூறியது. இந்த நடவடிக்கைகளில் கல்வித்துறையின் உடனடித் தேவைகள் எவை என்னும் மதிப்பீடும் அடங்கியது. இம்மதிப்பீடு வடக்கிலும கிழக்கிலுமுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 8 மாவட்டங்களிலும் அவற்றை அண்டியுள்ள மாவட்டங்களான புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, மொனறாகலை ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்படல்வேண்டும் என்பது யுனிசெப்பின் யோசனையாகும். இம்முயற்சி இப்போது நிறைவேறியுள்ளது. அதன் பயனாக, இனங்காணப்பெற்ற தேவைகளின் அடிப்படையில் செயற்றிட்டமொன்று வகுக்கப்படுகின்றது.

இந்தச் செயற்றிட்டத்தில், கட்டாயக் கல்வி தொடர்பான சட்டத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதலும் அடங்கும்; ஒவ்வொரு பிள்ளையையும் பாடசாலையில் சேர்க்கும் இயக்கமும் அடங்கும்.

இந்தச் செயற்றிட்டமானது 2003ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கும் புதிய கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்படுகிறது. இந்த ஆரம்பத்தின் துரித பயன்பாட்டுச் சின்னமாக, பிணக்கினால பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்று முதலாம் வகுப்பிற் சேரும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பாடசாலை அங்கி உள்ளிட்ட ஒரு தொகுதிப் பொருள்கள் வழங்கப்படும். இந்த இயக்கத்தினை ஆரம்பிப்பதற்கென எல்லா மாவட்டங்களிலும் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். "ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையில்" என்னும் ஊடகப் பிரசார இயக்கமொன்றும் நாடெங்கும் அமுல்படுத்தப்படும். ஆயினும், பிணக்கிற் பாதிப படைந்த பகுதிகளில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் போது, கல்வியின் முக்கியத்துவம் சிறப்பாக வலியுறுத்தப்படுவதுடன், கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகப் பெற்றோருக்குள்ள ஆர்வம் வலுப்பெறவும் வாய்ப்புண்டாகும்.

இந்தச் செயற்றிட்டத்தில் வலியுறுத்தப்படும் ஏனைய அம்சங்களில் கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறையாக்குதல், பாடசாலைகளின் உட் கட்டமைப்புகளை வலுப்படுத்தல், ஒழுக்க சீலங்களை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சமூக சமத்துவம், கண்காணித்து, மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்யத் தோதாக வலய மற்றும் மாவட்டக் கல்வி அமைப்புகளின் ஆற்றலை வளர்த்தல், ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வி ஆகிய துறைகளைப் பலப்படுத்துதல், பாடசாலை அங்கிகள், போதனா உபகரணங்கள், உடற் பயிற்சி மற்றும் பொழுதுபோக்குப் பொருள்கள் போன்ற பாடசாலைப் பொருள்களையும் உபகரணங்களையும் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்தல் என்பன அடங்கும். பிணக்கினால் பாதிப்புற்ற பாடசாலைகளைத் தரமுயர்த்துதல் அதிலும் குறிப்பாக நீர் விநியோகம், சுகாதார வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகியனவற்றுககும் உதவி வழங்கப்படும்.

பாடசாலையிற் சேராப் பிள்ளைகளுக்கான முறைசாராக் கல்வி, முக்கிய பிரச்சினையாக எல்லாப் பகுதிகளிலும் இனங்காணப்பட்டுள்ளது. ஆகவே, நிலைபெற்றுள்ள அமைப்புகள் பலப்படுத்தப்படுவதுடன் விரிவாக்கமும் நடைபெறும். இதிலே முறைசாரக் கல்வி மட்டுமன்றி குறைநிவர்த்திக் கல்வி தொடர்பாகவும் நெறிமுறைக்கொள்கை வகுத்தலும் அடங்கும். யாவும் உள்ளடங்கிய கல்வி எனும் பாடநெறியும் புகுத்தப்பெற்று முடியுமான சந்தர்ப்பங்களில் விசேட கவனத்தைப் பெறும். பிணக்கின் பின்விளைவாக உணர்வு மற்றும் சமூக உளவியற் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பிள்ளைகளுக்கு உதவும் வகையில், சமூக உளவியற் கற்கை நெறிகள் கல்வித் துறையில் அறிமுகஞ்செய்யப்படும். வாழ்க்கையைக்கொண்டு நடத்துவதற்குத் தேவையான ஆற்றல்கள் படிப்படியாகக் கற்பிக்கப்படும். இதுவிடயத்தில் பொருள் விரயம், எச்.ஐ.வி.(எயிட்ஸ்) மற்றும் உடலுறவுமூலம் பரவும் நோய்களைத் தடுத்தல் என்பனவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.

யுனிசெவ்பின் பிரதான முன்னுரிமைக்குரிய விடயம் ஆரம்பக் கல்வியே என்ற போதிலும் ஆரம்பக் கல்வியிலிருந்து இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி ஆகிய தொடர்கல்விக்கு ஆதரவளித்தலும் அவசியமாகின்றது. இளம்பிள்ளைகள் லாபகரமான தொழில்பெறும் கட்டத்துக்கு மாறும்போது அவர்களுக்கு உதவுதலும் அவசியம். இதன்பொருட்டு தொழிற்பயிற்சிக்கு விசேட கவனஞ் செலுத்தப்படும். இந்நிகழ்ச்சி நிரலின் முதற்கட்டம், பிணக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையே உள்ளடக்குகின்ற போதிலும் பாடசாலைக்குச் செல்வதிலும் படிப்பைத் தொடர்வதிலும் சிரமம் அனுபவிக்கும் ஏனைய பகுதிப் பிள்ளைகளுக்கும் பரப்பப்படும். யுனிசெப் நிறுவனத்தின் உள்ளீடுகளை ஏனைய கல்வித்துறை ஆர்வலர்களின் உள்ளீடுகளுடன் ஒருங்கிணைக்கவும் முயற்சி எடுக்கப்படும். இதிலே ஊனமுற்ற சிறுவர், சிறுமியர்கள், விசேட கல்வி மற்றும் யாவும் உள்ளடங்கிய கல்வி என்பவற்றை ஊக்குவித்தல், வெகு தொலை தூரங்களிலும் எல்லைப்புற மாவட்டங்களிலும் வசிக்கும் பிள்ளைகள், பெருந்தோட்டங்கள், கரையோரப் பகுதிகள், நகர்ப்புறச் சேரிகள், குடிசைகள் ஆகியவற்றில் வளரும் பிள்ளைகளும் அடங்குவர். ★


## கணனிக் கருத்தரங்கு ஒத்திவைப்பு

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் ஓராண்டு நிறைவையொட்டி 2003 ஜனவரி 5ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த கணனிக் கருத்தரங்குகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அக்கருத்தரங்குகளை எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதிப் பகுதியில் நடத்துவதென நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதற்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர்கள அவற்றைப் பெப்ரவரி மாதம் பயன்படுத்தலாம் என அறியத் தருகின்றோம். நடைபெறும் தினங்கள் பற்றிய திகதி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

- ஆசிரியர்,
கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்.
(12966)

## கண்ணீர் அஞ்சலி



யா/கரணவாய் மகாவித்தியாலய பழைய மாணவி
**செல்வி தெ.நிஷாயினி**
அவர்களின் அன்புத் தந்தையும்
எமதுபாடசாலை வளர்ச்சியின் பங்காளியுமான
**கு.தெய்வேந்திரம்**

அவர்கள் 01.01.2003 அன்று ஜேர்மனியில் அகாலமரணமடைந்தமை கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/கரணவாய் மகா வித்தியாலயம்.* - பழைய மாணவர் சங்கம்.
(12962)

## மரண அறிவித்தல்

### சீனியன் செல்லன்

செல்வநகர், நாவற்குழி வடக்கு, கைதடியைச் சேர்ந்த சீனியன் செல்லன் 07-01-2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரி, பாஸ்கரன் (லண்டன்), பவானி (சுவிஸ்), ரதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசேகரம் (பாஸ்கர்), தனபாலசிங்கம் (தனம்), ரேணுகா, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும் டசிந்தா, டசீபன், டருளன், லஜந்தா, டுவாரதா, அபியுகா, சுஜிதா, அபிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.குணசேகரம் (பாஸ்கர்)
(மருமகன்)

*நாவற்குழி வடக்கு, கைதடி.* (12965)

உதயன்

# புலிகளுக்கு கிடைத்த வெற்றி

சமாதானப் பேச்சுக்களைச் சாகடிக்கும் அளவுக்குச் சூடுபிடித்திருந்த யாழ். குடாநாட்டு உயர்பாதுகாப்பு வலயப பிரச்சினை தணிந்துவிட்டது. அதனால், பேச்சுகள் தொடர்கின்றன.

அரச குழுவினரும் புலிகள் குழுவினரும் இருபக்க நிலைமைகளையும் பரஸ்பரம் புரிந்துகொண்டு விட்டுக் கொடுப்புடன் நிதானமாக நடந்துகொண்டதாலேயே உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை சூடு தணிந்து பேச்சுகள் தொடர்வது சாத்தியமாயிற்று.

அதற்காக இருதரப்பினரையும் பாராட்டவேண்டும். ஏனெனில், அவர்கள் ஓர் இணக்கத்துக்கு வராவிட்டால், வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிடும். மீண்டும் துப்பாக்கிகள் வெடிக்கும், பீரங்கிகள் முழங்கும், போர் முன்னரைவிட உக்கிரமாக நடக்கும்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. ஒன்று பாதுகாப்புப் படையினர் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறுவது, மற்றது மக்கள் அந்த வலயத்திலுள்ள தங்கள் சொந்த வீடுகளுக்குச் சென்று அவற்றில் குடியமர்வது.

பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயும் பல பகுதிகளில் இராணுவம் இடம்பிடித்துக்கொண்டிருப்பதால், அந்தப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வெளியேறி அகதிகளாக இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை பாதுகாப்பு வலயங்களில் குடியமர இருப்பவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்று தெரியவந்திருக்கிறது. ஆகவே, அதிக எண்ணிக்கையானோரின் பிரச்சினையை முதலில் தீர்ப்பது என்று இணக்கங் காணப்பட்டிருக்கிறது. அதனபடி, உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறுவார்கள். கண்ணிவெடிகளை அகற்றி, பாதுகாப்பை உறுதி செய்து மக்கள் அங்கே குடியமர வசதி செய்யப்படும்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை சிக்கலானது, மக்களை அங்கே மீள்குடியமரவிடுவதற்கு வேறு பொருத்தமான இடங்களைக் கண்டுபிடித்து அங்கு இராணுவத்தினரைக் கொண்டுசெல்லவேண்டும். அந்தக் காரியத்தைச் செய்வதற்கு அரசு நிபுணர்களின் உதவியைப் பெறவிருக்கிறது. சர்வதேச நிபுணர்கள் பலரிடம் அரசு ஆலோசனை கேட்டுவருகிறது. குறிப்பாக இராணுவத்துறை விவகாரங்களில் நிபுணரான லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரைத் திட்ட அறிக்கை தருமாறு அரசு கேட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வாரங்களில் அறிக்கை கிடைக்கலாம் என்று அரசு எதிர்பார்க்கிறது.

இந்த விவரங்களையெல்லாம் கூறி, உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சிறிதுகால அவகாசம் தரும்படி அரசு குழு, புலிகள் குழுவைக் கேட்டுக் கொண்டது. நிலைமையைப் புரிந்துகொண்டு அரச குழுவின் இந்தக் கோரிக்கைக்குப் புலிகள் குழு இணக்கம் தெரிவித்தது.

இதுவரை அரசு கடைப்பிடித்துவந்த நிலைப்பாட்டுக்கு மாறாக இப்போது உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வந்திருப்பதே புலிகளுக்கு ஒரு வெற்றி என்று புலிகள் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவம் வெளியேறுவதற்குப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று கடும்போக்காளரான யாழ். கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா நிபந்தனை விதித்திருந்தார்.

ஆயுதக்களைவுபற்றிப் பேசுவதற்கு இது தருணமல்ல. தவிரவும், ஆயுதக் களைவை மக்களின் மீள்குடியமர்வு, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை, மனித உரிமைப் பிரச்சினை ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்துவது அறவே பொருந்தாது என்றும் புலிகள் வாதிட்டனர்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான மோதல் தணிப்பு உபகுழுவில் இருந்துகொண்டு சமாதானப் பேச்சுக்களையே குழப்பும் வகையில், நடந்துவந்த யாழ்.கட்டளைத்தளபதியைப் புலிகள் சாடினர். அந்தக் குழு தேவையில்லை. அதன்பணியை அவசர மனிதாபிமான புனர்வாழ்வு வேலைக்கான உபகுழுவே நிறைவேற்றலாம் என்றும் புலிகள் வாதாடினர். அதை அரச குழு ஏற்றுக்கொண்டது.

மோதல் தணிப்பு உபகுழுவைக் கலைப்பது என்று முடிவுசெய்யப்பட்டுவிட்டது என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் பீரிஸ், "அப்படியேதும் முடிவு எடுக்கப்படவில்லை, அந்த உபகுழு சில அறிக்கைகளை எதிர்பார்த்து இருக்கிறது. அவை கிடைத்ததும் தேவை ஏற்படும்போது உபகுழு பணியை மீண்டும் தொடங்கும்" என்றார்.

உபகுழு கலைப்பா அல்லது அதன்பணி நிறுத்தமா? எதுவாக இருந்தாலும் உபகுழு இப்போது இயங்கவில்லை. ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் 14ஆம் திகதியும் அந்த உபகுழு கூடமாட்டாது. யாழ். கட்டளைத தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இனிமேல் "காஸ்" காட்ட முடியாது. இதுவும் புலிகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதில் சர்ச்சை எழுந்துவிட்டது. அதனால், உபகுழு கலைப்பு முடிவு புலிகளுடையது. அதில் அரசுக்கு உடன்பாடில்லை என்று பேராசிரியர் பீரிஸ் இப்போது கூறுகிறார்.

# முஸ்லிம், கிறிஸ்தவருடனான அனுபவமே பொதுச் சேவையில் ஈடுபட வைத்தது!

## 'சிவத்தமிழ்ச்செல்வி' பெருமிதம்



முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவப் பாடசாலைகளில் நான் ஆசிரியராகக கடமையாற்றிய காலங்களில் பெற்ற அனுபவங்களே நானும் சேவை நோக்குடன் செயற்பட வழிகாட்டின.

மேற்கண்டவாறு கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 78ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்றுமுன்தினம் தெல்லிப்பழையிலுள்ள துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

நான் செய்யும் சிறிய பணிகளை மதித்து வெளிநாடுகள் பலவற்றிலுமுள்ள எம்மக்கள் பாராட்டுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அத்தகையதொரு பாக்கியம் கிடைக்கப்பெற்றதையிட்டு அம்மனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எனது வாழ்க்கையில் 20 ஆண்டுகளைக் கற்றலிலும், 30 ஆண்டுகளைப் பாடசாலைகளில் கற்பித்தலிலும் மிகுதிக் காலத்தை ஆன்மீகப் பணிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றேன்.

ஆலயத்தில் பணிபுரிவதற்கு எனக்கு பலர் துணையாக இருக்கின்றார்கள். தொண்டர் சபையினர், இந்துவாலிபர் சங்கம், மாதர் சபையினர் மற்றும் நிர்வாகத்தினர் எனப் பலரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள். நான் வயதில் கூடியவளாக இருப்பதனால், நான் கடிந்தாலுங்கூட அதனைப் பொருட்படுத்தாது பக்கத்துணையாக அவர்கள் இருந்து வருகின்றார்கள்.

எனது கற்பித்தல் வாழ்க்கை முதலில் உண்ணாநோன்பு இருக்கும் மக்களிடையே ஆரம்பமாகியது. அவர்கள் நோன்புக் காலத்தில் அதற்குக் கொடுக்கும் மகத்துவத்தைப்பற்றி நனகு உணர்ந்துள்ளேன். அதன் காரணமாக எனக்குள் ஒரு தியாக சிந்தனையை வளர்க்கக்கூடியதாக இருந்தது.

முஸ்லிம் மக்கள் தமது சமய அனுஷ்டானங்களிலும் கொடையிலும் மிகவும் ஈடுபாடும் உறுதியும் உடையவர்கள். நான் ஆசிரியையாக இருந்த காலத்தில் முஸ்லிம் மக்களின் பண்பாடு காரணமாக அவர்களிலும், அவர்களது மதத்திலும் பற்றுக்கொண்டேன்.

மட்டக்களப்பில் கிறிஸ்தவப் பாடசாலையில் கடமையாற்றினேன். அப்போது அங்கு கடமையாற்றும் கன்னியாஸ்திரிகளின் சேவை எனக்கு மிகவும் விரும்புடையதாகியது. என்னுடைய வாழ்க்கையும் ஒரு சேவைத்துறையில் செல்வதற்கும் அது வழிசமைத்துக்கொடுத்தது. நாம் எல்லா மதங்களினதும் நூல்களையும் கற்றுத்தெரிந்து கொள்ளவேண்டும். நாவலர் பெருமானுக்கு உலகில் புகழைத் தேடிக்கொடுத்தது பைபிளை மொழிபெயர்த்தமையே ஆகும் - என்றார் அவர். (ஒ-86)

# சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பாக நெகிழ்ச்சிப் போக்கே கடைப்பிடிப்பு!

## யாழ்.தலைமை இன்ஸ்பெக்டர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பாகப் போக்குவரத்துப் பொலீஸார் தொடர்ந்தும் நெகிழ்ச்சிப் போக்கையே கடைப்பிடித்து வருவதாக யாழ்.பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஹெட்டர் தர்மசிறி தெரிவித்தார்.

இது குறித்து தகவல் தருகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கானோர், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்துவிட்டு காத்திருக்கின்றனர். ஆயினும், அவர்களுக்கு உடனடியாக அனுமதிப்பத்திரங்களை வழங்கக்கூடிய ஆளணி வசதிகளுடன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் இல்லையெனத் தெரிகிறது.

இந்நிலையில், 'வாகனம் செலுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் அவசியம்' என்ற விதிமுறையை மாற்றவும் எமக்கு அதிகாரமில்லை. இது தொடர்பான தீர்மானங்களை பொலீஸ்மா அதிபரே மேற்கொள்ளமுடியும். இந்நிலைமை குறித்து அவருக்கு அறிவித்துள்ளோம். அவரது உத்தரவுக்கு அமைவாகவே கடந்த வருட இறுதிப் பகுதிவரையான தளர்வுப்போக்குக் கடைப்பிடிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் வாகனக் காப்புறுதி மற்றும் வரிப்பத்திரங்களை போக்குவரத்துப் பொலீஸார் தொடர்ந்தும் பரிசோதிப்பர். பொதுமக்களின் நன்மை கருதியே இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார் தலைமைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர். (ஒ-9)

# வீடுவீடாகப் படையினர் சென்று குடும்ப விவரங்கள் சேகரிப்பு

வலி.வடக்கு,ஜன.9

இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று குடும்ப விவரங்களைச் சேகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் இந்நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதேநேரம், சில கிராம அலுவலர்களிடம் சனத்தொகை மற்றும் வீடுகள் சம்பந்தமான விவரங்களை உடன் தரவேண்டுமெனப் படையினர் வலியுறுத்திப் பெற்றுச்சென்றதாகவும் கிராம அலுவலர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் அவசரகால நிலைமை நீக்கப்பட்ட பின்னருங்கூட சிவில் நிர்வாகக் கடமைகளில் தலையிடுவதை இத்தகைய நிகழ்வுகள் எடுத்துக்காட்டுவதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் பற்றி கிராம அலுவலர்கள் தமது பிரதேச செயலாளர்களுக்கு முறையிட்டுள்ளனர். (ஒ-86-88)

# ரி.ரி.என். நிறுவனத்தினரின் பரிசளிப்பு விழா ஜன.17இல்

யாழ்ப்பாணம்,ஜன.9

மாவீரர் தினத்தையொட்டி 'உதயன்' அனுசரணையுடன் ரி.ரி.என். தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய கவிதைப் போட்டியின் பரிசளிப்புவிழா எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த நவர்பர் மாதத்தில் ரி.ரி.என். நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட 'அறிவுச் செல்வம்' மற்றும் 'பாடும் சுரங்கள்' ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் அன்று இடம்பெறவிருக்கின்றது.

அன்றைய தினம் கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 'பாடும் சுரங்கள்' இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட கீழ்க்கண்டவர்களை உடன் அலுவலக இலக்கம் 222 3919 உடன் தொடர்புகொள்ளுமாறு ரி.ரி.என். சேவையினர் கேட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

பஞ்சரெட்ணம் குமரேஸ், கிறிஸ்ரன் பிரசாத், ஜெயபாரதி நவரெட்ணம், ரஞ்சனா நவரெத்தினம், திருநாவுக்கரசு மேரிநவரெத்தினம், ஆறுமுகம் இரவீந்திரன், ஜெயக்காந்தன், சுரசாகித்யன், ஜனனி (செடில்), சின்வன் கேதீஸ்வரன், தர்சினி, தாட்சாயினி ஜெயக்குமார், தர்மராசா சிவலோஜினி, எஸ்.நிமால் சங்கர்.

**நாளை**

மார்கழி 26
வெள்ளிக்கிழமை
(10.01.2003)
திதி : ஸப்தமி
காலை 7.00 வரை.
நட்சத்திரம்: ரேவதி
பின் இரவு: 4.02 வரை.
சுபநேரம் : 6.33 - 8.03
ராகுகாலம் : 11.03 - 12.33
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தனிமரம் தோப்பாகாது. ஆனால், தோப்பாவதற்கு அது துணைபுரிகிறது.

# பாட நூல் விநியோகத்தில் இந்த ஆண்டும் சீர்குலைவா?

## பெற்றோர்கள் விசனம்

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இந்த ஆண்டுக்குரிய இலவச பாடநூல்கள் முழுமையாக வழங்கப்படவில்லை என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளைவிடவும் இந்த ஆண்டில் விரைவாகப் பாடநூல்கள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், சில பாடங்களுக்குரிய புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை.

முதலாம் தவணை ஆரம்பமாகி ஒரு வாரம் கடந்துவிட்ட நிலையிலும் தமது பிள்ளைகளுக்குரிய பாடநூல்கள் முழுமையாகக் கிடைக்காமையால் கடந்த ஆண்டுகளைப் போல பாடநூல் விநியோகத்தில் இம்முறையும் சீர்குலைவு இடம்பெறுமோ என்று பெற்றோர்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை - தரம் 5இற்கு இந்த ஆண்டுதொடக்கம் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆயினும், தரம் 5 மாணவர்களுக்கு இதுவரையும் சமயம் மற்றும் தமிழ் ஆகிய இரு பாடநூல்களே வழங்கப்பட்டுள்ளன. இதனால் கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட நூல்களையும் படிக்கமுடியாது புதிய பாடநூல்களும் கிடைக்காத தரம் 5 மாணவர்களும் ஆசிரியர்களும் அவதியுற நேரிட்டுள்ளது. (ஒ-10)

# பரவி வரும் காய்ச்சலால் இங்குவர பலருக்கு அச்சம்!

குடாநாட்டில் பரவிவரும் காய்ச்சலின் காரணமாக இங்குள்ள சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பிரதிநிதிகளைக் குடாநாட்டுக்கு இப்போது வருகை தரவேண்டாம் என்று எச்சரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகக் குடாநாட்டில் பரவிவரும் சிகிச்சைக்குக் கட்டுப்படாத காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்களால் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். இவ்வாறான நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வர எண்ணும் தமது உறவினர்களை இப்போது இங்கு வரவேண்டாமென அவர்கள் தடுத்து வருகின்றனர்.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது பிரதிநிதிகளை இங்கு வரவேண்டாமென அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இங்கு வருகைதரவிருந்த உலக உணவு நிறுவனத்தின் அதிகாரிகள் கிளிநொச்சி வரைக்கும் வந்து பின்னர் இந்த எச்சரிக்கை காரணமாக மீண்டும் கொழும்புக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாக அறியமுடிகிறது. (ஒ-10)

## சாவகச்சேரியில் பாதுகாப்புச்சேவை

தென்மராட்சி,ஜன.9

கடந்த எட்டு வருடங்களின் பின்னர் சாவகச்சேரி நகரத்தில் தனியார் பாதுகாப்புசேவை கடந்த முதலாம்திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தின் அனுசரணையுடன் இந்த பாதுகாப்புச் சேவை நடத்தப்படுவதாகத தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## மாணவரை வரவேற்கும் விழா

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ)

## ஒயில் வகைகளை எடுத்து வருவது இடைநிறுத்தம்

அரியாலை,ஜன.9

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் வாகனங்களுக்கான 'ஒயில்' வகைகளை கொழும்பில் இருந்து தருவிப்பதை இடைநிறுத்த முடிவு செய்துள்ளதாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

அவை மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் இருந்து பரல்களில் எடுத்துவரும் ஒயில்கள் விற்பனையின்றி கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த ஒயில் பரல்களை பாதுகாப்பான முறையில் வைத்துப் பேணுவதற்கு இடவசதி கிடையாது. ஆகவே, ஒயில் வகைகளை எடுத்துவருவதை தற்போது நிறுத்துவதற்கு கூட்டுத்தாபனம் முடிவுசெய்துள்ளது.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் தனியார் முகவர்கள் வாகன ஒயில்களை தருவித்து கடனடிப்படையில் சிறுவியாபாரிகளுக்கு விநியோகிப்பது கூட்டுத்தாபனத்தில் ஒயில் விற்பனையின்றி முடங்கிக் கிடப்பதற்கு மற்றுமொரு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-17)

## உயர்தொழில்நுட்ப கல்லூரியில் மாலை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.தேசிய உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் மாலைநேர வகுப்புகள் அடுத்த மாதம் 13ஆம் திகதி முதல் ஆரம்பமாகுமெனக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது கிழமைநாள்களில் குறிப்பாக பகல்நேர வகுப்புகளே நடைபெற்று வருகின்றன. அடுத்த மாதம் முதல் சனி, ஞாயிறு மற்றும் மாலை நேர வகுப்புகள் யாவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இம்முறை 200 மாணவாகள் மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-12)

## டிரக்டரிலிருந்து தவறிவிழுந்த வயோதிபர் மரணம்!

கல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திர பெட்டியின் விளிம்பருகே அமர்ந்து பயணஞ்செய்த வயோதிபர் ஒருவர் தவறிவிழுந்ததில் மரணமான சம்பவம் கடந்த திங்கட்கிழமை நாவற்குழியில் இடம்பெற்றது.

கைதடியைச் சேர்ந்த சீனியர் செல்லர் (வயது 65) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் பெட்டியில் அமர்ந்து பயணம் செய்ததாகவும் - உழவு இயந்திரம் வீதியிலிருந்த பள்ளம் ஒன்றில் இறங்கி ஏறியபோது இவர் தவறி விழுந்து படுகாயம் அடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இந்த நபர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சிகிச்சை பயனளிக்காது மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-180)


### தேவை

நகை வேலைக்குரிய
மெசின்கட் பட்டம்
வெட்டக்கூடிய மிகவும்
திறமையுள்ளவர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பா.கண்ணன்
594/2, நாச்சிமார் கோவிலடி,
T.P. No. 222 54,81 (12346)


## ஐந்தாண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 04 - 1928

உதிர்வு 05 - 01 - 1998

அமரர்
**இராஜரட்ணம் அருளானந்தன்**
*(இளைப்பாறிய பொலீஸ் லிகிதர்)*

அப்பா!

உங்கள் ஆத்மா நல்லூரான் திருப்பாதம்
கலந்தும் உங்கள் நிழற்படம் கண்டு
கண்மடலில் நீர் நிரம்புதே.

*உங்கள் ஆத்மசாந்திக்கு:*
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*82/4, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12883)

## 45ஆவது நாள் நினைவு

மலர்வு 12 - 12 - 1976



உதிர்வு 26 - 11 - 2002

**செல்வி கிறிஸ்ரலின் உதயபானு**

படிப்பை முடித்து பட்டமும் பெற்றபின்
சிலுவையில் அறையும் வஞ்சக உலகில் - உனக்கு
வாழ்வு வெறுத்ததோ?. எம்மை விட்டு இன்றெங்கு
நீ சென்றாய்?

(12872)

நிரந்தர முகவரி:
*"குறளகம்"*
*கரவெட்டி கிழக்கு.*

தற்காலிக முகவரி:
*இல.115, பாலி நகர்,*
*வவுனிக்குளம்.*

பிரிவால் வாடும்:
உன் அம்மாவும்,
உறவினரும்.


# INFORMATION TECHNOLOGY PARK

**Ministry of Rehabilitation, Resettlement & Refugees,**
**272, Stanley Road, Jaffna.**

Telephone:- 021-2223641 E-mail:- itp@sltnet.lk

I T P ark

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 2003ஆம் ஆண்டின் முதலாம் பருவத்திற்குரிய கணனிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 11.01.2003 தொடக்கம் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### Certificate Courses

| Subject | Duration | Fee | Subject | Duration | Fee |
|---|---|---|---|---|---|
| Word | 3 | 1000/= | C/C++ | 4 | 1800/= |
| Excel | 3 | 1000/= | Visual Basic | 4 | 1800/= |
| Access | 3 | 1000/= | Java | 4 | 1800/= |
| Page Maker | 3 | 1000/= | Oracle | 4 | 1800/= |
| Corel Draw | 3 | 1000/= | Internet & E-Mail | 4 | 1800/= |
| Auto CAD | 3 | 1000/= | Hardware | 4 | 1800/= |
| Webpage & Graphics Design | 4 | 1800/= | HTML & Java Script | 4 | 1800/= |

### Diploma Courses

| Subject | Duration | Fee |
|---|---|---|
| Dip. in Ms-Office | 5 | 2800/= |
| Dip. in DTP | 5 | 2400/= |
| Dip. in Hardware Technology | 6 | 3200/= |
| Dip. in Information Technology | 4 | 4750/= |
| Dip. in Computer Programming | 6 | 5500/= |

### Online Course (Specially for workers)

**Diploma in PC Application**
3 Months - 2750/=
*(Week day Morning & Evening Classes)*

### Workshop Classes

| Classes | Hours | Fee |
|---|---|---|
| Hardware | 20 | 1000/= |
| Internet & E-mail | 20 | 1000/= |
| Computer Typesetting | 20 | 1000/= |
| Computer Awareness For beginners | 20 | 250/= |
| Cyber Kids Membership (சிறுவர்களுக்கானது) | 3 Months | 500/= |

(6-12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட 3 மாத பயிற்சியில் இணைந்துகொள்ளலாம்)

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு திகதி | - 31.01.2003 |
| வார இறுதி வகுப்புகள் ஆரம்பம் | - 01.02.2003 |
| வாரநாள் வகுப்புகள் ஆரம்பம் | - 03.02.2003 |

சகல கற்கைநெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூபா 250/= மட்டுமே.

*குறிப்பு:* கணனி பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்கள் 20.01.2003 தொடக்கம் 31.01.2003 வரை நடைபெறும் Computer Awareness Programmeஇல் இணைந்துகொள்ளலாம். வகுப்புகளுக்கு முன்னோடியாக, குறைந்த கட்டணத்துடன் இவ்விரிவுரைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**Centre for Information Technology**

*For further Details:*
**Course Manager.**

(சி-25881)

*Information:*
**Director.**

# சிங்களவரின் தவறான அணுகுமுறையே பிரச்சினை விஸ்வரூபமெடுக்க காரணம்

**'ஈழம் என்பது சுலோகம் மட்டுமே. இருப்பினும் அதை நாம் தவறாகப் புரிந்துகொண்டோம். விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் ஈழத்தைப் பெறுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் எனச் சிந்தித்தோம். இந்நோக்கில் நாம் (சிங்களவர்கள்) அணுகியதே தமிழ் மக்களின் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுக்கக் காரணமாகும். விடுதலைப் புலிகளுடன் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் தோல்விக்கு இதுவே காரணமாகும்' - இப்படிக் கூறுகிறார் பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் பீட மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் எம்.ஓ.ஏ.டி.சொயிசா. "சிலுமின" வார இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* ஐ.தே.முன்னணி அரசு பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. இந்த ஒரு வருட காலத்தில் அரசு விடுதலைப் புலிகள் அமைபபுடன் பேச்சு நடத்தி உடன்பாடொன்றை எட்டுவதன்மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்காக பெரும் பிரயத்தனம் எடுத்துக்கொண்டது. கடந்த ஒரு வருட காலத்தில் அரசின் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து தங்களது கருத்தென்ன?

*பதில்:* ஐ.தே.முன்னணி அரசு மேற்கொண்டுவரும் இச்சமாதான முயற்சி ஒரு சிரமமான பணியாகும். இந்த அரசு பதவியேற்றதன் பின்னர் இனப்பிரச்சினை தொடர்பான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் மற்றும் நலிவடைந்து போயுள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் ஆகிய இரு பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியேற்பட்டது. இவ்விரு விடயங்களும் சிரமமின்றி இலேசாகச் செய்துமுடிக்க முடியாத பணிகளாகும். கடந்த இருபது ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்தத்தின்போது, உலகத்தில் மிகப் பிரபலமான 'கெரில்லா' அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்புடன் மோதி அவர்களை வெற்றிகொள்ள முடியாதென்ற கருத்து சமூகத்தில் நிலைத்துவிட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பினால் கைப்பற்றப்பட்டதொரு நிலப்பிரதேசம் உள்ளதை நாம அனைவரும் அறிவோம். அதிகார பூர்வமாகவோ அல்லது அதிகார பூர்வமற்ற வகையிலோ அவர்கள் ஆட்சியொன்றினைப் பேணிவந்தனர். தனியான நீதிமன்றம், காவல்துறை என்பவற்றையும் அவர்கள் கொண்டிருந்தனர். அரசொன்றினை நிறுவ நான்கு அடிப்படைகள் அவசியமாகும். அதற்கான நிலப்பரப்பு, குடிசனங்கள், அரசு மற்றும் தன்னாட்சியுரிமை ஆகியனவே அந்த நான்கு அடிப்படை அவசியங்களாகும். அவர்கள் வசம் ஒரு நிலப்பரப்பு இருந்தது. அங்கு ஒரு தொகை மக்கள் வாழ்ந்தனர். தமக்கென ஒரு அரசை நிறுவியிருந்தனர். அவர்களிடம் இல்லாதிருந்தது தன்னாட்சியுரிமை மட்டுமேயாகும். இவற்றை ஏற்றுக்கொள்வதும் விடுவதும் வேறு விடயம். அரசொன்றையும் அதன் அங்கங்களான பரிவாரங்கள் போன்ற வகையில் இராணுவம், பொலீஸ், நீதிமன்றம் மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஆகியவற்றையும் அவர்கள் கொண்டிருந்தனர். இவற்றிலிருந்து அவர்கள் எந்த அளவுக்குப் பிரபல்யம் பெற்றிருந்தனர் என்பதனைத் தெரிந்துகொள்ளலாம். கடந்த காலத்தில் அரச படைகளுக்கெதிரான யுத்தங்களில் பெரும் வெற்றிகளை ஈட்டியிருந்தனர். இவ்வகைப் பின்னணியில்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானித்தார். அது இலேசான தொரு முயற்சியல்ல.

அரசைவிட பலமும் திறமையும் கொண்ட, கையோங்கிய நிலையிலுள்ள தரப்பொன்றுடன் பேச்சு மேசையில் அமர வேண்டிய சிரமமான நிலையில் அரசு இருந்தது. அவர்களுக்குச் சமமாக அமர்ந்து பேசக் கூடிய நிலையில் அரசு இருக்கவில்லை. அவ்வகையான பின்னடைவுற்ற நிலையில் அரசு இருந்தது. இவ்வாறானதொரு மிகவும் சிரமமான காரியத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைகளை நுழைத்துக்கொண்டார். இதனைப் பற்பல விதமான கருத்துக்களில் விமர்சிக்கலாம். சமாதானம் என்பதை என்ன விதத்தில் கருதமுடியும்? யுத்தத்தில் ஈடுபடுவதற்கு பதிலாக, நாட்டின் சாதாரணப் பொதுமக்களின் வாழ்க்கையை நிலைநிறுத்தி, பொதுமக்கள மத்தியில் சமாதானமு[illegible], சகோதரத்துவமும் கொண்ட[illegible] சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதே சமாதானம் என்பதன் எதிர்பார்ப்பாகும். இவ்வாறானதொரு நிலைக்கு விடுதலைப புலிகள் அமைப்பினரை ஒரு இரவிலோ ஒரு நாளிலோ, வாரமொன்றிலோ அனறேல் ஓரிரு வருடங்களிலோகூட கொண்டு வருவது கடுமையான பணியாகும். இந்தப் பாரதூரமான நிலைமையை அதற்கான வகையில் ஆராய்ந்து உண்மை நிலைமையைப புரிந்துகொள்ளவேண்டும். சமாதான முயற்சிகள் குறித்து எவர் எவ்வகை கருத்தைத் தெரிவித்தபோதும், கடந்த ஓராண்டு, காலத்தில் யுத்தம் இடம் பெறாத விதத்தில் நாட்டைக் கட்டிக் காக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முடிந்திருக்கிறது. சிலவேளைகளில் பேச்சுமூலம் எதிர்பார்க்கும் சில விடயங்கள் நடவடிக்கையின்போது அதே விதத்தில் அமைவதில்லை.

'கொடுத்துப் பெறும் குறிக்கோள்' என்ற (Give And Take Policy) சித்தாந்தத்தின் அடிப்படையில் நாம் இச்சமாதானப் பேச்சுகளை மேற்கொள்ளமுடியும். எங்களுக்குத் தேவைப்படும் அனைத்தையும் விடுதலைப் புலிகள் அமைப்பால் வழங்கமுடியாது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதையும் வழங்காமல் இச்சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாது. கட்டாயமாக அவர்கள் கோருவதை வழங்க நேரிடும். இல்லையெனில் நாம் அவர்களை மீண்டும் காட்டுக்குள் செல்ல வைக்க வேண்டி ஏற்படும். ஆனாலும் விடுதலைப் புலிகளது கோரிக்கைகள் யாவற்றையும் எம்மால் நிறைவேற்ற இயலாது.

அவ்விதம் விடுதலைப் புலிகள் கோருபவற்றை வழங்க முற்பட்டால் தென்பகுதியில் உருவாகும் பாரதூரமான சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். மறுபுறத்தில் எங்களுக்கென யாவற்றையும் பெற்றுக்கொள்ளவும் முடியும். 1940களில் வாழ்ந்த தமிழ்மக்களை அடிப்படையாக வைத்தே நாம் கருத்தை உருவாக்கியுள்ளோம். அவ்வகையான மனப்போக்குடன் இன்று விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் நாம் நடவடிக்கையில் ஈடுபடமுடியாது. நாங்கள் எவற்றைக் கொடுத்து, எவற்றை எம்வசம் வைத்திருக்கப் போகிறோம் என சமாதானப் பேச்சுகளின்போது மிகக் கவனம் செலுத்தித் தீர்மானித்தல்வேண்டும். உண்மையில் சமாதானப் பேச்சுகள் இத்தகைய இடத்தை (தீர்மானிக்கும் நிலையை) இன்னும் அண்மிக்கவில்லை. தீர்மானிக்கும் நிலைமையை அடைவதில் உள்ள சிக்கல்களை எவ்வாறு நீக்கிக்கொள்வது என்பது குறித்தே இப்போது பேசப்படுகிறது. இந்தவேளையில் நாங்கள் எதிர்பார்த்த அல்லது புரிந்துகொண்ட சமாதானம் உருவாகிவிட்டது எனக் கூறமுடியாது. ஆனால் இப்பயணத்தைத் தொடர்வதற்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கான சூழல் கடந்த ஒரு வருட காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்விதம் உருவாக்கப்பட்ட சூழலைக் கெடுத்துவிடாமல் முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

## இடைக்கால நிர்வாகம் தொடர்பான பல்வேறு கருத்துகள்

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரசுக்குமிடையே பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் பேச்சினூடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதே தமது விருப்பமெனத் தெரிவித்துள்ளனர். அவ்வேளையிலிருந்து பேச்சுகளின்போதும் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கோரிக்கை இப்போது பின்தள்ளப்பட்டுள்ளதே?

*பதில்:* இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்து விடுதலைப் புலிகள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்துக்கள் உருவாகின. இடைக்கால நிர்வாகம் வழங்குவது தனி ஈழம் வழங்குவதற்கான முதற்படியென தென்பகுதியைச் சேர்ந்த கடுங்கோட்பாட்டாளர்கள் சிலர் கூற ஆரம்பித்தனர். அத்தோடு இவ்விடைக்கால நிர்வாக சபையை உருவாக்கத் தேவையான நாடாளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையைப் பெறத் தாம் ஒத்துழைக்கப் போவதில்லையெனவும பொ.ஐ.முன்னணியினர் தெரிவித்தனர். கதிர்காமர் கூட இவ்விடயத்தில் மிரட்ட ஆரம்பித்தார். அதேபோலவே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸலிம்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். இடைக்கால நிர்வாகம அமுல் செய்யப்பட்டால் விடுதலைப் புலிகளின் அதிகாரங்களுக்கு உட்பட நேரலாம் என கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அஞ்சினர்.

அதேபோன்று இடைக்கால நிர்வாகசபையை எவ்வாறு அமைப்பது என்பது தொடர்பான பிரச்சினையும் இதற்கு ஒரு காரணமாகும். இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் எவை? அந்தச் சபை எவ்வாறு அமைக்கப்படவுள்ளது? என்பது குறித்து எவராலும் எதுவும் தீர்மானமாகக் கூறமுடியவில்லை.



ஆனால், இவற்றைக்கொண்டு, விடுதலைப் புலிகள் அமைப்பு இடைக்கால நிர்வாகசபை யோசனையைக் கைவிட்டுவிட்டதாக எம்மால் கூற முடியாது. இவையாவும் தற்போது முன்னுரிமைபெறாத நிலையிலுள்ளன. சிலவேளை, இடைக்கால நிர்வாகத்தைவிட அதிக அதிகாரங்களைக் கொண்ட முறையொன்றினை அவர்கள் எதிர்பார்ப்பதாக அவர்களது அண்மைய கருத்து வெளியீடுகளிலிருந்து தெரியவருகிறது. அவர்களது தற்போதைய எதிர்பார்ப்பு சுயாட்சி அலகாகும். அவசியமற்ற விதத்தில் தென்பகுதிக் கடும் கோட்பாட்டாளர்கள் இடைக்கால நிர்வாக அமைப்பு பயங்கரமானதொன்றெனப் பொதுமக்களுக்குக் காட்ட விழைந்தனர். இது தெரியாத விடயம் குறித்து வெளிப்படுத்தும் கருத்துக்களாகும். இடைக்கால நிர்வாக சபைக்கான உடன்பாடு காணப்படுமாயின், அது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய எல்லா இனத்தவரும் ஒன்றிணைந்து உருவாக்கும் முயற்சியாயமையும். அத்துடன் இது சிறந்ததொரு ஜனநாயக நடவடிக்கையாயும் அமையும்.

இதில் விடுதலைப் புலிகள் அமைப்பைப்போன்று, ஏனைய தரப்புகளும் பங்காளர்களாவர். ஆனால், தற்போது விடுதலைப் புலிகளது ஆதிபத்தியமே உறுதிப்படுத்தப்படுகிறது. இது தெற்கின் கடும் கோட்பாட்டாளர்களால் விளைவிக்கப்பட்ட நாசமாகும்.

*கேள்வி:-* தனியான இராச்சியம் நிறுவுதல் என்ற தமது 'ஈழம்' என்ற கனவை ஒரு புறம் ஒதுக்கிவிட்டா, விடுதலைப் புலிகள் அமைப்பு சுயாட்சி பற்றிக் கூறிவருகிறார்கள்?

*பதில்:-* தமிழ் மக்களது உணர்வுகளைத் தூண்டி தம்பக்கம் ஈர்த்து, அவர்களைத் தம்பின்னால் இணைதது வைத்துக்கொள்வதற்கான உபாயமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஈழ இராச்சியக் கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். 700 தொடக்கம் 800 வரையான சதுரமைல்களைக் கொண்ட தனியான அரசை அமைப்பது கடினம். தனி இராச்சியம் அமைப்பதாயின் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். அதற்காக தென்னிந்தியாவில் தனியான தமிழ் இராச்சியமொன்று உருவாக வேண்டும். அவ்வாறு உருவானால் மாத்திரமே ஸ்ரீலங்காவில் ஈழ ராச்சியத்தை அமைக்கமுடியும்.

சர்வதேச ரீதியில் இதற்குப் பல உதாரணங்கள் காட்ட இயலும். ஸ்ரீலங்காவில் வதியும் தமிழ்மக்களுக்கு தமக்கென தனியானதொரு அரசை உருவாக்கும் பலம் கிடையாது. அப்படியானதொரு தனி அரசை நிறுவ இந்தியா இடமளிக்குமா?

ஈழம் என்பது ஒரு சுலோகம் மாததிரமே. ஆனால், நாம் இதனைத் தவறான விதத்தில் புரிந்துகொண்டோம். விடுதலைப் புலிகள் அமைப்பை நோக்கிய கோணத்தில், தமிழ்மக்களின் எல்லா நடவடிக்கைகளையும், அவை ஈழத்தை அடைவதற்கான முயற்சிகள் என்ற கோணத்திலேயே - நாம் நோக்கினோம். தவறான கோணத்தில் அமைந்த எமது நோக்கின் காரணமாகவே தமிழர்களுடனான சச்சரவு வியாபித்து வளர்ச்சியுற்றது. விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட முன்னைய பேச்சுக்கள்கூட இத்தவறான கணிப்பின் காரணமாகவே தோல்வியைத் தழுவின. ஏனெனில், நாம் அதிகளவிலான அவநம்பிக்கையுடனேயே பேச்சுக்களில் கலந்துகொண்டோம். விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கிறது என நாம் எண்ணினோம். ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை 'ஈழம்' என்பது வெறும் கனவு மட்டுமே. நாம் அதனைப் பெரிதாகக் கருதி காரியங்களைக் கெடுத்துக்கொண்டோம்.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த இருபது ஆண்டுகளாக ஏகாதிபதிகள் போன்றே செயற்பட்டனர். சமாதானப் பேச்சுக்களில் இணைந்துகொண்ட இந்தவேளையிலும்கூட அவர்களது அணுகுமுறை அவ்விதமே அமைந்துள்ளதைக் காண முடிகிறது. இது அவ்வமைப்பினரை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காக சர்வதேச சமூகமும் அரசும் எதிர்நோக்கும் முக்கிய அச்சுறுத்தல் என்பதில் சந்தேகமில்லை. பாரதூரமான இந்த அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்நோக்கலாம்?

*பதில்:-* விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரையான அவர்களது பயணம் ஏகாதிபத்திய அரசியல் நடவடிக்கைகளாகவே அமைந்தன. பிரபாகரனிலிருந்து கீழ்மட்டத்தினர் வரையிலும் இந்த ஏகாதிபத்தியப் போக்கே காணப்படுகிறது. கடுமையானபோக்கு, முரண்டுதல், விட்டுக்கொடாமை ஆகிய இயல்புகளே அவர்களிடம் காணப்பட்டன. கொஞ்சங்கூட அனுதாபம் அற்ற கொலைகள், தாக்குதல்கள் ஆகியவற்றை அவர்கள் மேற்கொணடனர். அவர்கள் தமது அதிகாரத்தின்மூலமே வாழ்ந்தனர். அவர்கள் உருவானதும் வளர்ந்ததும் அந்தச் சூழ்நிலையிலேயேயாகும். இது பாஸிஷ அடிப்படையில் உருவாகிய வழக்கமாகும்.

உதாரணமாக தேர்தலில் நின்று அதிகாரத்தைக் கைப்பற்ற பிரபாகரன் விரும்புவாரா? அதற்கு அவர் பழக்கப்பட்டவரல்ல. இன்று பிரபாகரனுக்குள்ள கௌரவம், மதிப்பு மற்றும் அதிகார சக்தி யாவும் ஜனநாயக வழிக்கு அவர் திரும்பிய பின்னர் குறைவடையும். பிரபாகரனோ, விடுதலைப் புலிகள் அமைப்போ இவ்விதம் தமது அதிகாரத்தை இழக்க விரும்புவார்களா? தெற்கில் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக எத்தனை கொலைகள் இடம்பெறுகின்றன." விடுதலைப் புலிகள் அமைப்பினரை ஜனநாயக வழிக்குக் கொண்டுவருவது இலேசான காரியமல்ல. விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு ஜனநாயக நடவடிக்கைகளில் எதுவித அறிவும் கிடையாது. யுத்தத்தை நிறுத்துவதால் மட்டும் சமாதானத்தை உருவாக்கமுடியாது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீண்டும் சிவில் நிர்வாகம் நிலைநாட்டப்படுவதற்காக அப்பகுதிகளிலுள்ள சிவில் சமூகங்களை மீண்டும் உருவாக்கவேண்டும். இதன்பொருட்டு விடுதலைப் புலிகள் அமைப்பை ஜனநாயக ரீதியாக இயங்கவைக்கப்படவேண்டும். இவையே இன்று சமாதான முயற்சிகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாகும். உலகத்தில் தலைசிறந்த 'கெரில்லா' அமைப்பொன்றுடன் பேச்சுகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பை ஜனநாயக வழியில் இயங்கச் செய்வதற்கான அவசிய திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பை ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வைப்பது யுத்தத்தை விடச் சிரமமான காரியமாகும். சமாதானப் பேச்சுகளின்போது இது தொடர்பாக மிகுந்த கவனம் எடுக்கப்படுதல் அவசியமாகும். ஆனால், இவை யாவும் இன்றோ, நாளையோ அல்லது நாளை மறுநாளோ செய்து முடிக்கக்கூடிய விடயங்களல்ல.

எம்மால் தென்பகுதியில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முடியாதுள்ளது. தெற்கில் தற்போது பூரண ஜனநாயகக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்றோ நன்கு ஜனநாயக முறையில் அமைந்த அரசு இருக்கிறது என்றோ என்னால் நம்ப இயலாது. 1970இற்குப் பின்னர் எமது நாட்டில் இடம்பெறும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள்மூலம் நமது நாடு பெரிய அளவிலான ஆதிபத்திய இராச்சியத்துக்கான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில் தெற்கில் நாம் ஆதிபத்திய அரசின்கீழேயே வாழ்ந்து வருகிறோம். தெற்கில்கூட என்னால் ஒரு ஜனநாயக நடவடிக்கையைக் காணமுடியவில்லை. தெற்கில் ஜனநாயகச் செயற்பாடுகளைக் கைவிட்ட நாம் விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயகமுறையில் இயங்கவேண்டுமென எவ்வாறு குரல்கொடுக்கமுடியும்.

விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பவைப்பதற்கு ஜனநாயகமுறையும், அரசியல் நிர்வாக முறையும் உருவாக்கப்படவேண்டும். அதற்காக வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக அரசியல் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக நடவடிக்கைக் குழுவொன்று ஏற்படுத்தப்படல்வேண்டும். சமாதானப் பேச்சுக்களின் போது இது அடிப்படையான முயற்சியாக அமையவேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட தமிழ்மக்களிடம் ஜனநாயக சமூக நடைமுறை பேணப்படவேண்டும்.

**தமிழில்: வியெஸ்ரீ**

*கேள்வி:* இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக ஸ்ரீலங்கா அரசு தான் கடைக்கொள்ளும் நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்யவேண்டுமெனத் தாங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:* ஆம். அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். வடக்கில் போன்றே தெற்கிலும் ஜனநாயக நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன்மூலமே இப்பிரச்சினையை எம்மால் தீர்க்கக்கூடியதாயிருக்கும்.

*கேள்வி:* பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக் காலத்தில் சீரழிந்துபோய்விட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதாகப் பொதுமக்களுக்கு வாக்குறுதியளித்தே ஐ.தே.முன்னணி ஓராண்டுக்கு முன் பதவிக்கு வந்தது. இந்த நாட்டின் பொது மக்களை வாட்டும் வாழ்க்கைச் செலவைக் குறைத்து, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போமென ஐ.தே.முன்னணியினர் கூறிவந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால், கடந்த ஒரு வருடகாலத்தில் வாழ்க்கைச் செலவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் எவ்விதத்திலும் குறையா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அடாவடிக்காரர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவது யார்?

அப்பாவிப் பொதுமக்களையும், அமைதியாக வாழ விரும்புபவர்களையும் அடாவடித்தனம் புரிபவர்களிடமிருந்து காப்பது யார் என்பது குறித்து பொதுமக்களிடம் பல்வேறு வகையான சந்தேகங்கள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அடாவடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுவினரின செயற்பாடுகள் குறையும் அல்லது நிறுத்தப்படுமென மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், இப்போது மக்கள் பாரிய ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட யார் முன்வரவுள்ளார்கள் என்பதே மக்கள் மத்தியில் தற்பொழுது எழுந்துள்ள முக்கிய வினாவாகும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து அட்டகாசம் புரிந்தவர்களுக்கு மேலும் ஒரு படியாக வெடிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய ஒரு நிலைமையில் யாழ் மாவட்டத்தில் மேலும் அடாவடித்தனங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

அமைதியை நிலைநிறுத்துவதில் அக்கறை காட்டவேண்டிய சட்டத்தின் பாதுகாவலர்கள்கூட லஞ்சத்திற்கு அடிமையாகிக் கண்டுங்காணாததுபோல் நடப்பவர்களாகவும், புலிகளினுடைய நடவடிக்கைகளை சட்டத்திற்கு புறம்பானது என்று கூறி பிரச்சினைகளை மேலும் வளர்ச்சி அடையத் தூபம்போடுபவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

சமீபத்தில் கடையொன்றை உடைத்து திருடிய சிறுவன் ஒருவன் கடை உரிமையாளரினால் கடையினுள் வைத்து பிடிக்கப்பட்டான் பின்னர் கடை உரிமையாளர் சிறுவனின் தாய் தந்தையரிடம் சென்று மகன் திருடியபோது கையும்களவுமாக பிடிக்கப்பட்டுள்ளார், அவரை வந்து கூட்டிச்செல்லும்படி வேண்டினார்.

ஆனால், அப் பெற்றோர்கள் இதற்கு செவிமடுக்காது 'அவன் குழப்படி செய்பவன், நீங்கள் என்ன வென்றாலும் செய்யுங்கள்' என்று கூறிவிட்டனர். பின்னர் குறிப்பிட்ட சிறுவன் மதத்தலைவர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டான்.

ஆனால், சிறுவனின் பெற்றோர்கள் மகன் களவெடுத்ததையும் கடை உரிமையாளர் தம்மிடம் வந்து கூறியதையும் மறைத்து தமது மகன் குறிப்பிட்ட கடை உரிமையாளரினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சட்டத்தை பாதுகாப்பவர்கள் என்று கூறிக்கொள்பவர்களிடம் முறையிட்டதைத் தொடர்ந்து கடை உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார்.

**ரட்ணராஜா**
*கொக்குவில்*

கடைஉரிமையாளர் உண்மையை எடுத்துக்கூறிய போதிலும் அவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுதும் கூட சில இளைஞர்கள் வீதிகளில் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால், நடப்பவை அவர்களுக்கு சாதகமானதாகவே அமைகின்றன. ஊரில் நடக்கும் களவுகள், கசிப்பு உற்பத்தி, குற்றச்செயல்கள், சம்பந்தமாக கிராம அலுவலர்கள் நடவடிக்கையெடுத்து பொலீஸாரிடம் முறையிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லையென கிராம அலுவலர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

சமீபத்தில் அரியாலைப் பகுதியில் சட்டத்திற்கு புறம்பான மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் சண்டை நடந்தது. சண்டை ஆரம்பித்து சில நிமிட நேரத்தில் உரிய இடத்திற்கு வந்த சட்டப் பாதுகாவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாது "சந்தோஷங்களைப் பெற்றுச்சென்றதாக அப்பகுதிப் பொதுமக்கள் கூறிக்கொள்கின்றனர்.


இதேவேளை, மோட்டார் சைக்கிள்களில் குழுவாகச் செல்வோர் கடை உரிமையாளர்கள் பெண்பிள்ளைகளின் பெற்றோர்கள் ஆகியோரை தொல்லைகளுக்கு உள்ளாக்குகின்றனர். ஆனால், இது தொடர்பாகப் பொலீஸார் நடவடிக்கையெடுப்பதில் அதிக அக்கறை காட்டுவதில்லை எனக் கூறப்படுகிறது.

கசிப்பு, சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்கள், கொலைகள், திருட்டுக்கள் என்று நாளுக்குநாள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இவற்றைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும், குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதிலும் பொலீஸார் எவ்வளவு தூரம் கவனம் செலுத்துகின்றனர், உண்மையாக நடக்கின்றனர் என்பதையிட்டு மக்கள் மத்தியில் கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன.

பொதுமக்கள் இந்தத் துன்பங்களைச் சகிக்கமுடியாது குற்றஞ் செயபவர்களைத் தாமே பிடித்து புலிகளின் அரசியல்துறைப் பணிமனைகளுக்குக் கொண்டுசென்றால் "பொலஸாரிடம் தெரிவியுங்கள்" என்றே கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் இத்தகைய அடாவடித்தனக்காரர்களைக் கட்டுப்படுத்துவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், புலிகளுக்கோ இவர்கள்மீது நடவடிக்கையெடுக்க முடியாது, மனித உரிமை மீறல், போர் நிறுத்த ஒப்பந்த மீறல் என்று கை விலங்குகள் போடப்பட்டுள்ளன.

அடாவடித்தனம் புரிபவர்கள்மீது நீங்களாவது நடவடிக்கையெடுங்கள் என்று பொதுமக்கள் புலிகளை வேண்டுகின்றனர். இதனால் அவர்களும் போய் 'ஏன் இப்படி செயற்படுகிறீர்கள்?' என்று கேட்டால் அடாவடித்தனக்காரர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் போர்




நிறுத்தக் கண்காணிப்புக் குழு போன்றவற்றிடம் சென்று வேறு விதத்தில் முறையிடுகின்றனர்.

இத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே புலிகள் முழுமையாக இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிச் செல்கின்றனர். இவை பொதுமக்களுக்கு பலத்த ஏமாற்றமாக அமைய, மறுபுறத்தே அடாவடித்தனம் புரிபவர்களுக்கு பெரும் கொண்டாட்டமாக அமைகின்றது.

தொடர்ந்தும் இம்மண்ணில் பயந்து கொண்டே நிம்மதி, அமைதி, சமாதானத்தை வேண்டுபவர்கள் வாழ வேண்டுமா? இல்லையேல் சட்டம் தனது கடமையை சரிவரச் செய்து இத்தகைய அடாவடித்தனம் புரிபவர்கள்மீது உரிய நடவடிக்கையெடுக்குமா என்பதே இன்று மேல் எழுந்துள்ள அதி உன்னதமான கேள்வியாகும்.

வீதிகளில் செல்லமுடியாது சமாந்தரமான முறையில் இளைய தலைமுறை சைக்கிள், மோட்டார் சைக்கிள் சவாரி. ஆனால், பொலீஸார் வீதியில் நின்று "ஹெல்மெட்" அணிந்துள்ளார்களா என்று பார்த்து குற்றப்பணம் அறவிடுவதிலேயே கவனம் காட்டுகின்றனர். சாரதி அனுமதிப் பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதி வரி உண்டா என்று பார்த்து தண்டம் விதிப்பவர்கள் மக்களின் பாதுகாப்பிற்கு இத்தகைய நடவடிக்கை அவசியமெனக் கூறியும் கொள்கின்றார்கள்.

ஆனால், வீதியில் பயணஞ்செய்ய முடியாமலும், பெண்கள் தனியே செல்லமுடியாமலும், வீடுகளில் அமைதியாக இருக்கமுடியாமலும் அடாவடிக்காரர்கள் அட்டகாசம் புரிவதை மட்டும் தடுக்க எவருமில்லை என்பதே வேதனையான விடயமாகும். ✦




## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு கனகேஸ்வரி

கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி முருகேசு கனகேஸ்வரி அவர்கள் 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பரிபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் மற்றும் சின்னையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் சிவபாலன் (யாழ். பல்கலைக்கழகம்), தேவபாலன் (ஜேர்மனி), தனபாலன் (திருகோணமலை), குணபாலன் (லண்டன்), சந்திரபாலன் (சுவிஸ்), ஜீவச்சந்திரமணி, சுந்தரபாலன் (லண்டன்), காலஞ்சென்ற கிருஸ்ணபாலன் மற்றும் நந்தபாலன் (நோர்வே), விஜயபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராஜராஜேஸ்வரி, ராஜகுலதேவி (ஜேர்மனி), கோசலா (ஆசிரியை, திருகோணமலை), கௌரி (லண்டன்), ராஜேஸ்வரி (சுவிஸ்), ஞானதேசிகன் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி), கமலவதனி (லண்டன்), பிரசாந்தி(நோர்வே), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி முரளீதரன் சுகாஸினி, சிவகரன், தயாளினி, வசீகரன், முகுந்தன், துளசா, தனுசலா, சிவனுஜா,பிரகாசினி, பிரசன்னா, ரனுசன், ரமிதன், மயூரதன், ஜனார்த்தன், ஜதார்த்திகா, கிருஜன், நந்துஜன், கிஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பானுஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல,7,புகையிரத வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(12957)

தகவல்:
பொ.ஞானதேசிகன்
(மருமகன்).

### C.C.J.ஜெயராஜ

*(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்,*
*இலங்கை மரக் கூட்டுத்தாபனம்)*

சங்கானை, தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட C.C.J.ஜெயராஜ அவர்கள் நேற்று (08.01.2003) புதன்கிழமை காலை அளவெட்டியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சமாதானவதியின் அன்புக் கணவரும் திருமதி ஜெயந்தி அசோக்குமார், அன்றூ ஜெயரஞ்சன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அருட்திரு.T.E.அசோக்குமார் (தென்னிந்திய திருச்சபை, அளவெட்டி மேற்கு), திருமதி பாரதி அன்றூ (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வன் நோயல் ஜெயந்தகுமார் எட்றியன், யோனத்தான் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கிருபைராஜா (அரச மரக் கூட்டுத்தாபனம்), யூகராசா மற்றும் புஸ்பராணி, செல்வராசா (வட்டக்கச்சி), புஸ்பதேவி (லண்டன்), புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*குருமனை,*
*தென்னிந்திய திருச்சபை,*
*அளவெட்டி.*

(சி-25885)

தகவல்:
அருட்திரு.T.E.அசோக்குமார்
(மருமகன்).

# ஒப்பந்த விதிகளின்கீழ் தனக்குள்ள கடப்பாட்டை பூரணமாக நிறைவுசெய்ய இராணுவம் தவறிவிட்டது!

## அன்ரன் பாலசிங்கம் குற்றச்சாட்டு

நொக்கம்பத்தொம்,ஜன.9

தாய்லாந்தின் நொக்கம்பத்தொம நகரில் கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில புலிகளின் தரப்புப் பேச்சுக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துகளில் ஒரு பகுதி நேற்றைய 'உதயனில்' பிரசுரமாகியிருந்தது. எஞ்சிய பகுதி வருமாறு:-

☆ *கேள்வி:-* சிறுவர்களைப் புலிகள தொடர்ந்து படைக்குத் திரட்டி வருகின்றார்கள் என்று 'நியூயோர்க் டைமஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதே?

☆ *பாலா:-* நாங்களும் அதைப் பார்த்தோம். அந்தச் செய்தி ஆதாரமற்றது. தவறானது. இது தொடர்பாக எமது ஆட்சேபக் கடிதத்தை பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்ப முடிவு செய்துள்ளோம். பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரும் இப்போது இயக்கத்தில் சேர்க்கப்படுவதில்லை. சிறுவரைத் திரட்டுவது என்ற கதைக்கே இடமில்லை.

☆ *கேள்வி:-* இந்தச் சமாதானப் பேச்சுகளுக்கு ஒரு காலவரையறை விதிப்பது பொருத்தமற்றது என்று அரசுத் தரப்புக் குழுத் தலைவர் அமைச்சர் பீரிஸ் கூறுகின்றாரே?

☆ *பாலா:-* அதை நான் அப்படியே ஆமோதிக்கின்றேன். இது ஒரு ஐம்பது ஆண்டுகாலப் பிரச்சினை. இதை ஒரு குறிப்பிட்ட கால எல்லைகுள் தீர்த்துவிடமுடியாது. இதற்குக் கால வரம்பு விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது; நியாயமற்றது.

☆ *கேள்வி:-* மனித உரிமைகள் விவகாரம் குறித்து என்ன பேசினீகள?

☆ *பாலா:-* தனி மனித உரிமைகள், மீறல்கள் குறித்து நாம் பேசவில்லை. ஒட்டு மொத்தமாக ஒரு சமூகத்தின் - தேசிய இனத்தின் - மனித உரிமைகள் குறித்தே நாம் பேசினோம்.

தமிழர்களுக்கு தனியான மொழி, கலாசாரம், வரலாறு, பாரம்பரியம், தாயகம் என்பன உள்ளன. அவர்கள தனியான ஒரு தேசிய இனம். இந்த அடிப்படையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அது அவர்களுடைய அடிப்படை மனித உரிமையும்கூட. இந்த அடிப்படையில்தான் தமிழர்கள் ஒரு சுயாட்சியைக் கோருகின்றார்கள. இதை அரசு அங்கீகரித்து அந்த உரிமையை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று இந்தப் பேச்சுக்களில் வலியுறுத்திப் பேசினோம்.

☆ *கேள்வி:-* பேச்சுகளில் எட்டப்படும் முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குறைபாடு காணப்படுகின்றதே?

☆ *பாலா:-* யுத்தம் நிறுத்தப்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. பேச்சுகள் தொடங்கி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், எமது மக்களின்



அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதனால், இவர்கள் பெரும் அவதிக்குள்ளாகுகின்றார்கள் என்பதை அரசுக்கு எடுத்துக் கூறினோம. உடனடியாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். முடிவு காணப்படவேண்டும். இல்லையேல் இந்த சமாதானப் பேச்சுகள் முன்னேற்றமடையமாட்டா என்பதையும் அரசுக்கு எடுத்துக் கூறினோம்.

☆ *கேள்வி:-* புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு பெப்ரவரி 23ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகுகின்றது. ஆனால் அதில் குறிப்பிடப்பட்ட பல அம்சங்கள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லையே?

☆ *பாலா:-* இதைத்தான் இப்போது அரசுத் தரப்பிடம் வலியுறுத்தியுள்ளோம். எமது மக்கள் மீள்குடியமர்வதை இராணுவம் தடுத்து வருவதும இப்படி ஒப்பந்தத்தில் நடைமுறைப்படுத்தப்படாத அம்சங்களில் ஒன்றுதான் என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி பாடசாலைகளிலிருந்து, கோயில்களிலிருந்து, பொதுக்கட்டடங்களிலிருந்து, வீடுகளிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும். ஆனால், இராணுவம் வெளியேறவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் வீடுகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு வெளியேறாமல் இருக்கின்றது. கோயில்களுக்குப் பொதுமக்கள போகமுடியாமல் இருக்கின்றார்கள். மீன்பிடித்தடைகள் பல இடங்களில் தொடர்கின்றன. இப்படி ஒப்பந்த ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அரசுக்கு அடித்துச் சொன்னோம்.

ஒப்பந்தத்தின்கீழ் தனக்குரிய கடப்பாடுகளைப் பூரணமாக நிறைவு செய்ய இராணுவத் தரப்புத் தவறிவிட்டது. ஆனால், நாங்கள் எமது வாக்குறுதிகள் மற்றும் எல்லா நிபந்தனைகளையும் செம்மையாக நிறைவேற்றியது மாத்திரமல்ல; பேச்சுக்களில் உறுதியுடனும் நேர்மையுடனும் பங்குபற்றி வருகின்றோம்.

ஆனால், அரசுத்தரப்பு அப்படி நடக்கவில்லை. பேச்சுகளுக்கு - மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு - எதிராக முட்டுக்கட்டைகளைப் போட்டவண்ணம் இருக்கின்றது.

*கேள்வி:-* 'விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும், ஈழக் கோரிக்கையைக் கைவிடவேண்டும்' அதன்பின்னர்தான் புலிகளோடு பேச்சு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் நடத்துகின்றதே?

*பாலா:-* ஆயுதங்கள் அவர்களுக்குத் தேவை என்றால் வந்து எடுத்துக்கொண்டுபோகச் சொல்லுங்கள். (சிரிப்பு). வன்னிக்கு வரட்டும். நாங்கள் கொடுப்போம். "காகம் கத்தி மாடு சாவதில்லை" என்ற ஒரு பழமொழி யாழ்ப்பாணத்தில் உண்டு. எனவே, அவர்கள் கத்திக்கொண்டு போகட்டும். விட்டுவிடுங்கள்.

*கேள்வி:-* பேச்சுத் தொடர்பாகத் தங்களுக்குக் கவலையளிக்கும் விடயம் என்ன?

*பாலா:-* களநிலைமை மாறவில்லை என்பதுதான் கவலைக்குரியது. மக்களின் அவலம் தொடர்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாதுள்ளனர். அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேசுவதைவிடுத்து, அவர்களது மனிதாபிமானப் பிரச்சினைகள் குறிதது் கவனிக்கவேண்டும் என்ற நெருக்குவாரம் சாதாரண மக்களிடமிருந்து கிடைத்துவருகின்றது. இதுதான் எமக்குக் கவலையளிக்கின்றது. எனவே, இத்தகைய விடயங்களின்பால் எமது சிரத்தையைத் திருப்பியுள்ளோம். இவற்றைக் கவனிக்க அரசுத் தரப்பும் இணங்கியுள்ளது.

*கேள்வி:-* இந்தச் சமாதானப் பேசசுகள் வெற்றிகரமான திசையில் நகர்வதாகக் கருதுகின்றீர்களா?

*பாலா:-* நிச்சயமாக. பல குறிப்பிடத்தக்க விடயங்களில் கணிசமான முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளனவே. இப்போதுதான் முதல் தடவையாக யுத்தநிறுத்தம் ஒரு வருடகாலத்துக்கும் அதிகமாகத் தாக்குப்பிடிக்கின்றது. அடிப்படை விடயங்கள் குறித்தும் முன்னேற்றகரமான ஆலோசனைகள், விவாதங்கள் நடத்தப்பட்டு பயனுள்ள முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, குறிப்பிடத்தக்க பெறுபேறாக - சாதனையாக - இதனை நான் கருதுகினறேன்.

புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்காக உபகுழு ஒன்றையும் நியமித்துள்ளோம். அது தொடர்பாக நாம் ஸ்தாபித்துள்ள சர்வதேச செயலகம் அடுத்தவாரம் முதல் செயற்படத் தொடங்குகின்றது. புனர்வாழ்வு மீள குடியமர்வுப் பணிகளை இவ்வாறு தொடங்கியுள்ளோம்.

என்றாலும், எமது மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு கடந்த ஒரு வருட காலத்தில் குறிப்பிடத்தக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளோம்.

அரசியல் விடயங்களில் கணிசமான முடிவுகளை எட்டமுடிந்த எமமால் மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைக்கு எதுவுமே செய்யமுடியவில்லை என்பது பெருங்குறை. அதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இயன்ற விரைவில் இவற்றை முன்னெடுப்பதற்கான முழுமுயற்சிகளிலும் ஈடுபட அரசு இணங்கியுள்ளது.

*கேள்வி:-* உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை தொடர்பாக உங்கள் பிரதிநிதிகள் குழுவுக்கும் அரசப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் பெரிய சந்தேகங்கள், அவநம்பிக்கை, கருத்து வேறுபாடு என்பன நிலவினவா? அவர்களுடனான உறவு எப்படி இருந்தது.

*பாலா:-* பிரதிநிதிகள் குழுக்களிடையே சந்தேகமோ, பயமோ, அவநம்பிக்கையோ இருக்கவேயில்லை. இரு தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் மத்தியிலும் நல்லெண்ணமும் நட்புறவும பரஸ்பர புரிந்துணர்வும் தொடர்ந்து நிலவுகின்றன. இராணுவத் தரப்பால்தான் இத்தகைய பிரச்சினைகள் எலலாம்.

(ஐ)

## மீனவர் சமாச அலுவலகத்தில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை

### பொங்கல் முதல் இயங்கும்

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். பிரதான வீதியிலுள்ள அதன் அலுவலகத்தில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை சிறியளவில் அமைத்துள்ளது.

இந்த ஐஸ் உற்பத்தி நிலையம், சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார். இந்நிலையில் எதிர்வரும் பொங்கல் தினத்தன்று உற்பத்தி ஆரம்பிக்கப்படுமெனக் கூறப்பட்டது.

ஐஸ் கட்டிகள் தேவைப்படும் கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள், அவற்றைச் சமாச அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### அமைதி வேண்டிப் பிரார்த்தனை

கீரிமலை யோகசுவாமியார் மகளிர் தவநிலையத்தின் 19ஆவது ஆண்டு விழா தைப்பொங்கல் தினத்தன்று நல்லூரிலுள்ள யோகர்சுவாமிகள் தவநிலையத்தில் நடத்தப்படும்.

இந்நிகழ்வில் அகில உலகமெங்கும் அமைதி, சாந்தி, சமாதானம், ஒற்றுமை நிலைபெறப் பிரார்த்தனை இடம்பெறும். (ஒ-3)

## அபராதம் செலுத்த தவறியவருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,ஜன.9

நீதிமன்றினால் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறிய பெண்ணுக்கு 6 மாதக் கடுழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

கசிப்பு தயாரிக்கும் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லன் தங்கம்மா என்ற பெண்ணுக்குக் கடந்த 2ஆம் திகதி 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டிருந்தது.

ஆயினும், அன்றையதினம் ஆயிரம் ரூபாவை மட்டும் செலுத்திய இப் பெண் மிகுதிப் பணத்தை நேற்றுமுன் தினம்வரையும் செலுத்தாததை யடுத்து நீதிவான் இ.த.விக்னராஜா மேற்படி பெண்ணுக்கு 6 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

இதேவேளை -

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கோண்டாவில், புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு பூரணம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

தாவடி வடக்கைச் சேர்ந்த வேலன் நாகேந்திரம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

செலுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

(ஒ-10)

## இடைக்காடு மயானம் மக்கள் பாவனைக்கு!

இடைக்காடு செம்மணி பொதுமயானப் பகுதியிலுள்ள மிதிவெடிகள் படையினரால் அகற்றப்பட்டு மயானம் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. நீண்டகாலமாக இப்பகுதியில் மக்கள் நடமாட்டம் தடைசெய்யப்பட்டிருந்தது.

மேற்படி மயானத்தின் மடங்கள் யுத்த நடவடிக்கையால் அழிக்கப்பட்டுள்ளன. மயானத்துக்குச் செல்லும் பாதை மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது. மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் தகனக்கிரியைக்கு சடலங்களைக் கொண்டு செல்லமுடியாதுள்ளது. இப்பகுதியில் வேறு மயானங்கள் இல்லாததால் இவற்றைப் புனரமைத்துத் தருமாறு வலி.கிழக்கு பிரதேச சபையை தாம் கேட்டுள்ளதாக இங்குள்ள பொது அமைப்புக்கள் தெரிவித்தன.

இதேவேளை, தம்பாலை பொது மயானப் பகுதியில் இருந்த மிதிவெடிகள் படையினரால் அகற்றப்பட்டுள்ளன. மயானத்துக்குச் செல்லும் வீதியை மூடியிருந்த முட்கம்பிகளும் அகற்றப்பட்டுள்ளன. அதனால் அப்பகுதியில் பொதுமக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-178)

**உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து**

## படையினரை வெளியேறக் கோருவது அநியாயம் என்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு,ஜன்.9

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து படையினரை வெளியேறுமாறு கோருவது மிகவும் அநியாயமானது. இப்படிக் கூறியிருக்கிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

கடந்த திங்கட்கிழமை காலை கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது யாழ்.குடாநாட்டு உயர்பாதுகாப்பு வலயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் சிறியதொரு பகுதி இராணுவத் தளங்களின் பாதுகாப்புக் கருதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது.

அந்த உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து படையினரை உடனடியாக வெளியேறுமாறு புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது மிகவும் அநியாயமானதும் அநீதியானதுமாகும்.

புலிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று அரசு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து படையினரை வெளியேற்றினால் அது அரசு இந்த நாட்டுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும் என்றார் வீரவன்ஸ. (ஒ4)

## சாயி சிந்தனை



### உள்ளுறையும் தெய்வீகம்

நெருப்பு இருக்கிறது. அதைக் கவனியாமல்விட்டால் அதன்மேல் சாம்பல் படிகிறது. இந்தச் சாம்பல் எங்கிருந்து வருகிறது? அதுவும் நெருப்பிலிருந்துதான் உருவாகியிருக்கிறது. அதுவே நெருப்பின்மேல் படர்ந்து நெருப்பை மறைக்கிறது. சூரியனின் ஒளியினாலேயே உருவான மேகங்கள் சில சந்தர்ப்பங்களில் சூரியனையே மறைக்கின்றன. நீரைக் கவனியாமல்விட்டால் பாசி உருவாகி நீரை மறைக்கின்றது.

நெருப்பிலிருக்கும் சாம்பல் நீங்கவேண்டுமானால் வாயால் ஊத வேண்டும். சாம்பல் போனால் நெருப்பு கண்ணுக்குத் தெரிகிறது. காற்று வீசும்போது மேகங்கள் விலகி சூரியன் தெரிகிறது. பாசியை விலக்கினால் நீர் தென்படுகிறது.

அதேபோல் எனக்கு, என்னுடையது என்ற பந்தங்களும், வெறுப்பும், அகங்காரமும், பேராசையும் சேர்ந்து மனிதனின் உண்மையான தெய்வீகத்தை மறைக்கின்றன. ஆகையால், பேராசை, வெறுப்பு, பொறாமை, ஆணவம், பந்தம் இவற்றை இல்லாமல் செய்தோமேயானால் எம்முள் உள்ளுறையும் அளப்பரிய தெய்வீக சக்தியை உணர்ந்துகொள்ளலாம்.

*(ஆதாரம்: ப்ரசாந்தியில் அமிர்தவர்ஷனி)*

# சிங்களவரின் தவறான....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ததால் பொதுமக்கள் பெரும் துன்ப மடைகின்றனர். சமாதான முயற்சி களுக்கு மேலதிகமாக இப்புதிய அரசு பொருளாதார முன்னேற்றம் தொடர் பாக எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றித் தங்களது கணிப்பீடுயாது?

*பதில்:* இப்பேச்சுகள் ஆரம்பிக் கப்பட்ட வேளையில் நான் குறிப்பிட்டது போன்று பொருளாதார முன்னேற் றத்தை ஏற்படுத்துவது, சமாதானத்தை அடைவதுபோன்றே நீண்டகாலம் எடுக்கும், மிகக்கஷ்டமான, மற்றும் சிரமமானதொரு பணியாகும். சிதைந்து போன பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது இலேசான காரி யமல்ல. பொருளாதார அபிவிருத் திக்கு அவசியமான சில விதிமுறை கள் உண்டு. அதில் மிகப் பிரதான மானது நாட்டின் அரசியல் ஸ்திரம் பேணப்படுதலாகும். நமது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பாதிக் கும் இரண்டு காரணங்கள் உள்ளன. உள்நாட்டு யுத்தமும், கூட்டுக் கட் சிகளால் உருவாக்கப்படும் நிலையற்ற அரசுமே அவையாகும். நிறைவேற்று அதிகாரமும், அரசமைப்பு அதிகார மும் எதிரெதிர் கருத்துக்கள் கொண்ட இரு குழுவினரின் கைகளில் சிக்கி யுள்ளன. இதுவே இந்தநிலை இவ் விதம் சிக்கலடையக் காரணமாகும். கடந்த காலங்களில் உறுதியான அரசு என்ற விதத்தில் எந்த அரசும் செயற் படவில்லை.

பொருளாதார அபிவிருத்திக்கு அரசு மட்டுமன்றி தனியார் துறையும் பங்களிப்புச் செய்யவேண்டும். அரச துறையின் குறைந்த பங்களிப்புடனும் அதேவேளை, தனியார் துறையின் கூடிய பங்களிப்புடனும் பொருளாதார அபிவிருத்தியை அடைய முயல்வதே பிரதமர் ரணில் விக்கிரசிங்கவின் எதிர்பார்ப்பாகவுள்ளது. அரசியல் ஸ்தி ரத்தன்மை பேணப்படுவதற்கு தனியா துறையின் பங்களிப்பு அத்தியவசிய மாகும். இவ்விடயத்தில் அவசியமான அடிப்படை வசதிகள் கிடைக்க வழி செய்யப்படுவது உட்பட வேறு பல சாதகங்களும் இணைக்கப்படுகின்றன.

கடந்த வருடத்தில் இடம்பெற்ற மெதுவான பொருளாதார முன்னேற் றத்தை அரசின் வேறு நடவடிக்கை கள் காரணமாக, ஐ.தே.கட்சியின் பொருளாதாரத் திட்டத்துக்கேற்ப நடைமுறைப்படுத்த இயலாதுபோய் விட்டது. இவ் இனப்பிரச்சினை தொடர் பான நடவடிக்கைகளால், கடந்த வரு டத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைப் பதற்கான முயற்சியில் எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேற்ற முடியவில்லை. இப்பொருளாதாரப் பின்னடைவு கார ணமாகப் புதிய தொழில் வாய்ப்புக் களை ஏற்படுத்திக்கொடுக்க அரசி னால் முடியவில்லை. இருந்தபோதும் இந்த அடிப்படை விடயங்களைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவில்லை. முன்னைய அரசு நாட்டின் பொருளா தாரத்துக்கு இழைத்த பாதகங்கள் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கிக் கூற ஐ.தே.கட்சி அரசு எவ்விதப் பிரசார நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை. பிரதமர் இது பற் றிப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியபோதிலும் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு இவ்விடயத்தை விளக்கிக் கூற எவ் வித முயற்சிகளும் மேற்கொள்ள வில்லை. இந்தச் சிக்கல் குறித்துப் பொதுமக்களுக்குத் தெரியவைக்க வேண்டியது அவசியமாகும்.

எந்த அரசு பதவிக்கு வந்தபோதும் அமைச்சர்களோ, அரசில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் களோ பொதுமக்களின் தேவை குறித்து எவ்வித கரிசனை கொள்வதில்லை யெனப் பொதுமக்கள் எண்ணுகின் றனர். நாட்டில் நிலவும் பொருளாதா ரப் பின்னடைவு மற்றும் நாட்டின் வறுமை நிலை குறித்து அவர்கள் எதுவிதப் பொறுப்பும் எடுத்துக்கொள்வ தில்லை எனவும் அவர்கள் எண்ணு கின்றனர். எவர் ஆட்சிக்குவந்தபோதும் எப்போதும் குறிப்பிட்டதொரு குழு வினரே அதனால் பயனடைவதாகத் தற்போது பொதுமக்களிடையே கருத்து நிலவுகிறது. பொ.ஐ.முன் னணியைப் பதவியிலிருந்து அகற்றி ஐ.தே.முன்னணியைப் பதவிக்குக் கொண்டுவந்தபோதும், பொதுமக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற் றம் எதுவும் ஏற்படவில்லை. பொ. ஐ.முன்னணியின் பதவிக்காலத்தில் இடம்பெற்றமைபோன்றே, இன்றும் அமைச்சர்கள் செல்லும் வாகனங் களைப் புடைசூழ்ந்து இரண்டு மூன்று வாகனங்கள் செல்கின்றன. அவ்வாகன அணியின் முன்னாலும் பின்னாலும் பாதுகாப்புக்கென வேறு வாகனங் கள் செல்கின்றன. அவ்வாறு அமைச் சர்களது வாகன அணி செல்லும் சமயம் அப்பாதையில் பயணிக்கும் பொது வாகனங்கள் தடுத்து நிறுத் தப்படுவதுடன், பொதுமக்களின் நட மாட்டமும் கட்டுப்படுத்தப்படுகிறது. பொ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத் திலும் இவ்வகை நடவடிக்கைகளே இடம்பெற்றன. இவ்வகையான நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண் டாமெனப் பிரதமர் அறிவுறுத்தியுள்ள போதிலும் இன்று அதற்கு மாறான நிகழ்வுகளே இடம்பெறுகின்றன.

இது மிகவும் துரதிஷ்டவசமான தாகும். பொதுமக்களிடையே நில வும் மனக்குழப்பத்தைத் தமது பிர சாரத்துக்குப் பயன்படுத்த ஜே.வி. பியினர் முயல்கின்றனர். பொதுமக் களின் மனவிசாரத்தையும், பொறுப் பையும் தூண்டிப் பொதுமக்களின் மன உணர்வுகளைத் தம்பக்கம் திருப்ப அவர்கள் முயல்கின்றனர். ஜே.வி.பியினரின் இவ்வகையான அணுகுமுறைகள் ஒருபோதும் பிர யோசனம் அளிக்கப்போவதில்லை. ஆனால், பொதுமக்களிடையே இவ் வகை உணர்வலைகளைச் வளரச் செய்வதனால், "பழையவர்களும் இப் படித்தான், இப்போது புதியவர்களும் இப்படித்தான்" என்ற விதத்தில் பொது மக்கள் மனதில் ஆட்சியாளர்கள் மீது ஒரு மனவெறுப்பு ஏற்பட அவர்களது நடவடிக்கைகள் காரணமாகின்றன.

அரசின் திறைசேரி வெறுமையா யுள்ளதென்னவோ உண்மைதான். ஆனால், அரசு பொதுமக்கள் குறித்து அனுதாபத்துடன் நோக்கவேண்டும். பொ.ஐ.முன்னணியைப் போன்றே ஜனாதிபதியையும் பொதுமக்கள் விரும் பாமைக்குக் காரணம் அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கிய துயரங்களையும் துன் பங்களையும் பொருட்படுத்தாத விதத் தில் நடந்துகொண்டமையேயாகும். ஆனால், இவ்வகையான துன்பங் கள் அதிகரிக்குமாயின் பொதுமக் களை அமைதிப்படுத்த இயலாது. இது பற்றி அரசு விளங்கிக்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்குச் சேவை யாற்றும் பொறுப்பு அரசுக்குண்டு. அதேவேளை மறுபுறத்தில் ஜே.வி. பியினரின் ஆற்றல்களை எதற்காகப் பலமுடையதாக்கவேண்டும்? ✦


## பனை ஓலைச்சார்வு கொள்வனவு

தரமான பனை ஓலைச் சார்வு பனை அபிவிருத்திச் சபையால் கொள் வனவு செய்யப்படுகிறது. வழங்க விரும்புவோர் தங்கள் பகுதியிலுள்ள சபையின் கற்பக விற்பனை நிலையங்களில் அல்லது தலைமைச் செயலகத்தில் தொடர்புகொள்ளவும்.

**பெரியது - 15/- நடுத்தரம் - 12/- சிறியது - 10/-**

*தலைமைச் செயலகம்,*
*பனை அபிவிருத்திச் சபை,*
*இல, 53, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தலைவர்:*
பனை அபிவிருத்திச் சபை

(C/25896)

## வீடு விற்பனைக்குண்டு

இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி எனும் முகவரியில அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு


*தொடர்புகளுக்கு:*
**வடமாகாண தெங்கு பனம்பொருள்**
**கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,**
**இல. 52,சோமசுந்தரம் ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(C/25893)

## Are You Ready to Take up the Challenge?

### Post Of Security Officers

Requirements



- Age over 22 years
- Pass in 3 subjects in GCE Advanced level
- Ability to speak sinhala will be added qualfication
- Height 5'6"
- Chest 34"
- Priority will be given to those who have partici pated in any games in district level. and who have participated in any social service clubs. (Scouting,Interact, Rotaract, etc.)

### Post Of Security Guards

Requirements



- Age over 22 years
- Pass in 6 subjects in GCE O.L
- Ability to speak sinhala will be added qualfication
- Height 5'6"
- Chest 34"
- Priority will be given to those who have participated in any games in district level. and who have partici pated in any social service clubs. (Scouting,Interact, Rotaract, etc.)

**Attractive Salary Plus Fringe benefits such as E.P.F, E.T.F, Bonus**

Apply with below mentioned certificates
G.S. Certificate
Character Certificate From Principal

**Box No - 1447**
**C/o. Uthayan**
**361, Kasthuriar Road, Jaffna.**


## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்துரை கந்தசாமி

**அவர்களை இழந்து வருந்தும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**
**அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!**

*சில்லாலைமேற்கு,*
*பண்டத்தரிப்பு.*
(12983)

லிங்கநாதன் (கொழும்பு),
தனேஸ்வரன (இலங்கை வங்கி K.K.S),
தவேந்திரன் (இத்தாலி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை சிற்றம்பலம்

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை சிற்றம்பலம் கடந்த (05-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொ.சிற்றம்பலத்தின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-01-2003). வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக் கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் மத்தி,*
*சுழிபுரம்.*
(12979)

தகவல்:
**கணவர், பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### திருமதி மகேசன் சரஸ்வதி

மானிப்பாய் சந்தையடியைச் சேர்ந்த திருமதி மகேசன் சரஸ்வதி அவர்கள் நேற்று (08-01-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிக ளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பொ.மகேசனின் அன்பு மனைவி யும், நாகேந்திரன், லோகேந்திரன் (கொழும்பு), மகேஸ்வரி, நாகேஸ்வரி (ஜேர்மனி), மகேந்திரன், லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ம.குணரத்தினத்தின் (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்) அன்புச் சகோதரியும், செ.சண்முகசுந்தரம், ந.இரட்ணகாந்தா, செ.கண நாதன், காலஞ்சென்ற சியாமளா மற்றும் மல்லிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன் (யாழ்.மருத்துவபீடம், 3 ஆம் வருடம்), கஜேந்தினி, ரூபன், ஜெயரூபன், சோபிகா, ஆதித்தன், பிரசாந்தன், நிரோசன், நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-01-2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.10,*
*சந்தையடி ஒழுங்கை (மேற்கு),*
*மானிப்பாய்.*
(12986)

தகவல்:
**செ.சண்முகசுந்தரம்**
(மருமகன்)

### திருமதி தருமலிங்கம் பிச்சையம்மா

திருமதி தருமலிங்கம் பிச்சையம்மா நேற்று (08.01.2003) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் பத்மலோசினி, கமலாம்பிகை, சுசீலாதேவி, விமலன், புவனேந்திரன் (பிரான்ஸ்), கிருபா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அஞ்சலிங்கம், தங்கராசா, விபுலானந்தன், திகழ்மதி, கலாவதி (பிரான்ஸ்), குணசிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சுந்தரம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2003) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(12978)

தகவல்:
விமலன் (மகன்),
சுதன் (பேரன்).

### சின்னத்துரை கந்தசாமி

(உரிமையாளர் - பண்டத்தரிப்பு இராஜன் ரெக்ஸ்)

சாந்தை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்துரை கந்தசாமி நேற்று முன்தினம் (07.01.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியின ரின் அன்பு மகனும், இராசலிங்கம் (ரூபி ரெக்ஸ், கொழும்பு), யோகலிங் கம் (இலங்கை மின்சாரசபை - யாழ்ப்பாணம்), திருமதி புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவசுதன் (சுவிஸ்), பிரதீபன் (மாணவன்), ஜெயந்தினி (மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2003) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்வில்துறை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாந்தை,*
*பண்டத்தரிப்பு.*
(12982)

தகவல்:
**மனைவி,**
**இராசலிங்கம், யோகலிங்கம்.**
(சகோதரர்கள்)

### வல்லிபுரம் விநாயகமூர்த்தி

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் விநாயகமூர்த்தி 06-01-2003 திங்கட்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்தமகனும் இரத்தினம் - காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதியினரின் மூத்தமருமகனும் லோகநாயகி (றதி) அவர்களின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (டோகா), சுபத்திரா, குமுதினி, சந்திரயோகன் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் சிதம்பரேஸ்வரி, கைலைநாதன், காலஞ்சென்ற சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்ற லோகநாதன் (பெரியதம்பி), திருச்செல்வம் (சின்னம்பி), மகாதேவி (மதி), குசலகுமாரி (வவி), ரவிச்சந்திரன் (டோகா), வசந்தகுமாரி, லிங்கேஸ் வரி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சண்முகநாதன் (டோகா), கமலா, லோகேஸ் வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-01-2003) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கள்ளியடைப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியவிளான்,*
*இளவாலை.*
(12977)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள.**

# 45 நிமிடம் ஒத்திவைப்புக்குப் பின் தொழில் சட்ட மூலங்கள் மீது விவாதம்

புத்தாண்டின் முதலாவது அமர்வி லேயே நாடாளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டு சபை 45 நிமிடங்கள் இடை நிறுத்திவைக்கப்பட்டது.

தொழில் அமைச்சர் மஹிந்த சமர சிங்க, தொழில் பிணக்கு தொடர் பான நான்கு திருத்தச் சட்ட மூலங் களை சபையில் சமர்ப்பிக்க முற்பட்ட போதே சர்ச்சை ஏற்பட்டது.

உத்தேச சட்ட மூலங்கள் குறித்து பிரதமருடன் கலந்துரையாட இருப்ப தால் சபையை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அப்பொழுது கேட்டுக்கொண்டார்.

இதனை தமிழர் விடுதலைக் கூட் டணி உறுப்பினர் இரா.சம்பந்தன், ஜே.வி.பி.உறுப்பினர் விமல்வீரவன்ஸ வும் வலியுறுத்தினர். ஆனால், விவா தத்தை வேறொரு தினத்துக்கு ஒத்தி வைக்கவேண்டும் என்றும் விமல்வீர வன்ஸ கேட்டுக்கொண்டார்.

எனினும், இவ்விடயத்தை பிரதமர் தலையிட்டு சபை அமர்வுகளை சிறிது நேரம ஒத்திவைத்து, கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் இவ்விடயத்தை ஆராயலாம் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து சபை அமர்வு காலை 10.45 முதல் 11.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. சபை மீண்டும் கூடியபொழுது தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க சட்டமூலங்களைச் சபையில் சமர்ப்பித்தார். சட்டமூலங்கள் மீது விவாதம் நடைபெற்றது.(ஐ-12)

## சங்கானைப் பகுதியில் தொழில் உதவித்திட்டம்

### ஆனந்தசங்கரி எம்.பி.நடவடிக்கை

சங்கானைப் பிரதேச செயலா ளர் பிரிவில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 200 குடும்பங்களைச் சேர்ந் தவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொண் டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இதன்படி சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களினால் உரியவர்கள் இனங் காணப்பட்டு தெரிவுசெய்யப்படவுள் ளனர்.

இத்திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பு, சிறுகைத்தொழில் முயற்சி களுக்கு ஒரு தொகைப்பணம் கட னாக வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகை பின்னர் பகுதி பகுதியாக மீளப் பெறப்பட்டு சுழற்சி முறையில் வேறொரு பயனாளிக்கு கடன் வழங்கு வதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-86)



**14ஆவது ஆசிய மெய்வன்மைப் போட்டிகளை முன்னிட்டு தேசிய இளைஞர் விவகார அமைச்சும், இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் (தமிழ் மொழிமூலமாக) நடத்திய கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதலாவது இடத்தைப்பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரனுக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காண லாம். (எ)**

## வழிகாட்டல் வகுப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிய கல்வி ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கலைப்பீட மாணவர்களுக்கான வழி காட்டல் வகுப்புகள் இன்று வியாழக் கிழமை காலை 9.00மணிக்கு பல் கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் நடைபெறவுள்ளன.

2001 ஓகஸ்ட் மற்றும் 2002 ஏப் ரல் ஆகிய மாதங்களில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித் தியடைந்த இரண்டு வருட மாணவர் களையும் தவறாது இவ்வழிகாட்டல் வகுப்பில் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதில் பதிவா ளர் திருமதி அனுசா சிவனேஸ்வரன் கேட்டிருக்கிறார். (ஐ-5)

## மிதிவெடி வெடித்து உடல்முழுவதும் காயம்!

மீசாலைப்பகுதியில் காணி துப் புரவு செய்த ஒருவர் மண்வெட்டியால கொத்திய சமயம் மிதிவெடி வெடித்த தில் துப்புரவு பணியில் ஈடுபட்ட நபர் உடம்பு முழுவதும் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செ.பொன்னம்பலம் (வயது 51) என் பவரே காயமடைந்த நிலையில் சாவ கச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டு அம்புலன்ஸ்மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளார். (ஐ-117-15)

## வாசகர் திருமுகம்

### வர்த்தக பாட விதானங்களில் மாற்றங்கள் அமுலுக்கு வருமா?

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பின் 2005 பரீட்சை எடுக்கும் மாணவர்களுக் கான வர்த்தக பாடங்களுக்கான பாட விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத தப்படவுள்ளன.

இம்மாற்றங்கள் தொடர்பாக தேசிய கல்வி நிறுவனம் அண்மையில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து மாவட்டங்கள் தோறும் அதற்கான வள ஆளணியினரை நியமித்துள்ளது. இதற்கான கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட வள ஆளணியினராகத் தெரிவுசெய யப்பட்டவர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பாட மாற்றங்கள் யாவும் ஒழுங்குபடுத்தப்பட்டு கல்வி அமைச்சின் அனுமதிக்காக தாங்கள் அனுப பியிருப்பதாகவும் அனுமதி கிடைத்தவுடன் தாம் அம்மாற்றங்கள் தொடர் பான விடயங்களைத் தெரிவிக்கமுடியும் எனவும், அதனால் 2005 பிரிவினரின் வர்த்தக வகுப்புகளை தற்போது பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆரம்பிக்காது விடுதல் நன்று எனவும் தெரி வித்துள்ளார். பாடசாலைகளில் 2005 மாணவர்களை அனுமதிப்பதாயின் அம்மாணவர்களுக்கு பாட அலகுகளை போதிக்காது. கணனி, பொது அறிவு போன்ற கல்விச் செயற்பாட்டிலும் மற்றும் செயல்முறை வேலை களிலும் மாணவர்களை ஈடுபட வைக்கலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனை அனைத்து வர்த்தக மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கவனத்தில் கொள்ளுதல் சிறந்தது. எனவே அதிகாரிகள் இது பற்றித் தெளிவாக அறிவிக்கவேண்டும்.

- ஒரு பெற்றார்.

### வல்லைவெளி தாண்டுகையிலே ...

தமிழர் தாயகம் அந்நியர் ஆக்கிரமிப்புக்குள் உட்பட்டால் மீட்டு விட லாம். ஆனால், கடலினுள் அமிழ்ந்துவிட்டால் மீட்கமுடியாது.

வல்லை வெளியில் கற்கள் தோண்டி எடுக்கப்படல், மண் அகழ்தல், மரம் வெட்டுதல் என்பன தடைசெய்யப்படாதவிடத்து வல்லைவெளியை நாம இழக்கநேரிடும்.

இது சம்பந்தமாக யாரிடம் முறையிடுவது என்பதை நான் அறியேன். ஆனால், புலிகளிடம் தெரிவித்தால் நிச்சயம் பலன் உண்டு என அறிவேன். ஆகவே, புலிகளை விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி தொடர்கிறேன்.

படையினரின் பாரிய முகாம் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் ஏனைய நடவடிக்கைகளில் பொலீஸாருடன் சேர்ந்து செயற்படும் படையினர், நட வடிக்கை ஏதும் எடுக்காதது விசனத்திற்குரியது. படை முகாமை அண் டிய பகுதியிலேயே அதிகளவு கல் அகழப்பட்டுவருகின்றது.

இப்பிரதேசம் குப்பை கூளங்களாலும் மாசடைந்துள்ளது. புற்பதர்களும் உள்ளன. முன்னர் (1995) புலிகளால் இப்பிரதேசத்தை அழகு படுத்தவும் அழியாதிருக்கவும் திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டன. இவ்விடத்தில் புலிகள் - படையினர் இணைந்தோ அல்லது புலிகள் மட்டும் தனித்தோ மீண்டும் அத்திட்டங்களை - பணிகளை - தொடரவேண்டும்.

இது தொடர்பான புலிகளின முடிவை எதிர்பார்த்திருக்கிறேன்.

இவ்விடயத்தை பாதுகாக்கும், அழகுபடுத்தும் முகமாக புலிகளால் நடப்பட்ட சவுக்கு மரங்கள் கிறிஸ்மஸ் காலத்தில் கண்டபடி வெட்டப் படுவதும் படையினரின் தேவைக்கு வெட்டப்படுவதும் தடுக்கப்படவேண்டும்.

பருத்தித்துறை இராணுவ முகாம மீதான பொதுமக்களின் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாக காவலரண்களில் அவற்றைச் சுற்றி பாதுகாப்பு முள்வேலி அடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு முட்கம்பி அடிப்பதற்காக காவலரண்களில் சவுக்கு மரங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. படையினரின் தேவைக்கு சிலீப்பர் கட்டைகள் தெற்கிலிருந்து கொண்டுவரப்படும் என்று படையதிகாரி உறுதியளித்துள்ள தையும் சுட்டிக்காட்டி விடைபெறுகின்றேன்.

-அபிமன்யு.

# தென்மராட்சி புனரமைப்பில் மோசடி; கலந்துரையாடலில் எம்.பிக்கள் கவலை!

கடந்த மாதம் 25ஆம் திகதி சாவ கச்சேரியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் தென்ம ராட்சி புனரமைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையா டல் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாள ரும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப பினருமான ந.ரவிராஜ் இக் கலந்து ரையாடலுக்குத் தலைமை தாங்கினார்.

அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

"தென்மராட்சியில் யுத்த நடவடிக கைகளினால் சேதமடைந்த பல கட் டடங்களை புனரமைக்க நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால், இந்த வேலைத திட்டங்களில் நிதி மோசடிகள் இடம் பெற்றிருப்பதை நான் நேரடியாகக் கண்டறிந்துள்ளேன். கைதடியிலுள்ள வயோதிபர் இல்லம், ஆயுர்வேத மருத துவமனை, தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவ கச்சேரி நகரசபை எனப் பலவற்றின் வேலைத்திட்டங்களில் இந்த மோசடி கள் நடந்துள்ளன. இந்தமோசடி நட வடிக்கைகளை நாம் எல்லோரும் தடுத்து நிறுத்தி நியாயம் கேட்கவேண் டும். அப்போதுதான் நாம் முன்னேற முடியும்."

சாவகச்சேரி நவீன சந்தையை புனரமைப்பதற்காக ரூபா அறுபது இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், பத்து இலட்சத்திற்குரிய வேலைகூட அங்கு நடைபெறவில்லை. இது சம்பந்தமாக நான் விசாரித்தபோது இவ்வேலையை கேள்விமூலம் பொறுப்பெடுத்த நல் லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம் முற்பணமாக பெருந்தொகை நிதியைப் பெற்றுவிட்டு பின் கவன யீனமாக இருந்தமை தெரியவந்தது. அத்துடன், நிதி விடயத்திலும் மோசடி களை செய்துள்ளது. இதுசம்பந்த மாக 'றான்' கூட்டத்தில் நான் கேட்ட போது முரண்பட்ட பதில்கள் தெரி விக்கப்பட்டன. மேலும், இந்த விட யத்தில் விடுதலைப் புலிகளின் பெய ரையும் தப்புச்செய்தவர்கள் பயன் படுத்தத் தொடங்கினார்கள். ஆனா லும், நான் புலிகளோடு தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிய போது ஒதுக்கப்பட்ட நிதிக்கான முழு வேலையையும் சம்பந்தப்பட்டவர் களைக்கொண்டு தாம் செய்து தரு வதாக உறுதியளித்தனர்.

மேலும், கைதடி சித்த ஆயுர் வேத போதனாவைத்தியசாலைக்கு 70 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் 30 லட்சம் ரூபாவுக்கான வேலைகூட இடம்பெறவில்லை. அதேபோல், கைதடி வயோதிபர் இல்லத்துக்கு ரூபா 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் 25 லட்சம் ரூபா பெறுமதிக்கான வேலைகூட இடம்பெறவில்லை. இந் நிதி கடந்த ஏப்ரல் மாதம் ஒதுக்கப் பட்டது. வருடம் முடிகின்ற நிலை ஏற்பட்டும் வேலை நிறைவு செய்யப் படவில்லை. எமது கண்ணுக்கு முன் னால் இந்த அநியாய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. சாவகச்சேரி வைத் தியசாலையைப் பொறுத்தவரை தென் மராட்சி மக்களுக்கு அது ஒரு மிகமுக கியமான வைத்திய வசதிகளை வழங்கும் ஒரு நிறுவனமாக இருந் தது. ஆனால், யுத்த நடவடிக்கைக ளினால் இன்று சின்னாபின்னப்பட்டு சிதறிக் காணப்படுகின்றது. இவ்வைத் தியசாலையை மீள இயங்கவைக்கக கோரி இப்பகுதி மக்கள் பல தொடர் நடவடிக்கைகளை எடுத்தும், யாழ்ப் பாண சுகாதார சேவைத் திணைக் களத்தின் உயர் அதிகாரியின் மெத் தனப் போக்கினாலும், அதிகாரத் தனத்தினாலும் இவ்வைத்தியசாலை முற்றும் முழுமையாகச் செயற்படா மல் இருக்கின்றது - என்றார் அவர்.

**செய்திக்கட்டுரை**
**கைதடி செய்தியாளர்**

இக்கலந்துரையாடலில் மாவை சேனாதிராஜா எம்.பி. கூறியதாவது:-

இந்த நாட்டின் வரலாற்றிலே கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் தான் மிகப் பெரிய தொகையைப் போருக்காக ஒதுக்கியவர்களாவார் கள். இந்நிதிமூலம் பெற்ற நவீன ஆயுதங்களைப் பரீட்சித்துப் பார்க் கும் இடமாக தென்மராட்சியை அவர் கள் தெரிவுசெய்து இந்த மண்ணை அழித்தார்கள். இதனால், பொருளா தாரம், தொழில் வளங்கள் என்பன அழிந்ததோடு மக்களும் மாண்டார் கள். இந்தநிலை இரண்டாம் உலக மகாயுத்தத்தை எமக்கு நினைவுபடுத் துகின்றது.

மென்மையான மொழியில் தந்தை செல்வா கூறியதை இனவாதிகள் அன்று காதில் வாங்கிக்கொள்ள வில்லை. ஆனால், தம்பி பிரபாகரன் அவர்களது மொழியிலே கொடுத்த பதிலடியிலேதான் இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். உலக வர லாற்றிலே ஒரு சில மணித்துளிகளில் 10 ஆயிரத்து 500 கோடி ரூபாவை இழந்த அதிசயம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்றது. இச் சம்பவம் புலிகளின் பலத்தையும், அவர்களின் வளத்தையும் உலகுக் குத் தெளிவுபடுத்த ஒரு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்தது. அந்த அடியே படியாக எமக்கு இன்று இருக்கின்றது.

கடந்த தேர்தலின்போது எம்மை நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் எனக்கூறி அறிக்கை விட்டு கிறுக்குத் தனம் பண்ணிய வர்கள் இன்று நெடுந்தீவிலே மக்கள் பலம் கண்டு நடுங்குகின்றார்கள். எம் பெண்களை அந்நியருக்கு ஆசைப் பொருளாகக் கொடுத்தவர்கள் அவர் கள். வேலைவாய்ப்பு என்று சொல்லி எம்மக்களை ஏய்த்தவர்கள். அரசின் துணைப்படையாக இருந்து அற்ப சலுகைகளுக்காக விடுதலை எனும் விருட்சத்தை விற்றவர்கள். அவர் களைத் தெய்வமும் மன்னிக்காது; தேசமும் மன்னிக்காது. புலிகளோடு பேசுவதன்மூலமே இனப்பிரச்சினை யைத் தீர்க்கலாம். இதை எம் இன மும் அறியும்; சர்வதேசமும் அறி யும் - என்றார் அவர்.

தொடர்ந்து தென்மராட்சியின் புன ரமைப்பு வேலைத் திட்டங்களை எவ் வாறு முன்னெடுக்கவேண்டும் என்று ஆராயப்பட்டது. கல்வி, விளையாட்டு, மருத்துவம் மற்றும் நிதி விடயங்கள் பற்றியும் பலரால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

சுகாதார சேவைகள் திணைக் களத்தின் பொறுப்பற்ற செயற்பாட் டைப் பற்றி கூட்டத்தில் கலந்து கொண்ட பலராலும் அதிருப்தி தெரி விக்கப்பட்டது.

சாவகச்சேரிக்கு அமைய இருக் கும் பிரதேச செயலகத்தையும் மற் றும் தபாலகம், கல்விப் பணிமனை, விளையாட்டுத்திடல் என்பவற்றையும் நீண்டகாலப் பயன்பாடுள்ளதாக அமைக்கவேண்டும் எனத் தீர்மானிக் கப்பட்டது. அதற்கான குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டன.

குறிப்பாக தென்மராட்சியின் அபி விருத்தி, இன்றைய அரசியல் நிலைப் பாடு, தமிழர் விடுதலைக் கூட்டணி யின் கட்சி விஸ்தரிப்பு என்பன பற்றியே பலராலும் கருத்துரை வழங்கப்பட் டது. இப்படியான நிகழ்வுகளை மாதத் திற்கு ஒரு தடவையேனும் கூட்டு வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி யும் ஆராயப்பட்டது. சனசமூக நிலை யப் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள், கிராம உத்தியோகத் தர்கள் எனப் பலரும் இந்தக் கருத் தரங்கிலே கலந்துகொண்டனர். ★

# சாரதிப் பயிற்சிக் கல்லூரி ஒன்று குடாநாட்டுக்கு அவசியம் தேவை!

## கோப்பாய் பொலீஸ் பொறுப்பதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.9

வாகன சாரதிகளுக்குப் போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுக் கொடுக்க யாழ்ப்பாணத்தில் மோட்டார் சாரதி பயிலுநர் பயிற்சிக் கல்லூரி ஒன்று அவசியம் தேவை என கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சுனில் விஜயசேகர தெரிவித்தார். தெற்கில் பல தனியார் மோட்டார் சாரதி பயிலுநர் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் பயிற்சிபெற்றே பலர் சாரதிகளாக வெளியேறுகின்றனர்.

இங்கு ஒரு பயிற்சிக் கல்லூரி கூட இல்லை. இதனால் வாகன சாரதிகள்முதல் சைக்கிளில் செல்வோர் வரை பெரும்பாலானவருக்கு போக்குவரத்து விதிமுறைகள் தெரியவில்லை. இதனாலேயே பல வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன.

வீதிகளில் சைக்கிளில் செல்பவர்கள் பெண்கள், ஆண்கள் எனப் பாகுபாடின்றி சமாந்தரமாகச் சவாரி செய்கின்றனர்.

இதனால் ஏனைய வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பஸ், மினிபஸ் போன்ற வாகனங்களின் சாரதிகள் வாகனத்தில், பயணிகள் தம்மை நம்பியே பயணஞ் செய்வதனை மறந்து போட்டிபோட்டு வாகனங்களைச்செலுத்துகின்றனர். இந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் விதிமுறைகளை மீறியும் நடக்கின்றனர்.

இதன் காரணமாகவே விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

இத்தகைய நிலையை மாற்றும் முயற்சியாக வாகன சாரதிகளுக்கு கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய வகுப்புகளை நடத்துகின்றோம் - என்றார் அவர்.

(ஒ-180)

# காணாமற்போனவர்கள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

## யாழ். அலுவலகத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.9

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான மனித உரிமை ஆணைக்குழுவின் ஆரம்பகட்ட விசாரணைகள், நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ். அலுவலகத்தில் ஆரம்பமாகின.

மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான செயற்றிட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராகிய எம்.சி.எம்.இக்பால் தலைமையில் யாழ்.வந்துள்ள குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்ப விசாரணைகளின் மூலம் அடிப்படை விவரங்களைத் திரட்டி ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ள இக்குழுவினர் பின்வரும் விடயங்களைப் பற்றி விரிவாக விசாரணை செய்யவுள்ளனர்.

☆ மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 232 பேர் கொண்ட பட்டியலில் குறிப்பிடபபட்ட நபர்கள் குறித்தகாலத்தில் தன்னிச்சையின்றி அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்களா அல்லது அவர்களின் வதிவிடங்களில் இருந்து காணாமறபோயுள்ளார்களா என உறுதிப்படுத்துவது.

☆ தன்னிச்சையின்றி அப்புறப்படுத்தப்பட்ட அல்லது காணாமற்போனதாகக் கூறப்படும் நிகழ்வு நடைபெற்ற சந்தர்ப்பம் பற்றி சகல விவரங்களையும் அறிவது.

☆ குறித்த வகையில் அப்புறப்படுத்தப்பட்ட அல்லது காணாமற்போனதாகக் கூறப்படும் நபர்களின் தற்போதைய நிலை அல்லது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி விவரம் அறிவது.

☆ காணாமற்போயுள்ள நபர்கள் இனங்காணப்படாத சிறைச்சாலைகளிலோ, தடுப்பு முகாம்களிலோ வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற முறைப்பாட்டுக்காரர்களின் கூற்று சம்பந்தமாக விவரம் அறிந்து அறிக்கை சமர்ப்பிப்பது.

இவ்வகையில் காணமற்போனவர்களை காணாமற்போகச் செய்த நபர் அல்லது நபர்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஏதுவான சாட்சியங்களும் அச்சாட்சியங்கள் பற்றி குழுவின் தீர்மானங்களையும் ஒழுங்குபடுத்துவது.

☆ காணாமற் போனதாகக் கருதப்படும் நபர்களில் தங்கியிருப்பவர்கள், பெற்றோர் அல்லது கணவன் அல்லது மனைவி முதலியோருக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமாயின், அவை பற்றிய சிபாசுகளைச் சமர்ப்பிப்பது.

மேற்படி விடயங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும்போது அது தொடர்பான விவரங்களை அவ்வப்போது வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் ஆரம்பகட்ட விசாரணைகள் முடிவுற்றதும் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழு, தனது அடுத்த கட்ட விசாரணைகளை ஆரம்பிக்கும். இவ்விசாரணைக் குழுவில் திருகோணமலை அரச அதிபர் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் திருமதி ஜெசீமா இஸ்மாயிலும் அடங்குவர்.

(ஒ-8)

# உதைபந்தாட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

நாட்டில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை வெளியிட உதைபந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது என்றும் -

இதுதொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது. என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும்,
மந்துவில் கேலம் இராசஇராசேஸ்வரி
அம்பாள் ஆலய பரிபாலனசபை
உப தலைவருமான ,

**திரு.வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்**

அவர்கள் 05.12.2002 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் மந்துவில் சூரியகுமாரன் சனசமூக நிலையத் தலைவரும், மந்துவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், மந்துவில் ப.நோ.கூ.சங்கம் கிளை இல.06இன் தலைவரும், பிரபல சமூகசேவையாளருமாவார்.

இவர் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ நாமும் வாழ்த்துகின்றோம்.

கேலம் இராசஇராசேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்.

*மந்துவில் மேற்கு, கொடிகாமம்.* (12961)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவன்
திரு.பொ.சிவானந்தராஜா அவர்களின் தாயார்

**திருமதி கனகம் பொன்னையா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி-25890) கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர்.


# KOBE® 52 அன்டனா & பூஸ்டர்

துருப்பிடிக்காதது எத்திசையிலும் இயங்கக்கூடியது

**VHF/UHF தொலைக்காட்சிக்கும் FM வானொலிக்கும் உள்ளிணைப்புடன் கச்சிதமான வெளிக்கள அன்ரனா**

- ☑ நவீன தொழில்நுட்பத்துடன் நேர்த்தியான வடிவமைப்பு
- ☑ தலைவீர் உட்புகாச் முழுமையான கவசத்தினமைந்தது
- ☑ மின்சாரத்திலும், பற்றரியிலும் இயங்கக்கூடியது
- ☑ நம்பகமான உயர் தொழில்நுட்ப பூஸ்டர்களுடன் இணைக்கப்பட்ட KOBE அன்டனா

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் அனைத்து **நிப்போன்** முகவர்களிடமும்




லங்கா நிப்போன்
18, கெய்சர் வீதி, கொழும்பு-11.
தொ.பே: 437735, 324726, 335301
தொ.ந : 437736

காட்சியறை
10, ரேலோனி ஒழுங்கை, பம்பலப்பிட்டி,
கொழும்பு-04.
தொ. பேசி: 589992, 582365

❖ யாழ். மாவட்டத்திற்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 24th January 2003 for the post of Assistant Lecturer (on Contract) in Education (Comparative Education)

**Salary: Rs. 10,800/= per month (fixed)**

* Applicants those who wish to apply for the above post should have the following requirements:

i) BEd/BA with Postgraduate Diploma in Education with Distinction or Merit Pass.

ii) Proficiency in English to conduct lectures in the English Medium.

Application form and other details may be obtained from the Office of the Assistant Registrar/Establishments (Academic), University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs. 20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23X10cm in size.

Applicants from the University System/Government Departments/Corporation and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
**University of Jaffna,**
**Jaffna.**

2003-01-07 (C-25891)

# இதய அஞ்சலி

*யாழ்.மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளரும்*
*யா/பெரியபுலம் மகா வித்தியாலய முன்னாள் அதிபருமாகிய*

**சிவ.சிவபாலசிங்கம்**

அவர்கள் 04.01.2003இல் இயற்கையெய்திவிட்டார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதுடன் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

இ.வல்லிபுரம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

*'ஜெயமஹால்', மானிப்பாய் வடக்கு.*

(சி-25892)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி
செல்வி க.கமலாதேவி அவர்களின் தாயார்

**திருமதி தங்கம் கதிர்காமு**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி-25889) கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர்.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 - 10 - 1974



மறைவு 09 - 01 - 1997

**2ஆம் லெப். கலைப்பிரியா (அருள்)**

**திருநாவுக்கரசு ஜெயகலா**

ஆறு ஆண்டுகள் என்ன
அறுபது ஆண்டுகள் சென்றாலும்
ஜெயா உன் நினைவுகள்
எம் நெஞ்சில் மாறாது!

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
*குரும்பசிட்டி, தெல்லிப்பழை.* (12976)

தற்காலிக முகவரி:
*குளப்பிட்டி, கொக்குவில்.*

# வேகமாகப் பரவும் காய்ச்சலும் அதற்கான தடுப்பு முறைகளும்

குடாநாட்டு வைத்தியசாலைகளில் - பல்வேறு வகைப்பட்ட நோயாக்கிகளினால் உருவாகும் - காய்ச்சல் என்னும் அறிகுறியுடன் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நோயாளிகளைப் பராமரிக்கவேண்டியவர்களே நோயின் தாக்கத்திற்கு உள்ளாகி வருவது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

பெரும்பாலும் மக்கள் மத்தியில் மாரிகாலம் வந்தால் நோயும் சேர்ந்து வரும் என்ற கருத்தே நிலவுகிறது.




மழைகாலத்தில் நோய்கள் ஏற்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது சாதாரண விடயம். ஆனால், இம்முறை வழமையைவிட அதிக எண்ணிக்கையிலானவர்கள் நோய்களால் பீடிக்கப்பட்டும், இறந்தும் உள்ளவை பய உணர்வைப் பரப்பியுள்ளது.

**காய்ச்சல் என்றால் என்ன?**

காய்ச்சல் என்பது ஒரு நோய் ஏற்பட்டுள்ளதன் அறிகுறி. இதனைக் கண்டவுடன் எம்மனதில் தோன்ற வேண்டிய விடயம் எனது உடலில் ஏதோவொரு நோயாக்கித் தொற்று ஏற்பட்டுள்ளது என்பது மாத்திரமே. எனவே, காய்ச்சல் ஏற்படக் காரணமான நோயாக்கியைக் கண்டுபிடித்தல் அவசியமாகின்றது. இவ்வாறு கண்டுபிடிப்பதற்கு நல்ல மருத்துவ அறிவுள்ள அனுபவமிக்க வைத்தியரின் உதவியும் சரியான ஆய்வு கூட பரிசோதனையும் தேவை.

இன்று குடாநாட்டில் சரியாக இனங்காணப்படாத வைரஸ் வகை.

- ✪ நெருப்புக் காய்ச்சல் கிருமி
- ✪ டெங்கு காய்ச்சல் கிருமி
- ✪ மலேரியா கிருமி
- ✪ செப்பரைற்றிஸ் பி கிருமி
- ✪ அமீபா வகை ஆகிய நோயாக்கிகள் காணப்படுகின்றன.

**வைரஸினால் ஏற்படும் காய்ச்சல்**

வைரஸ் என்னும் நுண்ணங்களில் பலவகைகள் உள்ளன. அவற்றில் பல உடலின் பல்வேறுபட்ட உடலுறுப்புகளைத் தாக்குகின்றன. மழை காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வைரஸ்"கள் பெரும்பாலும் சுவாச உறுப்புகளினையும், உணவுக்கால்வாயினையும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. இதனால் தடிமன், காய்ச்சல், சளி, தொண்டைநோ, சுவாசத் தொல்லை, வயிற்றோட்டம் என்பவற்றை ஏற்படுத்துவதுடன் உடல்நோ, களைப்பு, பலவீனம் என்பனவும் சேர்ந்து காணப்படும்.

வைரஸ் தாக்கத்தினால் ஏற்படும் சளியானது வெள்ளைநிறத்துடன் நீர் போன்று ஓடும் இயல்பை உடையதாகக் காணப்படுகின்றது. நோயாளியின் தடுப்புமுறை, எதிர்ப்புசக்தி என்பவற்றிற்கு ஏற்ப நுண்ணுயிர்க் கொல்லி தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களில் இக்கிருமி மூளை, நுரையீரல், இதயம், ஈரல், சிறுநீரகம் என்பவற்றைத் தாக்குகின்றது.

**தடுப்பு முறைகள்**

☆ நோய்த்தொற்று ஏற்பட முன்னர் நெரிசல்களைத் தவிர்த்தல். (சிறிய அறைகளில் மக்கள் நெருங்கி வாழல், நெரிசலான திருவிழாக்கள், களியாட்டங்கள், பஸ் பயணம் போன்றவற்றைத் தவிர்த்தல்)

☆ ஏற்கனவே நோய்த் தொற்று உள்ளவருடன் நெருக்கத்தைத் தவிர்த்தல்.

☆ தூசி, அழுக்கு நிறைந்த இடங்களைத் தவிர்த்தல் போன்ற தடுப்பு முறைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

☆ ஏற்கனவே உடல்நிலைப் பாதிப்புள்ளோர் இக்காலகட்டங்களில் நோய்த்தடுப்பு முறைகளில் அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**தொற்று ஏற்பட்ட பின்னர்**

★ மக்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்தப்படல் வேண்டும். 'எனது நோய் மற்றவருக்கு ஏற்படாது தவிர்த்தல் எனது கடமையாகும்'

★ நோய்க்கு சரியான மருத்துவ முறைகளைக் கைக்கொள்ளல் என மக்கள் ஒவ்வொருவரும் எண்ணுதல்.

★ தும்மும்போதும், இருமும்போதும் ஒரு சுத்தமான துணியினைக் கொண்டு மூக்கு, வாய் என்பவற்றை மூடிக்கொள்ளுதல்.

★ உடை போன்றவற்றை பாவித்தவுடன் சுத்தம் செய்தல் மற்றும் மற்றவர்களின் உடைமைகளைப் பாவிக்காது விடுதல்.

★ நெரிசலான இடங்களுக்குச் செல்வதை இயன்றளவு குறைந்து விடல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

**சிகிச்சை முறைகள்**

★ இயன்றளவு உடலுக்கு ஓய்வு அளித்தல்.

★ தகுதிவாய்ந்த வைத்தியரை நாடல்.

★ காய்ச்சலின் அளவைக் குறைப்பதற்கான மருந்தை வைத்திய அறிவுரையுடன் உட்கொள்ளல்.

★ சுவாசத்தில் ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்க கொதிநீர் ஆவி பிடித்தல்.

**இ.சுரேந்திரகுமார்**
சமுதாய மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

★ உடலுக்கு எதிர்ப்பு சக்தியை ஊட்டவல்ல உணவுவகைகளை உண்ணல்.

ஆகிய நடைமுறைகளை நோயாளிகள் பின்பற்றவேண்டும்.

நோயானது பின்வரும் காரணங்களினால் தீவிரமாக்கப்பட்டு இறப்பு கூட ஏற்படலாம்.

✦ தாக்கத்தினை ஏற்படுத்தும் வைரஸின் வகை அதன் உபவகைகள் என்பன.

✦ நோயாளியின் எதிர்ப்பு சக்திக் குறைவு.

✦ நோயாளி ஏற்கனவே நீரிழிவு, சுவாசநோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பது.

✦ சிகிச்சையில் அதிகளவு சிரத்தையெடுக்காமை.

✦ தவறான வைத்திய அறிவுரைகள்.

முக்கிய உறுப்பான மூளையை நோயாக்கி தாக்குவதனால் மூளை அலற்சிநோய் ஏற்படும். இந்நோய் கடும்காய்ச்சல், தலையிடி, நடத்தையில் மாற்றம், மந்தநிலை, வலிப்பு ஆகிய அறிகுறிகளை ஏற்படுத்தும்.

நுரையீரலைத் தாக்குவதனால் நியூமோனியாக் காய்ச்சல் ஏற்படுகின்றது. வைரஸ் நோய்கள் பெரும்பாலானவற்றிற்கு மருந்துகள் கிடையாது. உடலில் ஏற்படும் எதிர்ப்பு சக்தி மூலமே நோய் குணமாகின்றது. நோயாளியின் அறிகுறிக்கு ஏற்பவே அவருக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பரவும் வைரஸ் காய்ச்சலுக்கான வைரஸின் இனத்தை அறிவதற்கு ஏற்ற வசதிகள் இங்கு இல்லையென்பதால் வைரஸினைக் கண்டுபிடிக்கமுடியாதநிலை நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அது ஏற்படுத்தும் குணம் குறிகளைக் கொண்டு எவ்வகையினைச் சேர்ந்தது என அனுமானித்து நோய்க்கான வைத்தியம் செய்யப்படுகின்றது. நோயை ஏற்படுத்துவதாகச் சந்தேகிக்கப்படும் வைரஸினைப் பற்றி பார்க்கையில், அதனைத் தடுப்பதற்கு தடுப்பூசியும் பயனளிக்கக்கூடியவகையில் இல்லை. எனவே, நோய் ஏற்படுவதைத் தடுத்தலே இப்போது எமது பிரதான கடமையாகும். ✪

# முப்பது விவசாயிகளுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்.மாவட்டத்தில் இருந்து விவசாயிகள் ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்த 30 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் விண்ணப்பித்த விவசாயிகளுக்கும், கடந்த 97ஆம் ஆண்டில் இருந்து ஓய்வூதியம் பெறாதோரில் கமத்தொழில் காப்புறுதிச்சபைத் தலைவர் இங்கு வருகைதந்தபோது விண்ணப்பித்தவர்களுக்கும் தற்பொழுது இந்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாக கமத்தொழில், கமநல காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் கே.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

உரிய விவசாயிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் தமக்குரிய காசோலைகளை கமத்தொழில், காப்புறுதி மாவட்ட அலுவலகத்தில் நேரில்வந்து காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

# பாதிப்புற்ற கடனாளிகளுக்கு விசேட வட்டிச் சலுகைத் திட்டம்

## மக்கள் வங்கி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.9

மக்கள் வங்கிக் கிளைகளில் கடன்பெற்று, யுத்த நடவடிக்கைளால் பாதிப்புற்றமையால், அதற்கு வட்டி செலுத்த முடியாமற்போன கடனாளிகளுக்கு 'விசேட வட்டிச்சலுகையினை' மக்கள் வங்கி வழங்குவதாக வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் சி.இளம்பிறைநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டமை காரணமாகவே வட்டிப்பணத்தை கிரமமாகச் செலுத்தமுடியாமற்போனதைக் கடனாளிகள் நிரூபிக்கவேண்டுமெனவும்-அவ்வாறு நிரூபிக்கப்படும் பட்சத்தில், பாதிப்பு நிலைக்கேற்ப வட்டிச் சலுகை அளிக்கப்படுமெனவும்-பிரதிப பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

இவ்வாறான 'விசேட வட்டிச் சலுகை' கடந்த டிசெம்பர் மாதம் வரை தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 40 பேருக்கு வழங்கப்பட்டதாகக் கூறிய பிரதிப் பொது முகாமையாளர், தொடர்ந்தும் காரணங்களின்றி வட்டித் தொகையைச் செலுத்தாதிருப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கி தயாராகிவருவதாகவும் தெரிவித்தார். (ஒ-9)

# நினைவை விட்டகலா தை 9

**4ஆவது தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று இடம்பெற்ற அவலத்தின் நினைவு தினம் இன்றாகும். அதனை நினைவுகூரும் முகமாக இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

வள்ளுவர் வானமறையும் கம்பன் கவிதைச் சிறப்பும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் மணியாரமும் இருக்கும்வரை சாகாவரம் பெற்றது தமிழ் என்பது புரட்சி கவிஞனின் வாக்கு.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யும் நோக்குடன் 1974ஆம் ஆண்டு தைத் திங்கள் யாழ்ப்பாணம் விழாக்கோலம் கண்டது. இளங்கோ இந்திரவிழா ஒன்றை சிலப்பதிகாரத்தில் காட்டினார். கரைகொண்ட பூம்புகார் பட்டினம் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட எழிலையும் முத்தமிழின் நர்த்தனத்தையும் கரிகாற்பெருவளவனின் நல்லாட்சி சிறப்பையும் சிலம்பு கொண்டு பறைசாற்றினார் இளங்கோவடிகள். யாழ்ப்பாணமும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இலக்கிய காட்சிகளைக் காட்டும் சிகரங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு ஒவ்வொரு தமிழ் மகனும் உளப்பூர்வமாகப் பங்கேற்றுக் கொண்ட திருவிழாவாக பெருவிழா கண்டது நான்காம் தமிழாராய்ச்சி மாநாடு.

யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிஞர்களின் ஆய்வரங்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் கலை நிகழ்வுகள் திறந்தவெளி அரங்க மேடையிலும் சிறப்பாக நடைபெற்றன.

தை 9 இறுதிநாள் விழா, வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபத்தை அசைக்கும் சனக்கூட்டம். விழா ஏற்பாட்டாளர்கள் இறுதி நிகழ்வை வீரசிங்கம் மண்டபத்தில் முன் முன்றிலில் நிகழ்த்துவதற்கு ஒழுங்கு செய்தார்கள். சூரியன் மறைந்த நேரம் சென்னை பேரறிஞர் நயினார் முகமது பாரதியின் வரிகளைக் கேட்பவர்களின் குருதியை உறையச்செய்யும் பாணியில் ஆவேசப்பேச்சு நிகழ்த்திக்கொண்டிருந்தார். அப்போது அப்பகுதி துப்பாக்கி வேட்டுக்களால் அதிர்ந்தது. மறுபக்கம் கண்ணீர்ப் புகைக்குண்டுகள். அன்றைய சிங்களப் பேரினவாத அரசு மொழியாராய்ச்சி மாநாட்டுக்கு தந்த பரிசுகள் இவைதான்.

நீகல் படமாளிகை பலரது உயிரைக் காத்தது. மின்சாரம் தாக்கி ஒன்பது பேர் மாண்டனர். இளம்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். கண் போனபோக்கில் மக்களின் கால்கள் போயின. புல்லுக்குளத்தில் புதையுண்டனர் சிலர். மாநாட்டின் இறுதியில் நிகழ்ந்துவிட்ட அவலங்களை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. தமிழ் இளைஞர்களின் நெஞ்சத்தை இந்நிகழ்வு கொழுந்து விட்டெரியும் நெருப்பாகியது. உரும்பிராய் சிவகுமாரன் போன்றவர்கள் உருவாகினார்கள். தமிழீழ போராட்டத்தின் வித்தாக அமைந்த நிகழ்வு இதுவே ஆகும்.

**செஞ்சொற்செல்வர்**
**இரா.செல்வவடிவேல்.**

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் காணப்படும் நினைவு தூண்கள் சொல்லிக்கொண்டிருக்கும் வரலாற்று உண்மையை இன்றைய இளைஞர்கள் இதயத் துடிப்பாக நினைவில் கொள்ளவேண்டும். நமது தமிழினப் போராட்டத்தின் வித்து இந்நினைவுச் சின்னமே ஆகும். ஒவ்வொரு தமிழ்மகனும் அரசியல் வேறுபாடின்றி தை 9 நினைவுகூரவேண்டும். பெரியவர்கள் இந்த நாளை - வரலாற்றை - இளைஞர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும். ✪


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 438 |
| திகதி | 07.01.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**4674200-4688930**

**வெற்றி இலக்கங்கள்** 17 21 32 50

**லக்கினம்** இடபம்




**ஜக்பொட் பரிசு ரூபா. 3,099,600/- வெல்லப்படவில்லை**

**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,815,250/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 320,529 | 10 | 3,205,290 |
| 2 இலக்கங்கள் | 29,320 | 20 | 586,400 |
| 1 இல + லக்கினம் | 29,080 | 30 | 872,400 |
| 2 இல + லக்கினம் | 2,693 | 100 | 269,300 |
| 3 இலக்கங்கள் | 784 | 500 | 392,000 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,099,600 | - |
| மொத்தம் | 382,482 | - | 6,085,390 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. **6,085,390/-**

தொடர் இல. 5668654க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 10ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்


**4675677-7-44**
**4675322-4-01**
**4685651-8-94**
**4676698-7-27**
**4682672-8-91**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

சஹீர்கான்



# வீ.பீ. கிண்ணக் கிரிக்கெட் தொடர்: இரண்டாவது சுற்று இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் வி.பி. கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்று இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்றைய போட்டியில் ஆஸ திரேலிய - இலங்கை அணிகள் மோதவுள்ளன.

சிட்னி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் முத்தையா முரளிதரன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடரில் இலங்கை அணி பங்குபற்றிய முதல் மூன்று போட்டிகளிலும் முரளிதரன் பங்குபற்றவில்லை. இம் மூன்று போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜேஸன் ஜிலெஸ்பி காயமடைந்துள்ளார். இதனால், இரு வார காலம்வரை ஓய்வுபெறுமாறு மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

ஷேன்வோன், கிளென் மெக்ராத் ஆகிய முன்னணிப் பந்துவீச்சாளர்களும் காயம் காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளனர். இதேவேளை, ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் மெக்ராத்திற்குப் பதிலாக சேர்க்கப்பட்ட அண்டி பிச்சலும் காயமடைந்துள்ளார் என அறிவிக்கப்படுகிறது. இதனால் இலங்கையுடனான போட்டியில் அவர் பங்குபற்றுவாரா என்பது சந்தேகத்திற்கு இடமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆஸி. அணியில் தற்போது பிரெட்லீ மாத்திரமே முன்னணி பந்துவீச்சாளராக விளங்குகிறார்.

ஆஸி. அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான டேரன் லெஹ்மனும் காயமடைந்துள்ளார். உடற்தகுதி சோதனையின் பின்னரே இன்று அவர் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொடரில் ஆஸ்திரேலிய அணி பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளது. இங்கிலாந்து 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றியீட்டியது. இலங்கை அணி மூன்று போட்டிகளிலும் தோல்வியுற்றது.

## உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரம வருமாறு:-

★ பிற்பகல் 3.45 மணி

பாரதி விளையாட்டுக்கழகம் எதிர் பொற்பதி விளையாட்டுக்கழகம.

★ மாலை 5 மணி

சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

(ஒ-10)

# விளையாட்டு

## சுனிதாராணிக்கு பதக்கங்களை வழங்க ஒலிம்பிக்குழு சம்மதம்

இந்திய தடகள வீராங்கனை சுனிதாராணி குற்றமற்றவர் என்று ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் அறிவித்தது. அவர்மீதான ஊக்கமருந்துக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் விலக்கிக்கொள்ளப்பட்டன.

பூசானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய தடகள வீராங்கனை சுனிதாராணி 1500 மீற்றர் தடகளப் போட்டியில் தங்கமும், 5000 மீற்றர் போட்டியில் வெண்கலப்பதக்கங்களையும் வென்றார். போட்டியின்போது, தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியதாக சுனிதாராணி குற்றம் சாட்டப்பட்டார். அதையடுத்து அவரிடம் இருந்து பதக்கங்கள் இரண்டும் பறிக்கப்பட்டன.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பாக மேல்விசாரணை நடத்திய சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில், சுனிதா குற்றமற்றவர் என சமீபத்தில் அறிவித்தது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கையாளப்பட்ட ஊக்கமருந்து சோதனை முறைகளின் தரம்பற்றியும் கடுமையாக விமர்சித்தது.

சுனிதாராணி குற்றமற்றவர் என்று ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தது. "இதனபடி சுனிதாராணி மீது சுமத்தப்பட்ட ஊக்கமருந்துக் குற்றச் சாட்டுகள் அனைத்தும் விலக்கிக்கொள்ளப்படுகின்றன.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர் வென்ற தங்கம் மற்றும் வெண்கலம் இரு பதக்கங்களும் திரும்ப வழங்கப்படுகின்றன.

இது தவிர, சுனிதா மீது ஊக்கமருந்துப் புகார் செய்த சியோல் பரிசோதனை நிலையம் மீதுநடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் அறிவித்துள்ளது.

# நியூசிலாந்துடனான தொடரில் இந்தியாவுக்கு முதல் வெற்றி

நியூஸிலாந்து அணியுடனான 5 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

சுமார் ஒரு மாத காலமாக நியூஸிலாந்து சுற்றுலாவில் இந்திய அணி பங்குபற்றுகிறது. இச்சுற்றுலாவில் இந்திய அணி வெற்றியீட்டிய முதலாவது சர்வதேசப் போட்டி இதுவாகும்.

நேற்று வெலிங்டன் நகரில் இப்போட்டி நடைபெற்றது. நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் 3 விக்கெட்டுகளையும் 3 ஓட்டங்களுக்குள் இழந்தது அவ்வணி. 51 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை இழந்தது.

அதன்பின் அந்ரே அடம்ஸ், பிரண்டன் மெக்கலம் ஆகியோர் தலா 35 ஓட்டங்களைக் குவித்தனர். 8மாத காலத்தின் பின்னர் சர்வதேச போட்டிகளுக்குத் திரும்பியுள்ள கெய்ன்ஸ் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

42.4 ஓவர்களில் 168 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது நியூஸிலாந்து அணி.

ஸஹீர்கான் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய.அணியில் முதலாவது பந்து வீச்சிலேயே கங்குலி ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து மொங்கியா, டெண்டுல்கர் ஆகியோரும் விரைவில் ஆட்டமிழந்தனர். நீண்ட நாள்களின் பின் போட்டிகளுக்குத் திரும்பிய டெண்டுல்கர், 10 பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு ஓட்ட மெதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

வீரேந்தர் ஷேவாக் 40 பந்து வீச்சுக்களில் 45 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் 30 ஆவது ஓவரில் 111 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுகளை இழந்திருந்தது இந்திய அணி.

எனினும் யுவராஜ்சிங்கும் வேகப் பந்து வீச்சாளரான ஸஹீர்கானும் 8 ஆவது விக்கெட்டுக்காக இணைந்து 45 ஓட்டங்களைப் பெற்றனர். யுவராஜ 54 ஓட்டங்களைப் பெற்றார். 43.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது இந்திய அணி.

ஸஹீர்கான் போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். 7 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தற்போது நியூஸிலாந்து 4-1 விகிதத்தில் முன்னணியில் உள்ளது.

6 ஆவது போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.


## வடகடல் நிறுவனம் - NORTHSEA LTD

## பொங்கல் காட்சி 2003

## விசேட கழிவு விலையில் மீன்பிடி வலைகள்

வடகடல் நிறுவனம், குருநகரில் உள்ள வலைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பின்வரும் வலைகள் 10.01.2003 தொடக்கம் 12.01.2003 வரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்படும் பொங்கல் காட்சி 2003 இல் 5% கழிவுடன் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

| வலை விவரம் | | | தற்போதைய விலை | கழிவுவிலை |
|---|---|---|---|---|
| 2 இழை | 1 1/8 | 330x1,500 | 1,750/- | 1,662/50 |
| 2 இழை | 1 3/4 | 125x1,500 | 1,000/- | 950/- |
| 2 இழை | 2 | 62x1,500 | 525/- | 498/75 |
| 2 இழை | 2 1/2 | 62x1,500 | 575/- | 546/25 |
| 2 இழை | 2 1/2 | 125x1,500 | 1,150/- | 1,092/50 |
| 4 இழை | 2 1/2 | 125x1,500 | 1,950/- | 1,852/50 |
| 4 இழை | 2 1/2 | 40x1,500 | 625/- | 593/75 |
| 4 இழை | 11m.m. | 100x2,000 | 1,300/- | 1,235/- |
| 9 இழை | 2 1/4 | 125x1,500 | 4,400/- | 4,180/- |
| 9 இழை | 10″ | 8x500 | 390/- | 370/50 |
| 9 இழை | 3 1/2″ | 125x1,500 | 5,400/- | 5,130/- |
| 21 இழை | 7″ | 60x500 | 4,300/- | 4,085 |

(C/2594)

- தலைவர், வடகடல் நிறுவனம்.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பிலுள்ள தொழில் ஸ்தாபன நிர்வாக இயக்குநர் வீட்டில் பணிபுரிவதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**முகாமையாளர்,**
**மஸ்கன்ஸ் லிமிடெட்,**
**35, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (12971)

## படிவம்

முதலாந் தரத்திற்கு - 2003 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

**BHARATHI PATHIPPAKAM**
OFF-SET&LETTER PRESS PRINTERS,
430, K.K.S.ROAD, JAFFNA.
PHONE : 021-3081

(சி25903)

## வீடு விற்பனைக்குண்டு

வளாக வீதி, திருநெல்வேலி (யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்) என்னும் முகவரியில் 3 பரப்புக்காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

**வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
இல.52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (c/25894)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் ஓட்டோ சங்கத் தலைவர் **திரு.வீ.இராசகுமார்,** ஓட்டோ சாரதி **திரு.வீ.ஜெயக்குமார்** ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி வீரபாகு மகேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களது துன்பத்திலும் பங்குகொள்கின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- ஓட்டோ சங்க நிர்வாகமும் உரிமையாளர்களும் சாரதிகளும்.

*யாழ்ப்பாணம்.* (C/25900)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் **திரு.M.சிவபாலன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி முருகேசு கனகேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*பாதுகாப்புத் திணைக்களம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(12981) பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

குடாநாட்டில் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளில்

# சுகாதாரத்துறை, மாநகரசபை கூட்டாக செயற்பட இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.9

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகமும் யாழ்.மாநகரசபையும் ஒன்றிணைந்து குடாநாட்டில் சுகாதாரச் செயற்பாடுகளை கூட்டாக முன்னெடுக்கவுள்ளன. இதற்கான இணக்கப்பாடு, நேற்றுப்பிற்பகல் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த உதவிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் (பொதுச்சுகாதார சேவை) டியூலா டி சில்வா வெளியிட்ட ஆலோசனைக்கமைவாகவே இம்முடிவு எடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக யாழ்.குடாநாட்டிலுள்ள உணவுச்சாலைகளின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை இவ்விரு அமைப்புகளும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

(ஐ-9-139)

# துறைமுக பணியாளர்களுக்கு தேநீர் வழங்குவது நிறுத்தம்!

வடமராட்சி,ஜன.9

பருத்தித்துறை இறங்குதுறையில பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு தேநீர், பணிஸ் வழங்குவது நேற்று முன்தினம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1994 ஆம் ஆண்டு முதல இறங்குதுறைத் தொழிலாளர்களுக்கு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியால் தேநீரும் பணிஸூம் வழங்கப்பட்டு வந்தன.

முதலில் தொழிலாளர்களுக்கு பணிஸ் வழங்குவது நிறுத்தப்பட்டு பின்னர் தேநீருக்கான தேயிலை வழங்குவது நிறுத்தப்பட்டு இறுதியாக அதற்கென வழங்கப்பட்ட சீனியும் நிறுத்தப்பட்டுவிட்டது என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-173)

## கலைப்பீட மாணவர் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.09

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு 2002 - 2003 கல்வியாண்டில் அனுமதிபெற்றுள்ள புதிய மாணவர்களுக்கான அறிமுகப்படுத்தல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைலாசபதி கரையரங்கில் கலைப்பீடாதிபதி தலைமையில் நடைபெறும்.

(ஐ-ரி)

## கையடக்க தொலைபேசி கண்டெடுப்பு

பலாலி,ஜன.9

கடந்த 2ஆம் திகதி விமானம் மூலம் பயணம் செய்த பிரயாணி ஒருவரின் கையடக்கத் தொலைபேசி புன்னாலைக்கட்டுவன் ராணுவ சோதனைச் சாவடியில் தவறவிடப்பட்டு ராணுவப் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்தொலைபேசியின் உரிமையாளர் ஆதாரங்களைத் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## உரும்பிராய் சிறுமி மர்மமரணம்:

# பாடசாலைக் காவலாளி தொடர்ந்தும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஜன.9

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவியின் மர்மமரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில், பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட பாடசாலைக் காவலாளியைத தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்ட பாடசாலைக் காவலாளியான தில்லையம்பலம் ரமணன் (வயது 21) நேற்று மன்றில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து, இவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - கடந்த 31 ஆம் திகதி மரபணுப் பரிசோதனைக்காக றாகம பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரஸ்தாப மாணவியின் உள்ளாடையும், சந்தேகநபரின் இரத்தமாதிரியும் தமக்குக் கிடைத்துள்ளதாக வைத்திய கலாநிதி மாயா குணசேகரா கடிதமூலம் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கை இன்னும் சில தினங்களில் மன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ-10)

## கால்கோள் விழா

மண்டைதீவு,ஜன.9

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-88)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், தரம் இரண்டு மாணவர்கள் வரவேற்கும் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

(எ-ரி)

## தமிழர் ஆசிரியர் சங்க கூட்டம் பற்றிய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வலயமட்ட அமைப்புக்களுக்கான கூட்டங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமராட்சி வலயத்துக்கான கூட்டம் 13ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் -

யாழ்வலயக் கூட்டம் 14ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் -

வலிகாமவலயக் கூட்டம் 16ஆம் திகதி வியாழக்கிழமை இராமநாதன் கல்லூரியிலும் - நடைபெறும்.

கூட்டங்கள் தினமும் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சி.து.பொ.செயலர் த.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

(எ-ரி)

## நூல் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய்,ஜன.9

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'தமிழ் இலக்கணப் பூங்கா' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோப்பாயிலுள்ள யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், ஆசியுரையை கலாநிதி வித்துவான் க.சொக்கலிங்கமும் வாழ்த்துரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும் நிகழ்த்துவர்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா-ஜெயராசா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.சிவலிங்கராசா, நா.குழந்தைவேலு ஆகியோர் ஆய்வுரையை நிகழ்த்துவர். தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன் சிறப்புரை நிகழ்த்துவார்.

(எ-135)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





திருமதி **இரத்தினம் மகேஸ்வரி**
மலர்வு: 03.10.1931
உதிர்வு: 22.12.2001

செல்வி **இரத்தினம் விக்கினேஸ்வரி**
மலர்வு: 24.12.1979
உதிர்வு: 15.12.2001

திதி: 09.01.2003 (வியாழக்கிழமை)

பாசம் மறந்து தேசம் துறந்து
பாடிப் பறந்திட்ட பாசமலர்களே !
ஆண்டென்ன ஆண்டாண்டு மறைந்திடினும்
மீண்டெமைக்காண மீளவும் வருவீரோ? உம்
வ்ரவை எதிர்பார்த்து விழிமேல் விழிநீரில் கரையும்....

- உற்றார், சுற்றம், உடன்பிறப்புகள்.

*குறிப்பு:* எம்மை விட்டுப்பிரிந்த தாய், சேய் இருவரதும் ஓராண்டு நிறைவை 09.01.2003 வியாழனன்று சுதுமலை தெற்கு, மூணாமலை வீதி, மானிப்பாயிலுள்ள எமது இல்லத்தில் நினைவு கூருமுகமாக அனைவரையும் வருகைதரவேண்டி, அன்புடன் அழைக்கின்றோம்.

*மூணாமலை லேன்,*
*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (12933)
ஆசிரியர்
ஆ.கந்தசாமி குடும்பத்தினர்.

# ஈர விழிகளுடன் ஓராண்டு

மலர்வு
12 - 02 - 1924



உதிர்வு
21 - 12 - 2001

## திருமதி இளையதம்பி தெய்வானைப்பிள்ளை

(சின்னையா)

திதி : 09.01.2003 வியாழக்கிழமை

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம். ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அம்மம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே என்று நிதமும் துடிக்கின்றேன். நீங்கள் இருந்த இடமெல்லாம் உங்கள் விம்பம்தானே தெரிகிறது அம்மம்மா. மீண்டொருக்கால் வந்து அன்பு மொழி கூறமாட்டீர்களா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி!

என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு பேரன் **வேணுகானன்,**
பேர்த்தி **வேணுஹா.**

*கெருடாவில்,*
*தொண்டமானாறு.* (C/25921)

## காணாமற் போய்விட்டது

யாழ்நகரில் இருந்து முகமாலைக்குச் செல்லும் வழியில் 6.1.2003 திங்கட்கிழமை ஒரு தொகைப் பணம் பஸ்ஸில் காணாமற் போய்விட்டது. இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**சண்முகம் குகதாஸ்**
**பருத்தித்துறை வீதி,**
**வரணி.** (12975)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சூர்யா, லைலா, ஸ்னேகா நடித்த
உன்னை நினைத்து
கா.நே. - 11.00, 2.45, 6.00
10.01.2003 முதல்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி மட்டும்
SPIDER MAN
(C/25777)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், கிரண், மீனா நடிக்க
வில்லன் (ரீலஸ்)
*குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
காட்சிகள்: 11.00, 3.00 மணி
விசேட காட்சிகள்
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்)
(12974)

ராஜா யாழ்ப்பாணம்.
முரளி, ராதிகாசௌத்திரி,
வடிவேலு, மணிவண்ணன்
நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30
(C/25781)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் இராசதட்சம்

*(ஓய்வுபெற்ற நீர் விநியோக மேற்பார்வையாளர்)*

சுழிபுரம், பறாளாய் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் இராசதட்சம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - வேதவனம் தம்பதிகளின் அன்பு மகனும் சிதம்பரப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் மீனாம்பாளின் அன்புக் கணவரும் இராஜமோகனின் (கனடா) அன்புத் தந்தையும் தேவசுந்தரியின் அன்பு மாமனாரும் கயிலாஸ், கஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருமதி இரத்தினம் முதலியார், விசுவநாதன் காலஞ்சென்ற திருமதி தெய்வானைப்பிள்ளை மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் திருமதி பொன்னம்மா மணியம் (கோலாலம்பூர்), காலஞ்சென்ற முருகவேள் மற்றும் இராமச்சந்திரன், அருணாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் உலகநாதன் (லண்டன்), ஞானகுரு, குணாளன், சுந்தரராஜன் (ஜேர்மனி), ஆனந்தன், வினோதினி, முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் மனோகரன் (பிரான்ஸ்), புஸ்பராணி, மைக்கல் (கோலாலம்பூர்), புஸ்பநாதன் ஆகியோரின் பெறா தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-01-2003) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்.* (C/25923)
தகவல்:-
மீனாம்பாள்
(மனைவி)

## கந்தையா செல்வரத்தினம்

விதானையார் வீதி, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் அகாலமரணமடைந்துள்ளார்.

இவர் கந்தையா சின்னப்பிள்ளையின் அன்பு மகனும், கமலாம்பியின் அன்புக் கணவரும் நடராசா, சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேமலதா (ஜேர்மனி), மேனகா (ஜேர்மனி), சந்திராகா (கனடா), ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2003) வியாழக்கிழமை 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் இருபாலை செக்கடி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விதானையார் வீதி,*
*இருபாலை.* (12992)
தகவல்:
க.அருளானந்தம்
மைத்துனர்

## கந்தையா ஆறுமுகம்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று (08.01.2003) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருந்தவராஜா சாந்திமாலா (சுவிஸ்), வசந்திமாலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பத்மநாதன் (சுவிஸ்), மதனராஜா ஆகியோரின் மாமனாரும் சபீதா (சுவிஸ்), சபேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை மத்தி இந்து மயானத்திற்கு நேற்று (08.01.2003) புதன்கிழமை எடுத்துச்செல்லப்பட்டு, தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.* (12991)
தகவல்:
வசந்திமாலா (மகள்),
மதனராஜா (மருமகன்).

## டேவிட் ரஞ்சிதம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் ரஞ்சிதம் நேற்று (08-01-2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான அ.டேவிட் தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் குணரத்தினம், சுகிர்தம், ஆனந்தராஜா, அன்பு, இன்பம், புனிதம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராசு மற்றும் அரியரட்ணம், செலஸ்ரின், தேவா, மாலினி ஆகியோரின் மைத்துனரும் லூர்த்து, ரீற்றா, பபா, ஜெறீம், பசில், சசி, அகிலன், தயாளன், குணாளன், சௌதா ஆகியோரின் அன்பு மாமனாரும் மக்ஸி, தர்மினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09-01-2003) வியாழக்கிழமை மாலை 5மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44, பழைய பூங்காவீதி,*
*யாழ்ப்பாணம்.* (12989)
தகவல்:-
ஆனந்தராசா (சகோதரா)

அத்துருகிரிய விசாரணை ஆணைக்குழு விவகாரம்:

# பொலீஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி அவசர கடிதம்

கொழும்பு,ஜன.9

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இராணுவ புலனாய்வுப் பிரிவின் இரகசிய பாதுகாப்புப் பிரிவு சுற்றிவளைக்கப்பட்டது குறித்து விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஆணைக் குழுவுக்குத் தேவையான பொலீஸ் அதிகாரிகளை உடனடியாக நியமிக்குமாறு பொலீஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவுக்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவுக்கு பொலீஸ் அதிகாரிகளை நியமிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இதுவரையில அது நிறைவேற்றப்படவில்லை என்று ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்படாததால் மேற்படி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக, தேவையான பொலீஸ் அதிகாரிகளை உடனடியாக நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## கரும்புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்த கருத்துக் குறித்து நேற்று மாலை தாய்லாந்தில் நொக்கம் பத்தொம் நகரில் வைத்து அவரிடம் கேட்ட போதே பாலசிங்கம் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கரும்புலிகள் அணி, ஒரு தனித்துவமான வேறுபிரிவு அல்ல. அது எமது இராணுவக் கட்டமைப்பின் மையமான பகுதி. அதைக் கலைக்கக்கோருவது அபத்தமானது; எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாதது.

எங்கள் ஆயுதங்கள் எங்கள் மக்களின் சொத்து என்று ஏற்கனவே தெரிவித்துள்ளேன். 17ஆயிரம் போராளிகள் தங்கள் உயிரைக் கொடுத்துக் காத்த மக்களின் பலம் அது. கரும்புலிகளும் அவ்வாறே.

எமது மக்களுக்கு சுதந்திரம் - பாதுகாப்பு - கிட்டாமல் இந்த ஆயுதங்களைக் கீழே போடும்படி கேட்பதோ அல்லது கரும்புலிகள் அமைப்பு போன்றவற்றை கலைக்கக் கோருவதோ எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை - என்றார் பாலசிங்கம்.

### பீரிஸ் கருத்து

ஜனாதிபதியின் கருத்துக் குறித்து அரசுத் தரப்பின் பேச்சுக்குழுவின் தலைவர் பேராசிரியர், ஜி.எல்.பீரிஸிடம் நேற்றுமாலை கேட்டபோது அவர் கூறியதாவது:-

இத்தகைய சமாதான முயற்சிகளில் ஆயுதங்களைக் களைதல், படைகளைக் கலைத்தல் போன்றவை தொடர்புபட்டவைதான். ஆனால், அவை சரியான நேரத்தில் - உகந்த சமயத்தில் - செய்யப்படவேண்டும். அரசியல் தீர்வுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் அது இடம்பெற முடியும். அதுதான் இத்தகைய பிணக்குகள் பல நாடுகளில் தீர்க்கப்பட்ட போது கிடைத்த அனுபவம். தென்னாபிரிக்கா, வட அயர்லாந்து போன்ற இடங்களில் எல்லாம் அப்படித்தான் நடந்தது.

ஆகவே, இந்த விடயத்தை சரியான சமயத்தில் எழுப்புவதுதான் பொருத்தமானது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த சமாதான முயற்சிகளை பிரத்தியேகமான முறையில் கையாண்டதால்தான் இது இவ்வளவு தூரம் வெற்றிகரமாக முன்னேறியிருக்கின்றது. மெதுவாகவும் ஸ்திரமாகவும் (Slow and Steady), அதேசமயம் படிப்படியாக (Step by Step) அவர் நடவடிக்கைகளை எடுத்தார். உரிய காலத்தில் - சரியான நேரத்தைக் கணக்கிட்டு - நடவடிக்கைகளை மேற்கொள்ளவேணடும். காலம் முந்தி கோரிக்கைகளை எழுப்புவதோ, எல்லாவற்றையும் ஒன்றாகச் செய்ய முயற்சிப்பதன் மூலமோ எதையும் சாதிக்கமுடியாது - என்றார் பீரிஸ். (ஐ)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பட்டது என்றும் -

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

லண்டன் திரும்புவதற்கு முன்னர் பாலசிங்கம் மேலும் இரு தினங்கள் தாய்லாந்தில் தங்கியிருப்பார் என்றும்-

அப்போது அவர் அங்கு ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோரி கோவா குச்சியை சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## வலய...

(முதலாம் பக்கத் தொடர்சி)

வலிகாமம் வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றிய வீ.இராசையாவின் இடமாற்றத்துக்கு வடமராட்சி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் எஸ்.வேணுகோபால் நியமிக்கப்படலாம் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-7)

# வலி.வடக்கு மறியற்போர் தொடர்கிறது

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிக்குமாறு கூறி, வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் முன்னால் இடம்பெற்ற மறியற் போராட்டம் காரணமாக நேற்றையதினம் மூன்றாவது நாளாகவும் பிரதேச செயலகத்தில் நாளாந்தப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன. இன்று நான்காவது நாளாகவும் மறியற்போராட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வலி.வடக்கு பொதுஅமைப்புகள் ஒன்றியத்தினால் சுழற்சிமுறையில் இந்த மறியற் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுவது தெரிந்ததே. (எ-86)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

டிருந்த இவர், இங்கிருந்து ஏ-9 வீதி வழியாக சிறைக்காவலர்களால் அழைத் துச் செல்லப்பட்டிருந்தார்.

இதேவேளை -

மாங்குளத்துக்கு அப்பால் மன்னகுளம் பகுதியில் வைத்து முகமூடி அணிந்த ஏழுபேர் சிறைச்சாலை வாகனத்தை வழிமறித்து இக்கைதியைக் கடத்திச் சென்றனர் என்று சிறைச்சாலை தலைமையக வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்திருக்கின்றன. கடத்தப்பட்டவர் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தலைமையகத்தின் பணிப்பின்பேரில் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருப்பதாக யாழ்சிறைச்சாலை அத்தியட்சகர் சிவசுந்தரம் தெரிவித்தார்.(ஐ)

## ஹக்கீமை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பட்டுப் போயிருப்பது பரிதாபத்துக்குரியது.(Tragedy) இந்தக் கட்டத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்த சரியான தலைமை இல்லாமல் போனமை துரதிர்ஷ்டவசமானது. "உங்கள் கட்சியை ஒழுங்குபடுத்துங்கள். (Put your house in order) அதன் மூலம் சமாதானப் பேச்சுக்களிலும், அரசியல் விவகாரக் குழுவிலும் பங்குபற்றுவதற்குத் தகுதியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஸ்தாபியுங்கள்." - என்று ஹக்கீமிடம் கூறியுள்ளோம் இனி அவரைப் பொறுததது.

*கேள்வி:-* ஹக்கீமை நீங்கள் தனியாகச் சந்தித்தீர்களா?

*பாலா:-* இல்லை, இல்லை. நாங்கள் ஹக்கீமைச் சந்தித்து பேசலாம். ஆனால் சரியான பிரதிநிதித்துவம் வரவேண்டும். அது முஸ்லிம்களாலும் தமிழர்களாலும் ஏற்கப்படுவதாக இருக்கவேண்டும்.

முஸ்லிம்களின் துண்டுபட்டிருக்கும் பல பிரிவுகள், அணிகளை ஒன்றுதிரட்டி இணைத்து அவற்றின் ஆதரவைப் பெற்று தலைமைத்துவததை அவர் உறுதிப்படுத்தினாலேயொழிய, அரசுத் தரப்பின் பிரதிநிதியாக வந்ததற்காக அவரை முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. (ஐ)

# ஆலயத் தேரிலிருந்த சிற்பங்கள் அபகரிப்பு!

சண்டிலிப்பாய்,ஜன.9

சுழிபுரம் - பறாளாய் விநாயகர் ஆலயத்தில் உள்ள பழைமைவாய்ந்த தேரிலிருந்த கலையம்சம் பொருந்திய மரச்சிற்பங்கள் இரவு வேளையில் திருட்டுப் போயுள்ளன.

சுமார் 400 வருடங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தேர் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சித்திரத் தேரில் கலையம்சம் பொருந்திய ஏராளமான மரச்சிற்பங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் இந்த மரச் சிற்பங்கள் பெயர்த்து எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இத்திருட்டுக் குறித்து மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கலைப் பொருள்களை திருடி விற்கும் கும்பலே இத்திருட்டை நடத்தியதாகக் கருதப்படுகிறது. (ஒ-135)

## விரைவாக மீள்குடி....

(முதலாம் பக்கத் தொடர்சி)

★ அடுத்த (ஐந்தாவது) சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை தாய்லாந்திலும் ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை மார்ச் மாதம் 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை ஜப்பானிலும் நடத்துவதற்கு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. ஏழாவது சுற்றுப் பேச்சுக்களை ஏப்ரல் 29முதல் மே 2வரை நடத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது எங்கு நடைபெறும் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. பெரும்பாலும் அது தென்னாபிரிக்காவில் நடக்குமெனத் தெரிகிறது.

எட்டாவது சுற்றுப் பேச்சு ஜூன் மாதத்தில் ஜப்பானில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை ஒட்டி நடைபெறும்.

★ பெப்ரவரியில் நடைபெறும் ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் அடிப்படை மனித உரிமை விடயங்கள் குறித்து அதிகம் பேசப்படும். சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் பிரசித்தி பெற்ற அடிப்படை மனித உரிமை விவகார பிரமுகருமான இயன் மார்ட்டின் அடுத்த சுற்றின் நான்கு நாள் பேச்சுக்களிலும் பங்குபற்ற இணக்கம் தெரிவித்திருக்கின்றார். (ஐ-4)

## காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது பிரதமரின் செயலாளருடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சைச் சேர்ந்த பாலசந்திரா, பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் கரலியத்த ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

காணமற்போனோரின் பிரதிநிதிகளுடன் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கூட்டணிப் பிரமுகர் எஸ்.பத்மநாதன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

96/97 ஆம் ஆண்டு காலப்பகுதியல் குடாநாட்டில் படைத்தளபதியாக பதவி வகித்தவரும் - தற்போது ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராகக் கடமைபுரிபவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை அழைத்து புலன்விசாரணை செய்தால் காணாமற்போனோர் என்ன ஆனார்கள் என்ற விவரங்கள் தெரியவரும் என்று பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள், பிரதமரின் செயலாளரிடம் சுட்டிக்காட்டினர்.

அதனை ஏற்றுக்கொண்ட பிரட்மன் வீரக்கோன், விரைவில் ஜானக பெரேராவை ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கு வரவழைத்து, அவரிடம் விசாரணை நடத்தி அதன் மூலம் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்படுவோரை சட்டத்தின் முன்நிறுத்துவது என்றும் -

காணாமற்போனார் தொடர்பாக அடுத்த இருமாத காலத்துக்குள் இறுதி முடிவுகள் அடங்கிய அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அதன்பின்னர் மீண்டும் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடுவதாகவும் - தெரிவித்தார்.

காணாமற்போனார் தொடர்பாக இதுவரை காலமும் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் வழங்கிய வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை எனவும் -

பல தடவைகள் நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவுகள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை எனவும் -

பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதுகுறித்து பிரதமருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரட்மன் வீரக்கோன் கூறினார்.

இந்தச் சந்திப்பு முடிவடைந்ததையடுத்து பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணம் திரும்புகின்றனர். (ஐ-?)

## கரும்புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

வி.பியுடன் கூட்டுச் சேரவேண்டும்.

இந்த நாட்டில் நான்கு சக்திகள் உள்ளன. ஐதே.க., பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகளே அவையாகும்.

அரசு - புலிகள் கூட்டுச் சேர்ந்தால் ஜே.வி.பியுடன் பொ.ஐ.முன்னணி கூட்டுச் சேரவேண்டும். இல்லாவிடின் அரசுடனும், புலிகளுடனும் போட்டி போடமுடியாது.

ஜே.வி.பியுடன் பொ.ஐ.முன்னணி ஒன்றுசேருவதில் என்ன தவறு இருக்கிறது? இவ்விரு கட்சிகளும் ஒன்று சேருவது சமாதானத்திற்கு எதிரான செயல் அல்ல - என்றார் ஹரிம் பீரிஸ். *(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)*

ENGLISH
SPOKEN AND GRAMMAR
By : BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம் : 11.01.2003 (சனி)
நேரம் : காலை 10.30
(பழைய நேரம்)
சனி, ஞாயிறு வகுப்புகள்
இடம் : கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
(12932)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
2004 A/L
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம்: 9.1.2003 பி.ப 3.00
சந்தைப் பொருளாதாரம்
2005 A/L கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 9.1.2003 பி.ப. 3.30
அளவையியல் : திரு. மோகன்

NEW SCIENCE COLLEGE
JAFFNA
2005
பௌதிகவியல்
திரு. கருணாநிதி
B.Sc. (Spl.), Dip.in Ed.
பிரிவு I - Sat., Sun. - 8.00 - 9.00
பிரிவு II - Sat., Sun. 10.00-11.00
ஆரம்பம் 11.01.2003
(12954)

விற்பனையாகின்றன!
அஷ்டலக்ஷ்மி தமிழ் டயறிகள் – 2003
அஷ்டலக்ஷ்மி தமிழ் டயறிகளில் பஞ்சாங்க விவரங்கள்,
மனையடி சாஸ்திரம், விடுமுறை தினங்கள்
மற்றும் பல விவரங்களும் உள்ளன.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
கிடைக்கும் இடங்கள்:
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், கைதடிச் சந்தி.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.
(12928)

வடமராட்சி மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!
EXPO AVIATION இன்
வடமராட்சி முகவராக
S.T.R. COMMUNICATION ஐ
நியமித்துள்ளார்கள்.
விமான டிக்கெட்டுக்களை
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு:
S.T.R. COMMUNICATION
Thikkam Market,
Thikkam.
ஒருவழிப் பாதை 2425/=
இருவழிப் பாதை 4550/=
(12936)

திருமறைக் கலாமன்றம்
யாழ்ப்பாணம்
திருமறைக் கலாமன்றத்துடன்
ஜேர்மனி 'ஹல்ஸ்பேக்' நாடகக் குழுவினர் இணைந்து நிகழ்த்தும்
அரங்க நிகழ்வுகள்
"கண்ணுக்குத் தெரியாத சுவர்" (மௌன நாடகம்)
ஜேர்மனி இசைக் கலைஞர்கள் நிகழ்த்தும்
இசை நிகழ்வு
சிறப்பு நிகழ்ச்சியாக
ஜேர்மனி 'ஹல்ஸ்பேக்' நாடகக் குழுவினரின்
"கனவுப் பெட்டகம்" (நாடகம்)
(Black Theatre)
நாள் : 10.01.2003 வெள்ளிக்கிழமை.
நேரம் : பிற்பகல் 3.00 மணி.
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- திருமறைக் கலாமன்றம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2393
web site : www.cpateam.org
E.mail : cpajaffna@eureka.lk
பிரவேசம் இலவசம்!
(C25897)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.